அவனுடைய வலது கையானது பீடத்தின் மீது (ஊன்றி) வைக்கப்பட்டாவது, தடியை வைத்துக் கொண்டாவது இருக்கவேண்டும். (6)

வாமஹஸ்தேந புஷ்பம் வா தண்டம் வாபி வா ।
[வாமஹஸ்தே புஷ்பம் வா தண்டம் தாரயேதபி வா ।]
ஶ்வேதவர்ணஸமாயுக்தஃ தஸ்யா(ஃ)புத்ரம் வ்ருஷாஹ்வயஃ ॥

ஸுஶோபாநிர்யௌ(ஸுயள)வநாட்யா ச ஸுமுகீ(வீ)
ஸுலோசநா ।
பீடோபரி ஸ்திதம் வாமஹஸ்தம் ஸவ்யம் ஸபுஷ்பகம் ॥
[பீடோபரி ஸ்திதம் வாமம் ஹஸ்தம் ஸவ்யம் ஸபுஷ்பகம் ।]

பீடோபரி ஸ்திதம் ஸவ்யம் பாதம் வாமம் ப்ரலம்பிதம் ।
க்ருஷ்ணவர்ணஸமாயுக்த:(க்தா) ஸர்வாபரண பூஷிதம்(தா)
பவேத் ॥ ௮ ॥

யமுநே(நை)வ ஸா தா தஸ்யா(ஃ) ஸவ்யபார்ஶ்வ
ஸுஸ்திதம்(தா) ।

இடது கையானது, புஷ்பம் அல்லது தண்டத்தை தரித்திருக்கவேண்டும். இவன் வெண்மை நிறமானவன். இவனுக்கு வ்ருஷன் என்று பெயர். இவன், ஜ்யேஷ்டா தேவியின் புதல்வனாவான். (7)

ஜ்யேஷ்டா தேவியின் இடது பக்கத்தில், சிறந்த யௌவனப் பருவமும், அழகிய முகமும், அழகான கண்களும் உடைய, யமநா என்னும் பெயரையுடைய ஜ்யேஷ்டா தேவியின் மகளைக் கல்பிக்கவேண்டும். அவளுடைய இடது கையானது பீடத்தின் மீது (ஊன்றி) வைக்கப்பட்டும், வலதுகை புஷ்பத்தை வைத்துக் கொண்டும் இருக்கவேண்டும். வலதுகால் பீடத்தின்மேலே வைக்கப்பட்டும் இடதுகால் தொங்கவிடப்பட்டுமிருக்க வேண்டும். இவளுடைய நிறம், கருப்பு நிறமாகும். இவள் ஸகல ஆபரணங்களையுமணிந்திருப்பவளாவாள். இந்த

𑌸𑌵𑍍𑌯𑌷𑍍𑌠𑌾 𑌸𑌾 𑌚 𑌦𑍇𑌵𑍀𑌕(𑌸𑍍𑌯𑌾𑌸) 𑌕𑌨𑌿𑌷𑍍𑌠𑌂 𑌦𑌶-
𑌤𑌾𑌲𑌕𑌮𑍍 ‖ ௰ ‖

𑌇𑌤𑌿 𑌜𑍍𑌯𑍇𑌷𑍍𑌠𑌾𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌸𑌂𑌪𑍂𑌰𑍍𑌣𑌮𑍍 ‖

‖ 𑌅𑌥 𑌨𑌨𑍍𑌦𑌿𑌕𑍇𑌶𑍍𑌵𑌰𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ‖

𑌅𑌥 𑌸𑌂𑌕𑍍𑌷𑍇𑌪𑌤𑍋 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑍇 𑌨𑌨𑍍𑌦𑌿𑌕𑍇𑌶𑌵𑌿𑌧𑌿𑌕𑍍𑌰𑌮𑌮𑍍 ।
𑌰𑍁𑌦𑍍𑌰𑌾𑌂𑌶𑌸𑌂𑌭𑌵𑍋 𑌦𑍇𑌵𑌃 𑌨𑌨𑍍𑌦𑍀𑌶𑌇𑌤𑌿𑌨𑌾𑌮𑌕𑌂
(𑌇𑌤𑌿 𑌕𑌥𑍍𑌯𑌤𑍇) ‖ ௧ ‖

𑌗𑌣𑍇𑌶𑌾𑌵𑌰𑌣𑍇 𑌸𑍌𑌮𑍍𑌯𑍇 𑌪𑍂𑌜𑌯𑍇𑌤𑍍𑌸 𑌯𑌥𑌾
𑌭𑌵𑍇𑌤𑍍 ।
(𑌗𑌣𑍇𑌶𑌾𑌵𑌰𑌣𑍇 𑌸𑍌𑌮𑍍𑌯𑍇 𑌪𑍂𑌜𑌯𑍇𑌤𑍍𑌤𑍁 𑌯𑌥𑌾𑌵𑌿𑌧𑌿 ।)
𑌤𑌤𑍍𑌰𑍈𑌵 𑌯𑌾𑌵𑌦𑌰𑍍𑌶𑌂 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌿𑌨𑌨𑍍𑌦𑍀𑌶𑌸𑌂𑌭𑌵𑍇 ‖ ௨ ‖

𑌤𑌸𑍍𑌯 𑌮𑌾𑌨𑌂 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌂 𑌚 𑌉𑌨𑍍𑌮𑌾𑌨𑌲𑌮𑍍𑌬𑌮𑌾𑌨𑌕𑌮𑍍 ।
𑌉𑌪𑌮𑌾𑌨(𑌚𑌿𑌹𑍍𑌨𑌂)𑌵𑌰𑍍𑌣𑌭𑍇𑌦𑌂 𑌚 𑌯𑌥𑌾𑌵𑌤𑍍 𑌸𑌂𑌭𑌾-
𑌷𑌿𑌤𑌮𑍍 ‖ ௩ ‖

யமனையுடைய மானமும், விருஷ்ணுடைய மானமும் கனிஷ்ட தச தாலமாகும். (10)

ஜ்யேஷ்டா லக்ஷணம் முற்றும்.

நந்திகேசுவர லக்ஷணம்.

இனி, சுருக்கமாக, நந்திகேசுவரரின் லக்ஷணத்தைக் கூறுகிறேன். நந்திகேசுவரர், ருத்ராம்சத்திலே உண்டானவராவார். அவரை கணேசாவரணத்தில் வட பாகத்தில் வைத்து பூஜிக்கவேண்டும். ... ... நந்திகேசர் என்று கூறப்படுகிறது. (2)

அந்த நந்திகேசருடைய மானம்-ப்ரமாணம்-உன்மானம்-லம்பமானம்-உபமானம்-இவைகளையும், சின்னம் (அங்க அடையாளம்) நிறத்தின் பேதம், இவைகளையும் பரமேசுவரனே கூறியிருக்கிறார். அவ்விதமே ஸரஸ்வதீ

ததா ஸாரஸூத்ரே சைவ வக்ஷ்யே விதிநாऽதுநா ।
விமாநம் பூர்வவத் க்ருத்வா ஸப்ரமாணம் யதா
ததா ॥ ௪ ॥

ஸப்ரமாணக்ருதாம்வாம் ஸஹஸ்ராக்ஷேண நைவ வா ।
ப்ராஸாதத்வாரஸவ்யே து யதாக்ஷா(க்ஷே)த்ரம் யதா
ஸ்திரம் ॥ ௫ ॥

அதவா பூர்வோத்திஷ்டே மண்டபே வா விதீயதே ।
தத்ர ஸம்ஸ்தாபயேச்சைவ பஞ்சாநநம் விதீயதே
(விதாநத:) ॥ ௬ ॥

ப்ரமோதம் மாநம் மாத்ராங்குலம் மாநம் ஸப்தாதி ப்ரதி
ரோதயேத் ।
பூஜாம்ஶம் த்ரிகுணோத்தமம் காயபூர்வம் பஞ்சஸா-
ஜ்ஜம்(ஸகம்) ॥ ௭ ॥
*மாநைகம் ஸாமஸாயா து உத்தமாதி த்ரயம் த்ரயம் ।

தேவியும் கூறியுள்ளார். அதை விதியுடன் கூறுகிறேன்.

(நந்திகேசுவரரை) முன்பு கூறப்பட்டிருக்கும் அளவுடன் விமாநத்தைக் கல்பித்து அதில் வைக்கவேண்டும்.

... ...

தநாதிகளின் பொருட்டு (தநம்-தானியம் முதலியவைகள், விருத்தியடைவதற்காக) கர்பகிருஹ வாயிலுக்கு வலது பக்கத்தில் ஸ்திரமாக பிரதிஷ்டை செய்ய (வைக்க) வேண்டும். அல்லது, முன்பு கூறப்பட்ட இடத்திலாவது மண்டபத்திலாவது வைக்கவேண்டும். (6)

பிரமோதயமானது, லிங்கமாநம் - மாநாங்குலம்- மாத்ராங்குலம் இவைகளாலே கூறப்பட்டிருக்கிறது.

---

*ஸப்தாங்குலாதி நவாந்தம் மாநம் இதி பாடே ஸாது இதி பாதி।

7 அங்குலம் முதல் 9வித அளவாகும். என்று இருக்க வேண்டுமென்று தோன்றுகிறது.

𑌨𑌵𑌯𑍋𑌗𑍍𑌯𑌶𑌾𑌵𑌸𑌾𑌨𑍍𑌤𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌮𑌾𑌯𑌾𑌶𑍍𑌚𑌤𑍁𑌰𑍍𑌵𑌿𑌧𑍇 ‖ ௮ ‖

𑌤𑌾𑌲𑌨𑌾𑌹𑌂 𑌚 𑌮𑌾(𑌮𑌾)𑌨𑌂 𑌵𑌾 𑌤𑌦𑌂𑌶𑍇 𑌵𑌿𑌭𑌜𑍇𑌦𑍍𑌬𑍁𑌧𑌾 ।
𑌪𑍂𑌜𑌾𑌂𑌶𑍋𑌤𑍍𑌸𑍇𑌧𑌂 𑌚 𑌨𑌾𑌹𑌤𑌾𑌲𑌵𑌚𑍍𑌚 𑌮𑌾𑌨𑌂 𑌤𑌥𑍋𑌕𑍍𑌤𑌯𑍋𑌃 ‖

[𑌤𑌾𑌲𑌨𑌾𑌹𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌂 𑌵𑌾 𑌤𑌦𑌂𑌶𑍇𑌨 𑌵𑌿𑌭𑌾𑌜𑌯𑍇𑌤𑍍 ।
𑌪𑍂𑌜𑌾𑌂𑌶𑍋𑌤𑍍𑌸𑍇𑌧𑌂 𑌚 𑌨𑌾𑌹𑌂 𑌚 𑌤𑌾𑌲𑌂 𑌮𑌾𑌨𑌂 𑌤𑌥𑍋𑌕𑍍𑌤𑌯𑌾 ‖]

𑌮𑌾𑌨𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑍇𑌨 𑌪𑌞𑍍𑌚𑌾𑌦𑌿 𑌦𑍍𑌵𑌿𑌦𑍍𑌵𑍍𑌯𑌙𑍍𑌗𑍁𑌲𑌵𑌿𑌵𑌰𑍍𑌧𑌨𑌾𑌤𑍍 ।
𑌸𑌪𑍍𑌤𑌪𑌞𑍍𑌚𑌾𑌶𑌦𑌨𑍍𑌤𑍇𑌨 𑌬𑌿𑌮𑍍𑌬𑌮𑌾𑌨𑌂 𑌤𑍁 𑌤𑌥𑍋𑌕𑍍𑌤𑌯𑍋𑌃 ‖ ௯ ‖

[𑌸𑌪𑍍𑌤𑌵𑌿𑌂𑌶𑌤𑌿𑌮𑌾𑌨𑌾𑌙𑍍𑌗𑌂 𑌸𑌪𑍍𑌤𑌵𑌿𑌂𑌶𑌤𑌿𑌧𑍋𑌕𑍍𑌤𑌯𑍋𑌃 ‖]

𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑍇𑌨 𑌸𑌪𑍍𑌤𑌾𑌦𑌿 𑌦𑍍𑌵𑌿𑌦𑍍𑌵𑍍𑌯𑌙𑍍𑌗𑍁𑌲𑌵𑌿𑌵𑌰𑍍𑌧𑌨𑌾𑌤𑍍 ।
𑌤𑍍𑌰𑌿𑌸𑌪𑍍𑌤𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌕𑌂 𑌤𑍁 𑌬𑌿𑌮𑍍𑌬𑌂 𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑍈𑌰𑌿𑌤𑌿 𑌸𑍍𑌮𑍃𑌤𑌂 ‖
[𑌸𑍈𑌕𑍋𑌨𑌷𑌷𑍍𑌟𑌿𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌙𑍍𑌕𑌂 𑌸𑌪𑍍𑌤𑌵𑌿𑌂𑌶𑌤𑌿𑌮𑌾𑌨𑌕𑌂 ‖]

பூஜாம்சத்தின் உயரத்தை இரட்டித்துக் கொண்டு, அந்த அளவை 15 பாகங்களாகச் செய்யவேண்டும். அவைகளில் 7 பாகம் முதல் ஒவ்வொரு பாகத்தையும், தனித் தனியே, மாநமாகக் கொள்ள, பிம்பமானம் 9 விதமாகும். இவ்விதமாக, நந்திகேசரின் உயர அளவானது 9 விதமாகக் கூறப்பட்டுள்ளது. இவைகளில், 3, 3, அளவுகள், முறையே உத்தம மத்தியம-அதம- அளவுகளாகும்.

பூஜாம்சத்தின் அகலம், சுத்தளவு, இவைகளையும், முன்பு கூறியதுபோலவே செய்துகொள்ளவேண்டும்.

பூஜாம்சத்தின் உயரம், அகலம், சுத்தளவு இவைகளையும், முன்பு கூறியதுபோலவே (15 பாகங்களாகச் செய்து) மூர்த்தி மானத்தைக் கொள்ளவேண்டும். (9)

மாநாங்குலத்தினாலே, 5 அங்குலம் முதல், 57 அங்குலம் வரையில், 2, 2, அங்குலம் வீதமாகக் கூட்டிவர, பிம்பமாநம் 27 விதமாகும். (10)

ஆயவ்யயாதிநக்ஷத்ரம் பூர்வோக்தவதாசரேத் |
அங்குலாநாம் ப்ரமாணஸ்ய ஜாத்யம்சாதி ந(ந)ஸம்ஸ்ப்ருசேத் ||

அந்யேஷாம் து க்ருஹீதம் ச ஜாத்யம்சாதி(தி து)
ஸம்ஸ்ப்ருசம்(சேத்) |
மத்யமம் தசதாலேந(லம் து) நந்தீசஸ்ய ப்ரகீர்த்திதே
(கீர்த்திதம்) || 13 ||

ஸவிம்சதிசதாங்குலம் மத்யமம் தசதாலகம் |
உஷ்ணீஷம் ஸார்த்தமத்யாம்சம் ஸார்த்தவேதம் த்ரயோதசம் ||14||

களம் அர்த்த(ர்த்தா)ம்சம் கண்ட(ம்)ஹாநவேதம் விதீயதே |
தஸ்மாச்ச ஹ்ருதயாந்தம் து த்ரயோதசாம்சகம் பவேத் ||

நாப்யந்தம் சைவ மேட்ராந்தமேகைகம் து த்ரயோ
தசம் |

மாத்திராங்குலத்தினாலே, 7 அங்குலம் முதல், 59 அங்குலம் வரையில் 2, 2, அங்குலம் வீதம் கூட்டிவர, பிம்பமானம் 27 விதமாகும். (11)

ஆதாயம்-வியயம்-நக்ஷத்திரம்-முதலியவைகளை, முன்பு கூறியுள்ளபடியே பார்த்துக்கொள்ளவேண்டும். அங்குல அளவுகளுடன் ஜாத்யம்சத்தைக் கூட்டிக்கொள்ளக் கூடாது. மற்ற அளவுகளுடன் ஜாத்யம்சத்தைக் கூட்டிக் கொண்டு ஆயாதிகளைப் பார்க்கவேண்டும். (12½)

நந்திகேசுவரருக்கு, மத்யம தசதாலம் கூறப்பட்டு இருக்கிறது. 120 அங்குலம் கொண்டது மத்யம தச தாலமாகும்.

கேசாந்தம் வரையில் 3½ அங்குலமாகும். முகத்தின் நீளம் 13 அங்குலமாகும். களம் ½ அங்குலமாகும். கழுத்து 4 அங்குலமாகும். ஹிருதயாந்தம் 13 அங்குலமாகும். நாபியந்தம் 13 அங்குலமாகும். மேட்ராந்தம் 13 அங்குல

[illegible] ||

[illegible] ।
[illegible] ||௰௭||

[illegible] ।
[illegible] || ௰௮ ||

[illegible] ।
[illegible] || ௰௯ ||

[illegible] ।
[[illegible] ।]

மாகும். துடையின் உயரம் 26 அங்குலமாகும். முழங்கால் 4 அங்குலமாகும். கண்டைக்காலின் உயரம் 26 அங்குலமாகும். ஆகக்கூடுதல் உயரம் $3\frac{1}{2}+13+\frac{1}{2}+4+13+13+13+26+4+26+4=120$ அங்குலமாகும். ($16\frac{1}{2}$)

உள்ளங்காலின் நீளம் 17 அங்குலமாகும். புருவங்களின் அடிப்பக்கத்திய மயிர்களின் நடுவிலுள்ள பாகமானது, புருமத்தியமாகும். புருமத்தியத்தில் குறுக்காகக் கல்பிக்கப்படும் ஸூத்திரத்திற்கு புருமத்திய ஸூத்திரம் என்று பெயர். இந்த ஸூத்திரமானது, காதின் உச்சி மட்டத்திற்கு ஸமமாக இருப்பதாகும். (18)

அதற்குக் கீழே தாலு மூலம் $4\frac{1}{2}$ அங்குலமாகும். காதின் அகலம் 2 அங்குலமாகும். கர்ண நாளத்தின் உருவம் முதலியன, முன்பு கூறியுள்ளதுபோலவேயாகும்.

நேத்திராந்தமான நீளம் 8 அங்குலமாகும். நெற்றியின்

அஷ்டாயாமம்(யாமம்) ஸார்தம் தாரம் குண்டே(த)
வார்த்தமேவ ச(தம்) ‖ ௨௰ ‖

உத்க்ஷேபம் பார்ஷ்வயோர்த்தாராவதம்ஸா யவாதிகா ।
[உத்க்ஷேபம் பார்ஷ்வயோர்த்தாராவஷ்டாயதம் ஸார்த யவாதிகம் ।]
ஜ்யோதிர்மண்டலமத்யஸ்தம் கல்பிதம் நேத்ர
ஸூத்ரகம் ‖ ௨௧ ‖

தஸ்ய ஸூத்ரஸ்ய ஸம்பிதம் ஷட்யவம் ஷேஷம் ஸிதாம்ஸகம் ।
நேத்ரமத்யே யவ(ம்)ஜ்யோதிர்த்ருஷ்டியூகா
ப்ரமாணகம் ।
கனீனிகாயாமாயாமாஸ் ஸமம் ஸ்யாத் யவாயதம் ‖௨௨‖
[கனீனிகாஸ்ய ஸோத்வஸமம் ரக்தம் யவாயதம் ।]

அயம் வர்த்மோர்த்வஸ்ய தாரம் ஹ்ருதயமேவ ம ।
[அயம் வாரஸ்யோர்த்வ ஸ்யாத் ஹ்ருதயாங்க-
நிவேஸனம்]
அஸ்தி: பக்ஷ்மோர்த்தாணி த்ரிவர்ண(ர)ஹம் த்ரிணோ
வநம் ‖ ௨௩ ‖

முன் பக்கத்தின் நீளம் 8½ அங்குலமாகும். (20)

அந்தவிடத்திலிருந்து பக்கவாட்டில் பிடரிவரையில் நீளம் 8⅜ அங்குலமாகும்.

கருவிழியின் நடுவில், குறுக்காகக் கல்பிக்கப்படும் ஸூத்திரத்திற்கு நேத்திர ஸூத்திரம் என்று பெயர். நேத்திர மத்தியில் கருவிழியின் அளவு 6 யவையாகும். (அதன் பக்கங்களில்) மீதமிருப்பது வெண்மையாகும். நேத்திர மத்தியில் ஜோதி 1 யவை யாகும். அதில் திருஷ்டி 1 யூகை யாகும். கடைக் கண்ணானது, கர்ண துவாரத்தின் உச்சிக்கு ஸமமாக இருக்கவேண்டும். கடைக் கண்ணில் 1 யவை யளவு சிவப்பாக இருப்பதாகும். (22)

[illegible] ।
[illegible] ॥ உச ॥

[illegible] ।
[illegible] ॥ உரு ॥

[illegible] ।
[illegible] ॥ உசா ॥

[illegible] ।

மேலிமைகள், புருவங்களின் மத்தியை ஆதாரமாக உடையவர்களாகும். புருவத்தின் உரோமங்கள் 80 ஆகும். நந்திகேசுவரர், மூன்று விதமான நிறமும் மூன்று கண்களுமுடையவராவார். ... ...(23½)

கோஜியின் அடியிலிருந்து நாஸியின் நுனி வரையில், உயரமானது, 1⅞ யவை யாகும். அதன் உயரமானது 6 யவை யாகும். அது மூக்கு நுனி வரையில் சென்றிருப்பதாகும். அது, நாஸாபுடம் வரையில், 1 அல்லது 1½ அங்குலம் நீண்டிருப்பதாகும். (25)

கண், மூக்கு இவைகளின் நீப்ரம் (இடைவெளி) 1 யவை யாகும். நேத்திர மத்தியத்தின் அளவு 2 அங்குலமாகும். நாஸிகையின் அடி, நடு, நுனி இவைகள் (உயரம் அல்லது பரப்பு) முறையே 8½, 8, 10, யவைகளாகும். கோஜியின் நீளமானது 1 யவையைப் போன்றதாகும். அதன் அகலம் அதில் பாதி (½ யவை) ஆகும். (26½)

அதாயடுவெந(வம் தா)ஜாநம் வஸ்ராஸ உத்தரோஷ்
விஸாஜுகூடி ‖ உஎ ‖

தவெஷவடூம் வயவம் ஸாமம் யவெநவஸ்(ரத்தா)
வாஜிகா ।

*யவாஜுாஜாயஜாம் (கம்)தாஸம் தத்ரீவடும் ஷிமாணம்
ஹவெஸ ‖ உஅ ‖

யவஸ்ராயெடுந தஸவாஜிதாஸம் ஸெஷம் தா
ஸக்தஹாகூ ।

தவஸ்ர தாஜதி வாஜாம்ஸயவம் கொஜகம் ஹநு:
(உவஸ்ரதெ) ‖ உகூ ‖

உ..கமயெஷஜா தூா தஷாஸ கணடும் ததஃ கஜா ।(?)
அ(ஷி)யவாயிகநஜாம்ஸா கணடு(ணா)உஜுவிநாய
(ஸாஜு)கூடி ‖ கூய ‖

மேலுதட்டின் அகலம் 4 யவை யாகும். அதன் நீளம் 4$\frac{1}{8}$ அங்குலமாகும். பாலிகை 1 யவை யாகும். * அதன் நீளமானது இரண்டு மடங்காகும். அதன் வரம்பின் அகலம் $\frac{1}{2}$ யவையாகும். பாலி நீங்கிய உதடானது சிவப்பு நிறமாகும். அதிலிருந்து முகவாய்க்கட்டைவரையில் உயரம் 2$\frac{7}{8}$ அங்குலமாகும். ஹநுவின் (உயரம்) 2 அங்குலமாகும். ... ... அடிக்கழுத்தின் அகலம் 9$\frac{1}{4}$ அங்குலமாகும். (30)

---

* யவாயிகஜெஷாஸம் தத்ரீவடும் தாயாமம் ஹவெஸ । ஊதி வாஜெந ஹாவஸ்ரதி ஹாதி ।

கழுத்தின் அகலம் 5 யவை யாகும். அதன் நீளம் 4 அங்குலம் என்று இருக்கவேண்டுமென்று தோன்றுகிறது.

ஜங்காமூலம் ஜாநுமத்யஞ்ச க்ரீவாக்ரம் (ச) ததைவ ச ।
¹ஹிக்காஸூத்ராததோ பாஹுதைர்க்யம் ஸார்த்தம் த்வியவேந விகீர்திதம் ॥ ௩௧ ॥

கநிஷ்டாங்குஷ்டயோர்தைர்க்யம் ஸார்தைகம் சதுரங்குலம் பவேத் ।
ஸப்தாஷ்டநவாஷ்டாபிஸ்து த்வாதசாபிர்யவை: ॥ ௩௨ ॥

அங்குஷ்டாந்தாச் கநிஷ்டாத்யங்குலீநாம் க்ரமாத்ததா ।
[ஸப்தாஷ்டநவாஷ்டாபிஸ்து ததா த்வாதசபிர்யவை: ॥
கநிஷ்டாத்யங்குஷ்டகாந்தம் அங்குலீநாம் க்ரமாத்ததா ।]
²அங்குஷ்டாத்பஹி: ஸப்தாங்குலம் யாதமாத்ரகம் ॥
ப்ரகோஷ்டாக்ரம் பஞ்சாங்கம் ஸார்த்தமாத்ரம் ததாயதம் ।

பாஹு மூலம், நடு முட்டுக்கால், கழுத்து இவைகளின் அகலமானது, ஸம அளவாக இருக்கவேண்டும். கண்ட ஸூத்திரத்திற்குக் கீழே புஜத்தின் உயரம் 2½ அங்குலம். *சிறுவிரல் பெருவிரல்களின் நீளமானது 4½ அங்குலமாகும். இவ்விதமாக அளவுகள் கூறப்பட்டுள்ளன.

சிறுவிரல் முதல் பெருவிரல் வரையில் விரல்களின் அகலம், முறையே, 7, 8, 9, 8, 12 யவை யாகும். பெருவிரலுக்கு வெளியில் §முட்டுக்கையின் அகலம் 7 அங்குலமாகும். (33)

முன் கையின் அகலம் 5½ அங்குலமாகும். மணிக்

---

1 அத்ர க்ரந்தபாதோ நஷ்ட இதி பாதி ।

* இங்கு விஷயம் விட்டுப்போயிருக்கவேண்டுமென்று தோன்றுகிறது.

2 அத்ராபி க்ரந்தபாதோ நஷ்ட இதி பாதி ।

§ இங்கும் விஷயம் விட்டுப்போயிருக்கவேண்டுமென்று தோன்றுகிறது.

தலஸ்ய தாரம் ஷண்மாத்ரம் ஸார்தத்வயம் ச
நீவ்ரகம்(தலவநம்) ॥ ௩௪ ॥

தலாயிதேந ஷட்பஞ்சதாரம் பாஹோர்மத்யே ஸ்ய ।
[தலாயிகம் பஞ்சஷட்வா தாரம் பாஹோர்மத்யே ஸ்ய ।]
வக்ஷம்(க) விம்ஶதிஶ்ச(ம்) ஸ்யாத் வ(க்ஷ)ஸ்கந்தஸ்ய
விஸ்த்ருதம் ॥௩௫॥

ஸம்ஸ்தாநவாஹ்யம் கக்ஷம் தஸ்மாத் கக்ஷதரம் கலா ।
ஹிக்காமத்யாத் ஸ்தநாக்ஷாணாம் ஸ்தநக(க்ஷாத் வ)ஸ்தநகம்
த்ரயா(ஸ்தநாக்ஷகம்) ॥ ௩௬ ॥

த்ரயோதஶாங்குலம் சைவ ஸ்யாத்(ம் உதரம்)குக்ஷி(ঃ)
பஞ்ச ஊஶயாப்யகஃ ।
தஸ்மாத் கலாயிகம் ஶ்ரோணி(ঃ) கடி(ঃ) தஸ்மாத்
கலாயிகே(கம்) ॥ ௩௭ ॥

கட்டின் அகலம் 3½ அங்குலமாகும். உள்ளங்கையின் அகலம் 6 அங்குலமாகும். (உள்ளங்கையின் அடிப் பக்கத்தின்) கனம் 2½ அங்குலமாகும். பாஹு மத்தியத்தின் (நடுக்கையின்) அகலம், உள்ளங்கையின் அகலத்தைக் காட்டிலும், 5, அல்லது 6 யவை கூடுதலாக இருப்பதாகும் (34½)

மார்பின் அகலம் 21 அங்குலமாகும். தோள்பட்டையிலிருந்து, கக்ஷமானது (கமுக்கட்டு) 9 அங்குலமாகும். அங்கிருந்து கக்ஷதரமானது, (விலாப் பக்கத்தின் உச்சி அல்லது புஜஸந்தி) 2 அங்குலமாகும். (35½)

ஹிக்கையின் (கழுத்தின்) நடுவிலிருந்து ஸ்தநாக்ஷம் (ஸ்தநத்தின் கருப்பு) இரு ஸ்தநங்களின் மத்தியம், இவைகள் 13 அங்குலமாகும். வயிற்றின் அகலம் 15½ அங்குலமாகும். ச்ரோணியின் (அடிவயிற்றின் அகலம் 17½ அங்குலமாகும். (37)

[illegible] ॥ ௩௮ ॥

[illegible] ॥ ௩௯ ॥

[illegible]

அடித்துடையின் அகலம் 13 அங்குலமாகும். லிங்கத்தின் நீளம் 5 அங்குலமாகும். அதன் அகலம் 2 அங்குலமாகும். பீஜகோசத்தின் நீளமும் அகலமும் 4 அங்குலமாகும். மத்யோதரத்தின் அகலம், 11½ அங்குலமாகும். நடுக் கண்டைக்காலின் அகலம் *நளகையின் அகலம், 2 யவையாகும் (?) கணுக்கால் முண்டுகளின் மத்திய விஸ்தாரம், 5, அங்குலமாகும். குதிகாலின் அகலமும் நீளமும் 4 அங்குலமாகும். நடு உள்ளங்காலின் அகலம் 5¼ அங்குலமாகும். நுனிப் பாதத்தின் அகலம் 6¾ அங்குலமாகும். (41½)

---

*[illegible]

*கண்டைக்கால், அதன் நுனிகளின் அகலம் விட்டுப் போய் இருக்கிறது.

द्वियवं सार्धचतुर्(ं) दीर्घं तार(ं) द्व्यङ्गुलं भवेत् ॥

*कनिष्ठाङ्गुष्ठयोरेवं सत्रेषु नखं पूर्वोक्तवत्
सर्वयोः (भवेत्) ।

उष्णीषान्तकेशान्तं पृष्ठे कण्ठान्तं त्रयोदश ॥ ४३ ॥

[उष्णीषात् पृष्ठे कण्ठान्तस्तु केशान्तं तु
त्रयोदश ॥]

तस्माद्ग्रीवं चतुर्मात्रं तस्मात् समं ककुन्दः
बन्धुरः ।

कटिबन्ध(सन्धिं) षड्विंशं तस्मात्(तस्मिन्मध्ये तु)
कण्टकम् ॥ ४४ ॥

त्रयोदशाङ्गुलं तस्मात् स्फिजौ चतुरश्रान्तकम् ।

ग्रीवाधारं तु सामान्यं पृष्ठे मुष्टिं च
कल्पयेत् ॥ ४५ ॥(?)

கால் பெருவிரலின் நீளம் 4½ அங்குலமாகும். அதன் அகலம் 2 அங்குலமாகும்- *சிறுவிரல், பெருவிரல், இவ்விதமாகும் (?) நகம், முன்பு கூறியதுபோலவேயாகும்.

பின் பக்கத்தில் உச்சியிலிருந்து கழுத்திலுள்ள கேசாந்தம் வரையில்(நீளம்) 13 அங்குலமாகும். அங்கிருந்து கழுத்தின் (உயரம்) 4 அங்குலமாகும். அங்கிருந்து கருத்து (கழுத்தின் கீழ்க்குத்து) 4 அங்குலமாகும். அது பருமனாக இருக்கவேண்டும். அங்கிருந்து, கடிபந்தம் வரையில் (இடுப்பின் ஸந்திவரையில்) 26 அங்குலமாகும் அதன் (கடிஸந்தியின்) நடுவில் கண்டகத்தைக் கல்பிக்கவேண்டும். அங்கிருந்து ஸ்பிக்கானது, (பிருஷ்டபாகம்) 13 அங்குலமாகும். அது (அதன் கனம்) 4 அங்குலமாகும்.

---

* अत्र ग्रन्थपातो भाव्यः ।

* இங்கு விஷயம் விட்டுப்போயிருக்கிறது.

பஞ்சவிம்சாங்குலம் ப்ருஷ்டே கக்ஷாந்தரவிஸ்தாரகம் |
வம்சஸ்ய வம்சநிஷ்ட்ரம் தாரம் ப்ருஷ்டமத்யே நத்தகம் ||௪௬||
[வம்சதாரம் பவேத் த்வ்யம்சம் ப்ருஷ்டமத்யே வம்சஸ்ய து
நத்தகம் |]

சதுரங்குலமங்குஷ்டமூலே து வ்ருத்தகம் |
ஏவமூஹ்ய விதாதவ்யம் ஸமங்கப்ரத்யங்கலக்ஷணம் ||௪௭||

ருஜ்வாயதம் காயமாபங்கஸமபங்கயாபி வா |
[ருஜ்வாயதசரீரம் ஸ்யாத் ஸமபங்கமயாபி வா ||]
ஸ்வஸ்திகம் தக்ஷிணம் பாதம் வாமபாதம் து
குஞ்சிதம் || ௪௮ ||

பூர்வஹஸ்தத்வயோர்(யம் வா)பி ஹ்ருதயாஞ்ஜலி
பத்தகம் |
தத்பாஹ்(ர)க்ஷயோ வாமே க்ஷுரிகாவேத்ர
ஸவ்யே வேத்ரஸமாயுதம்(வேத்ரஸமாயுதம்) || ௪௯ ||

பின்பக்கம் கழுத்தின் அகலம் 8 அங்குலமாகும். பின் பக்கத்தில், கக்ஷங்களின் மத்திய அகலம், 25 அங்குலமாகும். முதுகின் நடுவில் நீண்டிருக்கும் வம்சத்தின் (எலும்பின்) அகலம், 2 அங்குலமாகும். அடித்துடையில் 4 அங்குலம், வட்டமாக இருக்கவேண்டும். அங்கங்கள், பிரத்தியங்கங்களின் லக்ஷணங்களை, இவ்விதமாக ஊஹித்துச் செய்ய வேண்டும்.

சரீரமானது, நேராக நிமிர்ந்திருக்கவேண்டும். ஆபங்கம் அல்லது ஸமபங்கமாக இருக்கவேண்டும். வலது கால் ஸ்வஸ்திதமாகவும், இடதுகால், குஞ்சிதமாகவும் இருக்கவேண்டும். (48)

பூர்வஹஸ்தம் இரண்டும் மார்பில் அஞ்சலி பத்தமாக இருக்கவேண்டும். அல்லது பூர்வ ஹஸ்தங்கள் இரண்டுகளில், வலதுகையில் பிரம்பும் இடதுகையில் கத்தியுமிருக்க

परहस्तद्वयोर्(दक्षवामे वा)पि सव्ये टङ्कं
(क)मृगं तथा ।
अपसव्ये हरिणीयुक्तं नेत्रसूत्रावसानकम् ॥

टङ्कोदयं चापांशं स्यात् हरिणीरु(ण्यु)
दयं तथा ।
कर्तरीपरहस्तौ तौ हिक्कासूत्रसमायतौ ॥५१॥

अन्तर्मुखं वापि बहिर्मुखमथापि वा ।
चतुर्भुजं त्रिणेत्रं च जटामकुटसंयुतम् ॥

केशबन्धमथो वापि किरीटमकुटं तु वा ।
यज्ञोपवीतसंयुक्तं छन्नवीरविराजितम् ॥ ५३ ॥

हारकेयूरसंयुक्तं सोपग्रीवसमायुतम् ।
मकरकुण्डलसंयुक्तं रत्नकुण्डलमेव वा ॥ ५४ ॥

வேண்டும். பர ஹஸ்தங்கள் இரண்டில், வலதுகையில் மழுவும், இடதுகையில் மானுமிருக்கவேண்டும். இந்த பர ஹஸ்தங்கள் இரண்டும், நேத்திர ஸூத்திரமட்டமாக இருக்கவேண்டும். (50)

மழுவின் உயரம் 12 அங்குலமாகும். மானின் உயரமும் அவ்விதமே (12 அங்குலமே) யாகும். பர ஹஸ்தங்கள் இரண்டும் கர்த்தரீ முத்திரையுடையவைகளாம். அவைகள் கழுத்துமட்டமாக உயர்ந்திருப்பவைகளாம். அவைகள், உள்ப்பக்கம் அல்லது வெளிப்பக்கம் பார்ப்பவைகளாக இருப்பதாகும்.

நந்திகேச மூர்த்தியானது 4 கைகள், 3 கண்களுடையதாகும். கேசபந்தம், அல்லது கிரீடமகுடம் தரித்திருப்பதாகும்.

யஜ்ஞோபவீதம், சந்நவீரம், ஹாரம், கேயூரம், உபக்ரீவம், இவைகளையணிந்திருப்பதாகும். மகரகுண்டலம்

𑌵𑌾𑌮𑍇 𑌤𑍁 𑌶𑌙𑍍𑌖𑌪𑌤𑍍𑌰𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌕𑌰𑍍𑌣𑍇 𑌸𑍍𑌯𑌾𑌦𑍍𑌦𑍍𑌵𑌯𑍋𑌸𑍍
𑌤𑍁 𑌕𑌰𑍍𑌣𑌿𑌕𑌾 ।
𑌲𑌲𑌾𑌟𑌪𑌟𑍍𑌟𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌕𑌿𑌰𑍀𑌟𑍀𑌚𑌯𑍍𑌯𑍁𑌤𑌸𑍂𑌤𑌨𑍀 (?) ‖ ௫௫ ‖

𑌹𑍂(𑌹𑌾)𑌰𑌸𑍂𑌤𑍍𑌰𑌸𑌮𑌾𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌕𑌟𑌿𑌸𑍂𑌤𑍍𑌰𑌸𑌮𑌨𑍍𑌵𑌿𑌤𑌮𑍍 ।
𑌆𑌭𑌙𑍍𑌗𑌂 𑌸𑌮𑌭𑌙𑍍𑌗𑌂 𑌵𑌾 𑌚𑌾𑌤𑌿𑌭𑌙𑍍𑌗𑌸𑌮𑍋(𑌮𑌾)𑌨𑍍𑌵𑌿𑌤𑍇 ‖

𑌆𑌭𑌙𑍍𑌗𑍇(𑌙𑍍𑌗𑌾)𑌸𑍂 𑌸𑌵𑍍𑌯𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑍇 𑌤𑍁 𑌨𑍇𑌤𑍍𑌰𑌾𑌂𑌶(𑌕)
𑌸𑌿𑌤𑌾𑌂𑌶𑌕𑍇 ।
𑌨𑌾𑌸𑌾𑌪𑍁𑌟𑌸𑍍𑌯 𑌸𑌵𑍍𑌯𑍇 𑌤𑍁 𑌹𑌨𑍋𑌸𑍍𑌸𑌵𑍍𑌯
𑌪𑍍𑌰𑌦𑍇𑌶𑌕𑍇 ‖ ௫௭ ‖

𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌂(𑌣)𑌸𑍍𑌤𑌨𑌸𑌵𑍍𑌯𑍇 𑌤𑍁 𑌨𑌾𑌭𑍇𑌃 𑌸𑌵𑍍𑌯𑍇 𑌤𑍁
𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑌕𑍇 ।
𑌵𑌾𑌮𑍋𑌰𑍂𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑍇 𑌵𑌾𑌮𑌾𑌙𑍍𑌘𑍍𑌰𑌿𑌪𑌾𑌰𑍍𑌷𑍍𑌣𑌿𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑍇 𑌪𑍍𑌰𑌲𑌮𑍍𑌬
𑌯𑍇𑌤𑍍 ‖ ௫௮ ‖

அல்லது ரத்நகுண்டலமணிந்திருப்பதாகும். இடதுகாதில் சங்கபத்திரமணிந்திருப்பதாகும். காதின் நுனியில் கர்ணிகையை (குஞ்சம்) தரித்திருப்பதாகும்.

லலாட பட்டம் தரித்திருப்பதாகும். ... ... (?) ஹார ஸூத்திரம், கடி ஸூத்திரம், இவைகளையணிந்திருப்பதாகும்.

ஆபங்கம், ஸம பங்கம், அல்லது அதிபங்க லக்ஷணத்துடன் இருக்கவேண்டும். (56)

ஆபங்க ஸூத்திரமானது, சிரஸ்ஸின் வலதுபக்கம், (வலது மூக்கை அடுத்துள்ள) வெண்விழி, நாஸாபுடத்தின் வலதுபக்கம், முகவாய்க் கட்டையின் வலதுபக்கம், வலது ஸ்தநத்தின் வலதுபக்கம், தொப்புளின் வலதுபக்கம், இடது துடையின் (வலது) பக்கம், இடது குதிகாலின் (வலது) பக்கம், இவைகளில் தொங்கவேண்டும் என்று கூறப்பட்டு

ஶ்ருஹஜ்ஜுஸூத்ரவித்⁴யுக்தம் ஸமஹஜ்ஜுஸ்ய உ(ஶிரோ)ச்யதே |
ஶீர்ஷ(ஷா)மத்⁴யாத்து நாஸாக்³ரமத்⁴யாத்பார்ஷ்ணி
த்³வயோஸ்த(யஸ்ய)மேவ || ௫௯ ||

மத்⁴யே து மத்⁴யஸூத்ரம் ஸ்யாத் ஸூத்ராத்து வாம
பார்ஶ்வகே |
ஹிக்காமத்⁴யாத்(த்⁴யம்) த்³வ்யங்கு³லம் ஸ்யாத் ஹ்ருத்ஸவ்யே
மாத்ரமேவ ச || ௬௰ ||

நாபி⁴மத்⁴யோ(த்⁴யம்) த்³வ்யர்த⁴ம் ஸ்யாத் த³க்ஷிணே மேட்⁴ர
(ஶ்ரு)மூலகாத் |
வேதா³ங்கு³லம்(வ)ஸ்யாத் வாமஜாநுஜங்கா⁴கு³ல்ப²யோ ||௬௧||

த்³வ்யம்(ஶ)மேவ ப்ரத³ர்ஶிதாஸ் ஸமஹஜ்ஜாதி⁴காநகம் |
ஏவம் ஶிஹஜ்ஜுஸூத்ரம் ஸ்யாத் ஸூத்ரயேத்
ஸூத்ரகம்(கோவித³꞉) ||௬௨||

இருக்கிறது. இனி ஸமபங்க ஸூத்திரத்தைக் கூறுகிறேன்.

உச்சியிலிருந்து, நாஸாக்ரமத்தியம், குதிகால்களின் மத்தியம், இந்த இடங்களில் மத்தியஸூத்திரம் விழ வேண்டும். அந்த ஸூத்திரத்திலிருந்து, இடது பக்கத்தில், நடுக்கழுத்தின் ஒதுக்கம், 2 அங்குலமாகும். ஸூத்திரத்திலிருந்து வலதுபக்கத்தில், ஹிருதயமானது (ஹிருதய மத்தியமானது) 1 அங்குலமாகும். ஸூத்திரத்திலிருந்து (வலதுபக்கத்தில்) நாபிமத்தியமானது, 2½ அங்குலமாகும். மேட்ரமூலத்திலிருந்து ஸூத்திரமானது, வலது பக்கத்தில் 4 அங்குலத்திலிருப்பதாகும்: இடது குதிகாலுக்கும் ஸூத்திரத்திற்கும் மத்தியிலுள்ள ஒதுக்கம் 2 அங்குலமாகும். இவ்விதமாக இருப்பது ஸமபங்க ஸூத்திரமாகும். இவ்விதமாக, ஆபங்க ஸூத்திரம், ஸமபங்க ஸூத்திரம், இரண்டு ஸூத்திரங்களும் கூறப்பட்டிருக்கின்றன. முறை

[illegible] |
[illegible] ||

[illegible] |
[illegible]
[illegible] || ௬௨ ||

[illegible] |
[illegible] ||

[illegible]
[illegible] |
[illegible] ||

[illegible] |

யறிந்த சில்பியானவன் இவ்விதமாக ஸூத்திரங்களைக் கல்பித்துக்கொள்ளவேண்டும். (62)

ஆபங்கத்தில், காலின் பெருவிரல்களின் மத்தியின் ஒதுக்கம் 2 அங்குலமாகும். ஸம பங்கத்தில் பெருவிரல்களின் மத்திய ஒதுக்கம் 18 அங்குலமாகும். இவைகளில், குதிகால்களின் மத்திய ஒதுக்கமானது, பெருவிரல்களின் ஒதுக்கத்தில், 3ல் 1 பங்காகும்.

தலைமுடியின் உயரமானது, கேசாந்தத்திலிருந்து, 25, 13, (23) அல்லது 20 அங்குலமாகும். அல்லது மற்றொரு விதமாகவும் குரங்குமுகத்துடனும் கல்பிக்கலாம். அது 13 அங்குலமிருக்க வேண்டும். மற்றவைகள் யாவும் முன்பு கூறியுள்ளதைப் போலவேயாகும்.

மூர்த்தியானது, உட்கார்ந்த வடிவமாக இருந்தால், அதன் இடது காலானது, பீடத்தின்மீது வைக்கப்பட்டு இருக்கவேண்டும். வலது காலானது, தொங்கவிடப்பட்டு இருக்கவேண்டும். 4 கைகளுடனிருக்கவேண்டும். பூர்வ

𑌪𑍃𑌷𑍍𑌠𑍇(𑌪𑌰𑍇)𑌹𑌸𑍍𑌤𑌦𑍍𑌵𑌯𑍋𑌰𑍍𑌵𑌾𑌪𑌿 𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌪𑌰𑌶𑍁
𑌧𑌾𑌰𑌿𑌣𑌃 ॥ ௬௭ ॥

𑌦𑌂𑌷𑍍𑌟𑍍𑌰𑌾𑌙𑍍𑌕𑌿𑌤𑌂 𑌦𑍇𑌵𑌾𑌸𑍍𑌯𑌂 𑌤𑍁 𑌸𑌮𑌨𑍍𑌵𑌿𑌤𑌃 ।
[𑌦𑌂𑌷𑍍𑌟𑍍𑌰𑌾𑌨𑌨𑌂 𑌦𑍇𑌵𑌾𑌸𑍍𑌯𑍇𑌨 𑌸𑌮𑌨𑍍𑌵𑌿𑌤𑌃 ॥]
𑌵𑍍𑌯𑌾𑌘𑍍𑌰𑌚𑌰𑍍𑌮𑌾𑌮𑍍𑌬𑌰𑌂(𑌰𑌾)𑌯𑍁𑌕𑍍𑌤𑌮𑌨𑍍𑌯𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌂 𑌪𑍂𑌰𑍍𑌵𑍋𑌕𑍍𑌤
𑌵𑌤𑍍 ॥ ௬௮ ॥

𑌪𑍀𑌤𑌾𑌭𑌂 𑌵𑌾𑌥 𑌰𑌕𑍍𑌤𑌾𑌭𑌂 𑌯𑌥𑌾𑌶𑍋𑌭𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌞𑍍𑌚
(𑌤𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍) ।
𑌅𑌨𑍁𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌚 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 𑌶𑌿𑌵𑌵𑌤𑍍𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌮𑌾𑌚𑌰𑍇𑌤𑍍 ॥
[𑌅𑌨𑍁𑌕𑍍𑌤𑌮𑌨𑍍𑌯𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌚 𑌶𑌿𑌵𑌵𑌤𑍍𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌮𑌾𑌚𑌰𑍇𑌤𑍍 ।]

𑌤𑌸𑍍𑌯𑌾𑌵𑌾𑌮𑍇 𑌮𑌹𑌾𑌦𑍇𑌵𑌿 𑌹𑍍𑌰𑍀𑌙𑍍𑌕𑌾𑌨𑍍𑌤𑌂 𑌤𑍍𑌵𑌕𑍍𑌸𑌂𑌯𑍁𑌤𑌾 ।
[𑌤𑌸𑍍𑌯 𑌵𑌾𑌮𑍇 𑌮𑌹𑌾𑌦𑍇𑌵𑍀 𑌹𑍍𑌰𑍀𑌙𑍍𑌕𑌾𑌨𑍍𑌤𑌂 𑌵𑌕𑍍𑌷𑌃𑌸𑍍𑌤𑌨𑌕𑌂 ॥]
𑌶𑌿𑌵𑌾𑌖𑍍𑌯𑌂 𑌵𑌾(𑌕𑌾𑌨𑍍𑌤𑌾)𑌸𑍍𑌯 𑌵𑍀𑌰𑌾𑌨𑍍𑌤𑌂 𑌦𑍇𑌵𑍀𑌨𑌾𑌂
𑌪𑍍𑌰𑌕𑌲𑍍𑌪𑌯𑍇𑌤𑍍 ॥ ௭௰ ॥

(பர) ஹஸ்தங்கள் இரண்டிலும், மானும் மழுவுமிருக்க வேண்டும். ஆபங்க லக்ஷணத்துடனிருக்கும் மூர்த்தியானது, உயரத்தில் சிறிதளவு, வணங்கியதால், குறைந்திருப்பதாகும்.

சண்டிகேச மூர்த்தியானது, புலித்தோலாடையுடுத்தியிருக்கவேண்டும். மற்ற லக்ஷணங்கள் யாவும் முன்பு கூறியதுபோலவேயாகும். மூர்த்தியானது, மஞ்சள் நிறமாகவோ, அல்லது சிகப்பு நிறமாகவோ இருப்பதாகும். இவ்விதமாக அழகாக அமைந்திருக்கவேண்டும். இதில் கூறப்படாத மற்ற லக்ஷணங்கள் யாவும், சிவனுக்கு கூறப்பட்டிருப்பவைகளைப் போன்றவைகளாகும். (69)

நந்திகேசுவரரின் இடது பக்கத்தில், சண்டிகேசுவரரின் தேவியை நிர்மாணம் செய்யவேண்டும். அந்த

अधमं (अधमे) दशतालेन मानेनाङ्गुलप्रमाणकम् ।
[illegible] उष्णीष(ष्णीषः) पादावसानकम् ॥ ७१ ॥

उष्णीषात् केशान्तकं मानं [illegible] यवं मानम् ।
नेत्रान्तं स(शि)यवं मानं [illegible] ॥ ७२ ॥

[illegible] मानं [illegible]
[illegible] ।
कण्ठाद्(?) [illegible] हृदयं नाभिः नाभेर्
[illegible]* ॥ ७३ ॥

[illegible] विंशति(:) ।
मानं जानु च [illegible]
मानं भवेत् ॥ ७४ ॥

தேவியானவள், நந்திகேசுவரரின் கழுத்து மட்டம், கண் மட்டம், முகவாய்க்கட்டை மட்டம், அல்லது வாய் மட்டமாக இருக்கவேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. தேவியின் மாநம், உந்மானம், பிரமாணம், இவைகளை, அதம தச தாலத்திலேலே கல்பிக்கவேண்டும்.

அதம தச தாலத்தின் மாநம் உச்சிமுதல் பாதம் வரையில் 116 அங்குலமாகும். அவைகளில், கேசாந்தம் 4 அங்குலமாகும். நேத்திராந்தம் $4\frac{1}{4}$ அங்குலமாகும். புடாந்தம் $4\frac{1}{4}$ அங்குலமாகும். ஹநுவந்தம் $4\frac{1}{4}$ அங்குலமாகும். கண்டம் 4 அங்குலமாகும். கண்டத்திலிருந்து, ஹிருதயாந்தம், நாபியந்தம், யோநியந்தம், ஒவ்வொன்றும்

---

*[illegible] ।

ஹஸ்தோ(ஹஸ்த)ஸ்ய பாதஶ்ரு(ந்)ச ஸ்யாத் பாதஶாயாமம்
வ ஷோடஶ |
பஞ்சவிம்ஶதிமாத்ரம் ஸ்யாத் பாஹுதீர்க்கம்
ப்ரஶஸ்யதே || ௭௫ ||

அம்ஶம் து கூர்பரம் த(ந)வதர்ஶாம்ஶம் து
ப்ரகோஷ்டகே |
தலதீர்க்கம் ஷடம்ஶம் ஸ்யாத் மத்யாங்குல்யாயதம் து
ஷட் || ௭௬ ||

ஸார்த்தருத்ர(ம்) முகதாரம் ஸ்யாத் அஷ்டாம்ஶம் கண்ட
விஸ்த்ருதம் |
ஸப்தாம்ஶம் பாஹுமூலம் ஸ்யாத் ஸ்தநவிஸ்தாரதஸ்
ததா || ௭௭ ||

ஸப்ததஶாம்ஶம் தாரம் கக்ஷயோரந்தரம் ததா |

12½ அங்குலமாகும். தடையின் உயரம் 25 அங்குலமாகும். முழங்கால் 4 அங்குலமாகும். கண்டைக்கால் 25 அங்குலமாகும். பாதத்தின் உயரம் 4 அங்குலமாகும். ஆகக் கூடுதல் $4+4\frac{1}{4}+4\frac{1}{4}+4\frac{1}{4}+4+12\frac{1}{2}+12\frac{1}{2}+12\frac{1}{2}+25+4+25+4=116\frac{1}{4}$ அங்குலங்களாகும்.* பாதத்தின் நீளம் 16 அங்குலமாகும்.

மேல்க்கையின் நீளம் 25 அங்குலமாகும். முழங்கையின் நீளம் 2 அங்குலமாகும். முன்கையின் நீளம் 19 அங்குலமாகும். உள்ளங்கையின் நீளம் 6 அங்குலமாகும். நடுவிரலின் நீளம் 6 அங்குலமாகும். முகத்தின் அகலம் 11½ அங்குலமாகும். கழுத்தின் அகலம் 8 அங்குலமாகும். பாஹு மூலத்தின் அகலம் 7 அங்குலமாகும். ... ...

---

* நாபியந்தம், யோநியந்தங்களில் 2 யவை குறைவாகக் கொள்ளவேண்டும் என்று தோன்றுகிறது.

नवांशं स्तनानां व्यासस् तदर्धं चोन्नतं
विदुः ॥ ௭௮ ॥

द्व्यङ्गुलं चिबु(चूचु)कं प्रोक्तं तन्मध्ये(ं)ऽतु
स्तनाक्षकम् ।
द्वियवं चोन्नतं विद्यात् सुवृत्तौ न(त्तं च)
समुन्नतौ ॥ ௭௯ ॥

स्तनाधो हृदयान्तस्य त्रयोदशाङ्गुलविस्तृ
(ं त)तम् ।
उदरस्य विस्तारमेकादशाङ्गुलं भवेत् ॥

श्रोणीविस्तारमेवं स्याद् विंशदङ्गुलमेव वा ।
त्रयोविंशतिरङ्गुल्यं कटितारं प्रशस्यते ॥௮௧॥

द्वादशाङ्गुलमेव स्यादूरुमूलविस्तारकम् ।
जानुमध्यं षडंशं स्यान्नलकान्तं तु वेदकम् ॥

---

14 அங்குலமாகும்(?) கக்ஷமத்திய விஸ்தாரம் 17 அங்குல மாகும். ஸ்தநத்தின் விஸ்தாரம் 9 அங்குலமாகும். ஸ்தநத் தின் உயரம் அகலத்தில் ஸரிபாதி (4½ அங்குலம்) ஆகும். சூசுகத்தின் (ஸ்தநத்தின் கருப்பு) அகலம் 2 அங்குலமாகும். அதன் மத்தியில் முலைக்காம்பு 1 அங்குலமாகும். அதன் உயரம் 2 யவையாகும். ஸ்தநங்கள் வட்டமாகவும் உயர்ந்து அழகாகவும் இருக்கவேண்டும். ஸ்தநத்திற்குக் கீழே ஹிருதயாந்தத்தின் அகலம் 13 அங்குலமாகும். உதர மத்தியின் விஸ்தாரம் 11 அங்குலமாகும். ச்ரோணிதலத் தின் விஸ்தாரம், 20, அங்குலமாகும். இடுப்பின் அகலம் 23 அங்குலமாகும். (81)

அடித்துடையின் அகலம் 12 அங்குலமாகும். நடு முட்டுக்காலின் அகலம் 6 அங்குலமாகும். நளகாந்தத்தின் (கண்டைக்கால் நுனியின்) அகலம் 4 அங்குலமாகும்.

ஜங்காக்ரேண நாஹம் (க்ரந்தம் து ஜாநம்) ஸ்யாத்பஞ்ச
மாத்ராங்குலம் விது: |
ஜதாரம் மாத்ராநம் ஸ்யாச் சதுர்மாத்ரா பார்ஷ்ணி(பார்ஷ்ணே)ர்வ்ருதம்
ஸமீக்ஷிதம் || ௮௪ ||

ப்ரபதம் பஞ்சமாத்ரம் ஸ்யாத் தலாக்ரம் து ஷடங்குலம் |
அங்குஷ்டஸ்யாயதம் நாஹம் சேஷாங்குல்ய: புரோக்தவத் ||

ஷட்காங்குலகம் ப்ரோக்தம் பாஹுமத்யஸ்ய விஸ்தரம் |
கூர்பரஸ்ய து விஸ்தாரம் வேதமாத்ரம் ப்ரசஸ்யதே |
மணிபந்தம்(து) த்ர்யம்ஶம் ஸ்யாத் பார்ஶ்வஸ்யாச்(சாந்யச்)
சேஷம் புரோக்தவத் ||௮௫||

இதி ஸாரஸ்வதீயே சித்ரகர்மசாஸ்த்ரே சாஸ்த்ர-காத்யாயநீ-
ஜ்யேஷ்டா-நந்திகேச்வரலக்ஷணகதநம் நாம
சத்வாரிம்சோऽத்யாய: ஸமாப்த: ||

கணுக்கால் முண்டுகளின் மத்திய அகலம், 5 அங்குலமாகும். குதிகாலின் உயரம் (அகலம்) 4 அங்குலமாகும். புறங்காலின் அகலம், 5 அங்குலமாகும். முன் பாதத்தின் அகலம், 6 அங்குலமாகும்.

பெருவிரலின் நீளம், 4 அங்குலமாகும் மற்றவிரல்கள் யாவும், முன்பு கூறியிருப்பதைப்போலவேயாகும். பாஹு மத்தியத்தின் (மேல்க்கை நடுவின்) அகலம், 6 அங்குலமாகும். முட்டுக்கையின் அகலம் 4 அங்குலம் என்று கூறப்பட்டிருக்கிறது. மணிக்கட்டின் அகலம், 3 அங்குலமாகும். மற்றவை யாவும், முன்பு கூறியுள்ளதைப்போலவேயாகும்.

ஸாரஸ்வதீய சித்திரகர்ம சாஸ்திரத்தில், சாஸ்தா-காத்தியாயநீ (துர்கை) ஜ்யேஷ்டை-நந்திகேசுவரர், லக்ஷணங்களைக் கூறும் நாற்பதாவது அத்தியாயம் முற்றும்.

॥ एकचत्वारिंशोऽध्यायः ॥

शूलदारुलक्षणम् ॥

अथ वक्ष्ये विशेषेण शूलदारुं शुभप्रदम् ।
देवालयसभां चैत्यवीथिश्मशानभूरुहान् ॥१॥

सरोगवक्रसंयुक्तं दग्धाः शूलार्थभूरुहाः ।
शाखात्रुटितिसंपूर्णं पत्राढ्यं छायवन्तितम् ॥२॥

अपूर्ववल्लीसंपूर्णं घनच्छायां मनोहरान् ।
विहगव्राज्यनिषेविजातिवृक्षेणावृतशोभितम् ॥

[देवालयसभाचैत्यवीथिश्मशानभूरुहाः ॥
सरोगा वक्रसंयुक्ता दग्धाः शूलार्थभूरुहाः ।
शाखाढ्यं क्षतिसंपूर्णं पत्राढ्यं छाययान्वितम् ॥
अपूर्ववल्लीसंपूर्णं घनच्छायं मनोहरम् ।
जातिवृक्षेणावृतशोभितम् ॥]

நாற்பத்தோன்றாவது அத்தியாயம்.

சூலதாரு லக்ஷணம்.

இனி சுபகரமான சூலதாரு லக்ஷணத்தை விசேஷித்துக் கூறுகிறேன்.

தேவாலயம், ஸபை, சைத்யபூமி (யஜ்ஞபூமி), வீதி, ஸ்மசாநபூமி, இவைகளிலிருக்கும் மரங்களையும், ரோகமுள்ள மரங்களையும், கோணலாக இருக்கும் மரங்களையும், தீப்பற்றிய மரங்களையும், சூலதாருவைச் செய்வதற்காக கிரஹிக்கக்கூடாது.

குறைவில்லாமல் ஸம்பூர்ணமாகவும், அதிக இலைகளுடன் கூடியதும், அதிக நிழலுள்ளதும், அபூர்வமான கொடிகளுடன் கூடியதும், அடர்த்தியான நிழலுடையதும்,

𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌪𑍁𑌂𑌨𑌪𑍁𑌂𑌸𑌕𑌾 𑌵𑍃𑌕𑍍𑌷𑌾𑌃 𑌪𑍁𑌂𑌸𑌾𑌂 𑌸𑌾𑌰
𑌵𑍃𑌕𑍍𑌷𑌕𑌾𑌃 ।*
𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌣𑌾𑌂 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌵𑍃𑌕𑍍𑌷𑌕𑌾 𑌗𑍍𑌰𑌾𑌹𑍍𑌯𑌾𑌃 𑌨𑍇𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌤𑍁
𑌨𑌪𑍁𑌂𑌸𑌕𑌾𑌃 ॥௪॥

𑌪𑍍𑌰𑌶𑌸𑍍𑌤𑌪𑌕𑍍𑌷𑌨𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑍇 𑌮𑍁𑌹𑍂𑌰𑍍𑌤𑌕𑌰𑌣𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑍇 ।
𑌸𑌹𑍋𑌰𑌾𑌵𑍇𑌶𑌿𑌤𑌾𑌨𑍇𑌨 𑌸𑌙𑍍𑌗𑍍𑌰𑌾𑌹𑍍𑌯𑌾𑌃 𑌶𑌿𑌲𑍍𑌪𑌿𑌭𑌿𑌃 𑌸𑌦𑌾
(𑌸𑌹𑌾) ॥௫॥

மனதிற்குக் கவர்ச்சிகரமுமானதும் நான்கு பக்கங்களிலும் ஜாதி விருக்ஷங்களாலே சூழப்பட்டு அழகாக இருப்பதுமான மரமானது சுபகரமாகும். (3)

புருஷ விருக்ஷம், ஸ்திரீ விருக்ஷம், நபும்ஸக விருக்ஷம் என்று விருக்ஷங்கள் 3 விதங்களாகும். அவைகளில் அதிக ஸாரமுள்ள (உறுதியான) விருக்ஷமானது, புருஷ விருக்ஷமாகும். (அதிக உறுதியில்லாதது, ஸ்திரீ விருக்ஷமாகும். முற்றிலும் உறுதியில்லாதது, நபும்ஸக விருக்ஷமாகும். புருஷ தேவதைகளின் சூலதாரு நிர்மாணத்திற்கு, புருஷ விருக்ஷங்களையே கிரஹிக்கவேண்டும்) ஸ்திரீ தேவதைகளின் சூலதாரு நிர்மாணத்திற்கு ஸ்திரீ விருக்ஷங்களையே கிரஹிக்க வேண்டும். நபும்ஸக விருக்ஷங்கள் சூலதாரு நிர்மாணத்திற்கு உகந்தவைகளல்ல. (4)

விருக்ஷ ஸங்கிரஹணத்திற்குச் சிறந்ததாகக் கூறப்பட்டிருக்கும் பக்ஷம், நக்ஷத்திரம், முஹூர்த்தம், கரணம் இவைகள் கூடியிருக்கும் காலத்தில், ஹோமமும் பலி

---

*𑌅𑌤𑍍𑌰 𑌪𑌾𑌠𑌭𑍇𑌦𑌃 [illegible] 𑌇𑌤𑌿

[illegible] ॥
[illegible]
[illegible] ॥ 𑌇𑌤𑌿 ॥

ப்ருஹ(பாஹு)ஸ்பதிம் ஜபேத் வ்ருக்ஷமூலே த்ரி:
ஹத்வா பரீக்ஷயேத் |
க்ஷீரதோயஸ்ய வை ஶ்ரேஷ்டம் ஶோணிதே சாஶுபம்
பவேத் ||௬||

பூர்வம் வ்ருக்ஷாஸ்யம் ஜ்ஞாத்வா வாமதக்ஷிண
ப்ருஷ்டகம் |
ஜ்ஞாத்வா பூர்வோத்தரே ஶ்ரேஷ்டம் பதனம்வா(பதனம்
வா) ன்யதேஶகே ||௭||

ந ஶுபம் ஸமாஹாரம் பஶ்சாத் ஶாகாச்சேதனமாசரே
(சரே)த் |
க்ருத்வா படேந ஸூத்ராத்வா அஹதாம்பரஸம்வீதம் ||௮||

தானமும் செய்து, பிறகு, சில்பியானவன் விருக்ஷ ஸங்கிரஹம் செய்யவேண்டும்.

மரத்தின் அடியில் நின்றுகொண்டு பிருஹஸ்பதி தேவதாகமான மந்திரத்தை ஜபித்து, மரத்தின் அடியில் (கோடாரியினலே) 3 முறை வெட்டி, அந்த வெட்டுவாயை கவனிக்கவேண்டும். (அந்த வெட்டுவாயில்) பால் அல்லது ஜலம் பெருகினால் (கசிந்தால்) அந்த விருக்ஷம் சிறந்ததாகும். வெட்டுவாயில் ரக்தம் கசிந்தால், அது, அசுபகரமாகும். (6)

முதலில் மரத்தின் முன்பக்கம் (முக பாகம்), இடது பக்கம், வலதுபக்கம், பின் பக்கம், இவைகளை அறிந்து கொள்ளவேண்டும். (அந்த மரத்தை வெட்டும்பொழுது அந்த மரமானது) கிழக்கு அல்லது வடக்கு திக்கில், விழுந்தால், அது சிறந்ததாகும். மற்ற திக்குகளில் விழுந்தால், அது நன்மையைக் கொடுக்காது. பிறகு வெட்டப்பட்ட மரத்தின் கிளைகளை வெட்டி விடவேண்டும். பிறகு கிளைகளில்லாமல் செய்யப்பட்ட மரத்தை புதிய வஸ்திரத்தி

ஶகடே வா விமாநஸ்தே வேஶயேத் ஸ்கந்த
வாஹநே |
[ஶகடே வா மநுஷ்யஸ்தே வா நயேத் ஸ்கந்தவாஹநம் |]
வாலுகே ஶாயயித்வா து ஶுஷ்காந்தம் ர(க்ஷ)க்ஷயேத்
ததா ||14||

அங்கோபாங்கப்ரத்யங்காநாம் நிஶ்சித்ய(தைவ து)
கல்பயேத் |
யதா பேரம் து தீர்கம் து ய(த)தா ஶூலாயதம்
பவேத் ||15||

ஊர்த்வகாயப்ரமாணஸ்ய சதுர்பாகைகவிஸ்த்ருதம் |
பார்ஶ்வம் து கத்வர்யம் நாஹ்யம் சதுரஶ்ரகம் ||

ஞ்லே போற்றி, அதில் புஷ்பமாலையையும் சூட்டவேண்டும். இவ்விதம் அலங்காரம் செய்யப்பட்ட மரத்தை, வண்டியிலாவது மனிதன் தோளிலாவது ஏற்றி சூலதாரு நிர்மாணம் செய்யப்படும் மண்டபத்திற்கு எடுத்துவரவேண்டும். மண்டபத்தில் நிறைய மணலைப்பரப்பி, அந்த மரத்தை அதன்மேலே படுக்கையாக வைத்துக் காயும் வரையில், அந்த மரத்தை ரக்ஷித்துவரவேண்டும்.

(தேவாலயத்தில் நிர்மாணம் செய்யப்படவிருக்கும் மூர்த்தியின்) அங்கம், உபாங்கம், பிரத்தியங்கம், இவைகளின் மாநத்தை நிச்சயித்துக்கொண்டு, அதற்கேற்றவாறு (சூலதாருவைக்) கல்பித்துக்கொள்ளவேண்டும். (கல்பிக்கப் படவிருக்கும்) பேரத்தின் உயரத்திற்கு ஏற்றவாறு சூலத்தின் உயரம் இருக்கவேண்டும். (அந்த சூல தாருவானது) ஊர்த்துவகாயத்தின் பிரமாணத்திற்கு (இடுப்புக்குமேலே சிரஸ் வரையிலுள்ள மேற்பாதியுடலின் உயரத்திற்கு) 4ல் 1 பங்கு அகலமுடையதாக இருக்க

ஹிக்காநாபௌ சது(ர)ஷ்டாச்ரம் சேஷம் வ்ருத்தம் ஸதா
வதேத் |

ஊர்த்வாதி கண்டவம் விதா(த்) ஷோடசாம்சவிஹீநகம் ||

ஸமம் து ஸர்வவ்ருத்தம் வா ஹாரஸம்ஜ்ஞம் ப்ரயோஜயே
(ஜயே)த் |

சதுரஷ்டாச்ரவ்ருத்தாக்யம் ஸாமாந்யம் ஸம்ஜ்ஞ(முகம்)
விது: || ௰௩ ||

த்ரி வம்சம் த்ரைவம்சகம் வ நிஷ்கம் வாத்ய
(யாவஹம்) |

வேண்டும். இவ்விதமாக வம்ச தண்டத்தைக் கற்பித்துக் கொள்ளவேண்டும். (அந்த தண்டத்தில் அடியிலிருந்து) தொப்புள் வரையில் சதுரஸ்ரமாகவும் (சச்சதுரமாகவும்) கழுத்துவரையில் அஷ்டாஸ்ரமாகவும், (எட்டுப் பட்டையாகவும்) மீதமுள்ள முக பாகமானது விருத்தமாகவும் (வட்ட வடிவமாகவும்) இருக்கும்படி கல்பித்துக் கொள்ள வேண்டும். (அதில் வட்ட வடிவமான முக பாகமானது) அதன் அடிப்பக்கத்திலிருந்து கண் மட்டம் வரையில் 16ல் 1 பாகம் குறைவாக இருப்பதாகும்.

அது ஹார சூலமாக இருந்தால், மேலே கூறப்பட்ட வடிவத்திலாவது அல்லது ஸம விருத்தமாக (வட்ட வடிவமாக)வாவது கல்பித்துக் கொள்ளுவதாகும்.

பொதுவாகச் சூலமானது, நாபி வரையில் சதுரஸ்ரமாகவும், கழுத்து வரையில் அஷ்டாஸ்ரமாகவும், அதற்கு மேலே விருத்தமாகவும் இருக்கவேண்டுமென்று அபிப்பிராயப்படுகிறார்கள். (13)

சூலதாருவானது 3 கண்டங்களால் (தனித்தனியாக 3 மரத்துண்டுகளால்) செய்யப்பட்டாலும், அல்லது 3 மரங்

ஊர்த்வகாயமத:காயம் யோஜயேத் த்ருவபிம்பகே(கே) ॥

ஸந்தானா(ஸந்தானே)ந ஸம்யோஜ்ய ஶாகாஶாகா
ப்ரஶாகாவத்(வத்) ।

பாஹ்வந்தமக்ஷவிஸ்தாரம் வக்ஷஸூத்ரேச ஹீநகே ॥௫॥

வக்ஷோதண்டாயா(யதம்) தஸ்ய வக்ஷஸூத்ரேண
விஸ்த்ருதம் ।

சதுர்த்தாதிகதாரம் வா தஸ்யாயம் பஹுளம் பவேத் ॥

களின் 3 துண்டுகளால் செய்யப்பட்டாலும், அது நிஷ்கள மாகும், (தைவகலையில்லாததாகும்.) அது, அழிவை அல்லது கெடுதியை யுண்டுபண்ணும்.

துருவ பிம்பத்தின் ஊர்த்துவ காயத்தையும் அதக் காயத்தையும் (சரீரத்தின் மேல் பாகத்தையும் கீழ் பாகத் தையும்) ஒன்றேடொன்று இணைக்கவேண்டும். அப்படி அவைகளை இணைக்கும்பொழுது கீழ்பாகம் மேல்பாகங்களை மரத்தில் பெருங்கிளையும் சிறு கிளையும் இணைந்திருப்பது போல ஸமமாக இருக்கும்படி பொருந்தவைத்து இணைக்க வேண்டும்.

[அந்த மத்திய சூலத்தின் உச்சியில், கழுத்துக்குக் கீழே, கைகளை இணைப்பதற்காக, குறுக்கே ஓர் மரத் துண்டை இணைக்கவேண்டும். இதற்கு வக்ஷோதண்டம் என்று பெயர்.]

வக்ஷோதண்டத்தின் நீளமானது (இருகைகள் வரை யில் குறுக்களவானது,) பாஹுபர்யந்தமாக (கைகளின் கோடிவரையில்) கூறப்பட்டிருக்கும் அளவில், 5ல் 1 பங்கு குறைவாக இருக்கவேண்டும். அந்த வக்ஷோதண்டத்தின் அகலமானது, அந்த இடத்திற்குக் கூறப்பட்டிருக்கும் அகலத்தில் 5ல் 1 பங்கு அகலமுடையதாக இருக்கவேண்டும்;

கடிதாரஸ்ய பஞ்சாம்ஶம் ஹீனம் து கடிதண்டகம் |
ததீயோத்ஸேதம் தத்துல்யம் து தத்துல்யம் பாகைரிஷ்யதே ||

வக்ஷோதண்டகடீதண்டத்வயா(த்வயா)யாமே த்விபார்ஶ்வயோ: |
த்ர்யங்குலம்(ல) த்வ்யங்குலாயாமம்(ம ததம்) நதவக்த்ரம்
ஶிகான்விதம் || ௰௮ ||

த்விசதுஷ்ஷட்கே(ட்கோ)ஷு பாஹவா(:)
தத்யோகார்த்தாவலம்ப: (கா ரதா:) |
ஹிக்கா(கோ)த்வ்யங்குலாயதா: வக்ஷோதண்டோர்த்வ
ஸஶாகம் || ௰௯ ||

அல்லது ½, அல்லது 1 அங்குலம், அகலத்தில் கூடுதலாகவும் இருக்கலாம். (16)

[இடுப்புக்குக் கீழ்மேயுள்ள பாகத்தை இணைப்பதற்காக இடுப்பில் குறுக்கே ஓர் தண்டத்தை, மத்திய தண்டத்தின் அடிப்பக்கத்தில் இடுப்பில் இணைக்கவேண்டும். இதற்குக் கடிதண்டம் என்று பெயர்.]

கடிதண்டமானது, இடுப்பின் விஸ்தாரத்தில் 5ல் 1பங்கு குறைவாக இருக்கவேண்டும். அதன் உயரமானது, இடுப்பின் உயரத்தில் ஸரிபாதியாவது அல்லது ¼ பங்காவது இருக்கவேண்டும். (17)

மத்திய சூலத்தின் இருபக்கங்களிலும், வக்ஷோ தண்டம் கடிதண்டம் இவ்விரண்டையும் சேர்த்து இரண்டு தண்டங்களை இணைக்கவேண்டும். அது 3, அல்லது 2 அங்குலம் நீள (அகல)முள்ளதாக இருக்கவேண்டும். வணங்கிய முகமும் சிகையும் உள்ளதாக இருக்கவேண்டும்.

கல்பிக்கப்படவிருக்கும் பிம்பத்திற்குக் கைகள் 2, 4 அல்லது 6 இருந்தால், அவைகளை இணைப்பதற்குத் தக்கபடி, வக்ஷோதண்டத்தில், சாகை (கிளை அல்லது கூறு)களை அமைத்துக்கொள்ளவேண்டும்.

நாபே: பஞ்சாங்குலாதஸ்தாத் கடிதண்டோ(அ)திகம்(த:) பவேத் ।
கடிதண்டஶிகாயாம் து த்ர்யர்த்தாங்குலாயதம்(லாயதம் து) பாவயேத் ॥ ௨௧ ॥

உபானே(பே)ஷ்டாங்குலம் து ஸ்யா(த்)வ்யாஸமிஷ்யதே ।
ஸ்தானகம் சேத்ததா(த்தா)ஶ்ரோண்யாத்யாஸனஸம்ஹிதோ பவேத் ॥

தஸ்யோரோ ரந்த்ரம் க்ருத்வா த(க)டிதண்டே நியோஜயேத் ।
ஸ்தானகே ஜானுமானம் து ஸமாயுக்தமேவம்(மேவ) ப்ரயோஜயேத் ॥ ௨௨ ॥

ஜானுமானம் ஜங்காஹஸ்தா(ஊ)ர்த்வஸம்யோஜயேத்ததா ।

வக்ஷோதண்டத்தின் மேல்ப்பக்கமானது, கழுத்திற்கு 2 அங்குலத்திற்குக் கீழே இருக்கவேண்டும். கடிதண்டமானது, தொப்புளுக்கு 5 அங்குலத்திற்குக் கீழே இருக்கவேண்டும். கடிதண்டத்தின் சிகையின் அகலமானது, 3½ அங்குலமிருக்கவேண்டும். உபானத்தின் (துடையில்) நீளத்தில் 8 அங்குலம் அகலமாக இருக்கவேண்டும்.

பிம்பமானது ஸ்தானகமாக (நிற்கும் வடிவமாக) இருந்தால், (துடையில் கூறப்பட்டுள்ள 8 அங்குலத்தில்) ஶ்ரோணி முதலியளவு (4 அங்குலம்) ஆஸனத்தில் இணைந்திருக்கவேண்டும். அந்த ஊருதண்டத்தின் அடியில் துவாரம் செய்து அதன் நுனியை கடிதண்டத்தில் இணைக்கவேண்டும். ஸ்தானகபிம்பத்தின் ஊருமானத்துடன் ஜானு (முழங்கால்) அளவையும் சேர்த்துக்கொள்ளவேண்டும். இவ்விதமே, ஜங்காமானத்துடனும் (கண்டைக்காலளவுடனும்) முட்டுக்காலளவைச் சேர்த்துக்கொள்ளவேண்டும். இவ்விதமாக முட்டுக்காலின் அளவை, துடையளவுடனும், கண்டைக்காலளவுடனும் கூட்டி, அவ்விரு அளவுகளையும் ஒன்ருே

ஸந்தாநம் கல்பயேஜ் ஜாநு ஸ(ம)ம்யக் மண்டலா
க்ருதி ॥ ௨௩ ॥

ஊர்வோ விஜ்ஞாநீயாத் ஜங்காயுக்மாந்விதம் ।
ஸம்யோஜ்ய ஸந்ததமேகம் து ஸந்தாநம(ஸ்ய)மம்
ஸுஷிரயேத் ॥ ௨௪ ॥

ஊருதண்டஸ்ய விஸ்தார ஊருமத்ய(த்ரி)பாகத: ।
பாதஹீநம் தத்கநம் து ஜங்காமூலம் ததா
பவேத் ॥ ௨௫ ॥

தத்த்ரிபாகஹீநம் ஸ்யாத் ஜங்காக்ரம் பா
(தம் த)லதீர்கத: ।
அங்குலாதிகவிஸ்தாரம் பாததலம்(தலதண்ட) த்ரிபாகிகம் ॥

டொன்று பொருத்தமாக இணைத்து முட்டுக்காலைக்கல்பிக்க வேண்டும். அந்த முட்டுக்காலானது மண்டலாகாரமாகவும் (வட்டவடிவமாகவும்) இருப்பதாகும். தொடை, கண்டைக் கால் இவ்விரண்டுகளுடனும் சேர்க்கப்பட்டிருக்கும் முட்டுக் காலை, ஒன்றோடொன்று சேர்த்து, அதன் நடுவில் துவாரம் செய்து இரண்டையும் ஒன்றுபட இணைக்கவேண்டும். (24)

ஊருதண்டத்தின் அகலமானது, ஊருமத்தியத்தின் அகலத்தில் 3ல் 1 பங்கு இருக்கவேண்டும். அதன் கன மானது, அதன் அகலத்தில் $\frac{1}{4}$ பங்கு குறைவாக இருக்க வேண்டும். ஜங்கா மூலமும் (கண்டைக்காலின் அடிப் பக்கமும்) கீழே கூறப்பட்டிருப்பதைப்போலவே அமைக்கப் படவேண்டும். (25)

கண்டைக்காலின் நுனியானது, அடியின் அளவில் 3ல் 1 பங்கு குறைவாக இருக்கவேண்டும். பாததல தண்டத்தின் அகலமானது, பாததலத்தின் அகலத்தில் $\frac{1}{3}$ பங்கு அகலத்துடன் 1 அங்குலம் அகலத்தில் கூடுதலாக

விஹாய தஸ்ய விஸ்தாரஸ்ய தீவ்ய(ம்) ஸாஷிரஸ்யம் |
வசேஷாஸம்ஸஸ்ய ஸமேய தா ஶிவாவாஹாஶயோ
(யம்) மதஃ(தா) ‖ ௨௭ ‖

தத்தாமெ(த்தெ) தா வதாஹஸ்தாம(மெ) விஹாய
தஸ்ய ஸமஷெ |
வி(ஶி)வாஙு(ம்வ)வதாவஸ்தாஹா(ஹஸ்தாம)ஷீண்ணஸ்ய
வஶெ ஶிவெ ‖ ௨௮ ‖

அஷ்டபாஹுஶிவாயாஸ்தும் ஶிவாநாம் பஹுஸம்வ்யா |
*ஷோஸஶாஷக்ஷாஶேடும்(தாவக)வத்ரூண
ஸம்யாதஃ ‖ ௨௯ ‖

இருக்கவேண்டும். பாததல தண்டத்தின் நீளமானது, பாதத்தின் நீளத்தில் 3ல் 2 பங்கு நீளமுள்ளதாக இருக்க வேண்டும். (அதன் அடிப்பக்கத்தில் பாததண்டத்தை இணைப்பதற்காக) துவாரம் அமைந்திருக்கவேண்டும்.

வசேஷா தண்டத்தின் இருபக்கத்திலுமுள்ள சிகை (முனை)யானது, இருபக்கத்திலுமுள்ள கைவரையிலிருக்க வேண்டும். அதன் நீளத்தில் 4 பாகங்களில் 2 பாகமானது அதன் மத்திய பாகமாகும். அதன் 2 பக்கத்திலும் 4ல் 1 பாகமிருப்பதாகும். (எனவே, வசேஷாதண்டத்தின் நீளத்தில் ஸரிபாதியளவு அதன் மத்தியபாகமாகும். $\frac{1}{4}$, $\frac{1}{4}$, பங்கு இரண்டு பக்கங்களிலுமுள்ள பாகமாகும், என்பது பொருள்.) மூர்த்தியானது பல கைகளுடையதாக இருந்தால், கைகளின் எண்ணிக்கைக்கேற்றவாறு, வசேஷா தண்டத்தின் நுனியில் 8 சிகைகள் வரையில் (8 கூறுகள்

---

*உக்ஷாஶாஷோஸஶஶிவா தலோக வத்ரூஷ்க யொஜயெக |
ஸாஷிரம் தாஉ கீமெந ஷீணாவட்டீகுதஃ ‖ இதி வா
வாமெந ஹாவஷிதி ஹாதி |

𑌸𑌾𑌷𑍍𑌟𑌿𑌰𑌂 𑌤𑍁 𑌨𑌿𑌰𑍍𑌧𑌾𑌰𑍇𑌣 𑌸𑍍𑌥𑌾𑌣𑍁𑌸𑌾𑌧𑌿𑌕𑌂
𑌕𑌲𑍍𑌪𑌯𑍇𑌤𑍍 ।

𑌬𑌾𑌹𑍁𑌮𑍂𑌲𑌸𑍍𑌯 𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌂 𑌪𑌞𑍍𑌚𑌾(𑌙𑍍𑌗𑍁) 𑌵𑌿𑌚𑌕𑍍𑌷-
𑌣𑌃 ॥ ௩௰ ॥

𑌕𑍂𑌰𑍍𑌪𑌰𑌾𑌯𑌃 𑌪𑍍𑌰𑌕𑍋𑌷𑍍𑌠𑌂 𑌚 𑌮𑌾(𑌲𑍇)𑌨 𑌪𑌞𑍍𑌚(𑌧𑌾 𑌤𑍁)
𑌵𑌿𑌸𑍍𑌤𑍃𑌤𑌃 ।

𑌤𑌦𑌗𑍍𑌰𑍇 𑌵𑌿𑌸𑍍𑌤𑍃𑌤𑌮𑌾𑌯𑌾𑌸𑌂 𑌪𑌾𑌶(𑌙𑍍𑌗)𑌲𑌿(𑌲𑌿)
𑌯𑍋𑌜𑌯𑍇𑌤𑍍 ॥ ௩௧ ॥

𑌪𑍍𑌰𑌕𑍋𑌷𑍍𑌠𑌾𑌗𑍍𑌰𑌮𑌧𑍍𑌯𑌾𑌧𑍍𑌯𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌂 𑌤𑌦𑍍𑌵𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 𑌸𑌮𑌾𑌨
𑌯𑍁𑌕𑍍 ।

[𑌪𑍍𑌰𑌕𑍋𑌷𑍍𑌠𑌾𑌧𑍍𑌯𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌂 𑌤𑍍𑌰𑍀𑌣𑌿 𑌨𑌵𑌾𑌂 𑌸𑌮𑌂 𑌤𑌥𑌾 ।]

வரையில்) வைக்கலாம். மூர்த்தியானது 16 கைகளுடைய தாக இருந்தால், 16 கூறுகளைக் கல்பிக்க முடியாது. ஆகையால், அதிகமாக உள்ள கைகளை, பட்டைகளை வைத்து இணைக்கவேண்டும். கைகளில் இணைக்கவேண்டிய விடத்தில் துவாரம் செய்து, அதில் செப்பாணியைத் தைத்து, அதன்மேலே தங்கத்தகட்டை அடித்து, அதை உறுதி செய்யவேண்டும். (29½)

பாஹுதண்டத்தின் விஸ்தாரமானது, பாஹுமூலத்திலிருந்து 5 அங்குலமிருக்கவேண்டும். முட்டுக்கைக்குக் கீழே, பிரகோஷ்டமானது (முன் கையானது) அடிப்பக்கத்தில் விஸ்தாரமாக இருக்கவேண்டும். (அடிப்பக்கமானது புஜத்தைப்போல விஸ்தாரமாகவும், நுனி சிறுத்தும் இருக்க வேண்டும், என்பது பொருள்.) அந்த பாஹு மத்தியில் சித்திரத்தையும் புஷ்பம்போன்ற வடிவத்தையும் கல்பிக்கலாம். (31)

கைத்தலமானது, முன்கையின் அகலத்தைக்காட்

ப்ரஸாரிதோத்(தை)ஜ்ஞஹஸ்தே து ஸந்திம் நைவ
ப்ரயோஜயேத் ॥ ௩௨ ॥

உத்(க்ஷ)க்ஷிப்தஹஸ்தே பாதே ஸந்திம் நைவ ப்ரயோஜ
யேத் ।

பக்ஷவாக்ஷ்யதிஸ்தாநஸ்தாயாம் பக்ஷ்மதேவ பக்ஷ்மகம் ॥௩௩॥

[க்ஷ்ரகவாக்ஷ்யதிஸநஸ்தாநாம் பக்ஷ்மமதைஷ்வ பக்ஷ்மகஷ் ॥]

சவகோணாம்(க்ஷ்ராணாம்) க்ஷ்ரேம் பாஹ்யம் யதா யஸ்த்ர
ப்ரயோஜயேத் ।

பர்ஷ்வே ச பா(ஹ)துகாஸாவஹ(ஸந்த)ஸ்தானம்
யோஜயேத் புத: ॥ ௩௪ ॥

டிலும் ½ பங்கு அகலம் கூடுதலாகவும், தணிந்து ஏற்ற அளவுடையதாகவும் இருக்கவேண்டும். தண்டஹஸ்தமானது, (கையானது தண்டத்தைப்போல) நீட்டப்பட்டிருந்தால், அந்தக் கையில் இரண்டு பாகங்களை இணைக்கக் கூடாது. (கையானது தொங்கவிடப்படாமல் நேராக நீட்டப்பட்டிருந்தால் அந்தக்கையின் தண்டமானது, மேல்க்கை ஒரு பாகம், கீழ்க்கை மற்றொரு பாகம் என்று இரண்டு பாகங்களைக் கல்பித்து, அவைகளை ஒன்றோடொன்று சேர்த்து இணைக்காமல், கை முழுமையும் ஒரே தண்டமாக இருக்கவேண்டும் என்பது பொருள்.) கை அல்லது காலானது, உயரத்தூக்கப்பட்டிருந்தாலும், அந்தக் கை அல்லது காலில், இரண்டு பாகங்களை இணைக்கக்கூடாது. (ஒரே தண்டமாகத்தான் இருக்கவேண்டும் என்பது பொருள்.) (32½)

இதில் கூறப்படாத இடங்களில் வளைவாக இருக்கும் அங்கங்களுக்கு வளைவாகவும், வளைவில்லாத அங்கங்களுக்கு வளைவில்லாமலும் யுக்தியுடன் தண்டங்களை உபயோகிக்க வேண்டும்.

പാർശ്വദണ്ഡദ്വയോഃ പാർശ്വേ ദ്വയോരപി ച(യാവം)
ശലാകേ യോജയേത് ।
തച്ഛലാവിസ്താരം ദ്വ്യം സാർദ്ധാംഗുലമുച്യതേ ॥൩൫॥

കടിദണ്ഡാദൂർദ്ധ്വദേശേ(ഊർദ്ധ്വദേശേ തു) വക്ഷോദണ്ഡസ്യ
ചാധസ്യ(ചാധസ്യഃ) ।
വംശദണ്ഡോ ഹി തത് ശ്രേഷ്ഠ(ശ്രേഷ്ഠം) കടിദണ്ഡസ്യ ചാ
ധസി(ധസ്യഃ) ॥൩൬॥

വക്ഷോദണ്ഡസ്യ തത്സ്ഥാനേ(ഷ്ഠാ ചാധസ്ഥാനേ)ക്ഷുദ്രിതം
(യുക്തം)ദ്വയോരപി ।
സച്ഛിദ്ര(ഛിദ്രയുക്തഃ)മിത്യേവം യത്നം പാർശ്വദണ്ഡം
പ്രയോജയേത് ॥൩൭॥

அதன் பின் பக்கத்தில் பலகையைப்போல அகண்டிருக்கும் (தண்டத்தை) இணைக்கவேண்டும். பார்சுவ தண்டங்களின் இரு பக்கங்களிலும் 2 மூங்கில்களை (மூங்கில் சிம்புகளை) இணைக்கவேண்டும். அந்தச் சிம்பானது 2½ அங்குலம் அகலமுள்ளதாக இருக்கவேண்டும் (35)

வம்ச தண்டமானது, (முதுகெலும்பின் ஸ்தானத்தில் வைக்கப்படும் பலகையானது) கடிதண்டத்திற்கு மேலேயும், வக்ஷா தண்டத்திற்குக் கீழேயுமிருக்கவேண்டும். இவ்விதமாக வம்ச தண்டத்தை அமைப்பது சிறந்த முறையாகும். அந்த வம்ச தண்டமானது கடி தண்டத்திற்குக் கீழே இணைந்திருப்பதுமாகும். வக்ஷா தண்டத்திற்குக் கீழே,

... ...

... ...

பார்சுவ தண்டத்தில் மேல்ப்பக்கம் கீழ்ப்பக்கங்களில் துவாரம் இருக்கவேண்டும். (37)

ஹஸ்தாக்ரம்(ஸ்ய) தஸ்யோர்த்வே பாஹுஶீர்ஷாந்தம்
பாஹுஶீர்ஷகே |
வக்ஷோதண்ட(ண்டோ)பரி பஞ்சஷட்ஸப்தாஷ்டநவதஶ ||

பாஹுமூலஶிகாசக்ரா(க்ர)த்வாஹ்யம்(யோஜ்யம்)தண்டம்
(து)வக்ஷஸி |
ஶயநே சாபவத்(வ)ச்ச காயம்(யஸ்ய) தக்ஷிணே
வ(ப)க்ஷதண்டகே || ௩௯ ||

ஏகாதஶாங்குலம் உந்நதம்(உந்நதம்) பாஹுமூலஶிகே
ஶிகே |
ஶிகாயாம் து சதுரங்குலம் தக்ஷிணே வ(ப)க்ஷ
நிம்நகே ||௪௰||

பாஹுமூலாத்து ஹாயோஜ்யம் (வாயோஜ்யம்)
தக்ஷிணே வ(ப)க்ஷதண்டகே |

கையின் எல்லையானது, மேலே புஜத்தின் உச்சி வரையில் (தோள்ப்பட்டை வரையில்) வியாபித்திருக்க வேண்டும்.

வக்ஷா தண்டத்தின்மீது, பாஹுமூல சிகரசக்கிரத்திலிருந்து (வட்டமான பாஹுமூலத்தின் நுனியிலிருந்து) தண்டத்தை மார்பில் (கைகளுக்கேற்றவாறு) 5, 6, 7, 8, 9, அல்லது 10 எண்கள் வரையில் இணைக்கவேண்டும்.

மூர்த்தியானது படுக்கையாக இருந்தால், அதன் வலது பக்கம் தண்டத்தை சாபத்தை (வில்லை)ப்போல கல்பிக்க வேண்டும். அது பாஹுமூலத்தை அடைந்திருக்கும் சிகை (நுனி)யில், 11 அங்குலம் தூக்கலாக இருக்கவேண்டும். அதன் நுனியில், வலதுபக்கத்தில் விலாப்பக்கமானது 4 அங்குலம் தணிந்திருக்கவேண்டும். வலது பக்கத்தில், பக்ஷ தண்டத்தை பாஹுமூலத்திலிருந்து இணைப்பதமாகும்.

பாஹுமூலவிஸ்தாரார்த்தம் பக்ஷதண்டம் பக்ஷயோர்த்வயோ: ||

ஸா(பா)பாகோடிபர்யந்தம் யோஜ்யோ ஹஸ்தபாஹு
தனுராக்ருதி |

[பாபாகோடிபர்யந்தம் யோஜ்யம் ஹி(ஸ்)தபாஹு(ம்ஸ)
தனுராக்ருதி |]

ஆஸனே யத்யூருஜானுஜங்கோருஜானுத: ||
[ஆஸனே யத்யூருஜானுஜங்கோருஜானுத: |]

ஜங்காஜானூருயோ: ஸம்(ஜ்யம்)ஸமமேவம்(வ)
ப்ரவிஸ்யதே |

பாதவத் பாஹுதலஸ்ய ஸம்யோஜிதஹஸ்தக்ரியா
(ஜ்யூத்வம் தயோ: யதா) || ௪௨ ||

த்வயம் த்வயோர்னேன யோஜிதவ்யம் விசக்ஷணை: |

இரு பக்கங்களிலும், பக்ஷ தண்டமானது பாஹுமூலத்தின் விஸ்தாரத்தில் பாதியளவு விஸ்தாரமுள்ளதாக இருக்க வேண்டும்.

அந்த பக்ஷ தண்டமானது, இரண்டு பக்கங்களிலுமுள்ள கையின் கோடிவரையில் உயர்ந்து வில்லைப்போல் இருக்கும்படி இணைக்கப்படவேண்டும். (41½)

மூர்த்தியானது உட்கார்ந்த வடிவமாக இருந்தால், அதன் துடையின் அளவும் கண்டைக்காலின் அளவும் ஸமமாக இருக்கும்படி (வைத்து) அவ்விருபாகங்களையும் இணைக்கவேண்டும்.

காலில் பாததலத்தை இணைக்கும்படி கூறியிருப்பதைப் போலவே, கையில் கைத்தலத்தை இணைக்கவேண்டும். கையின் நீளத்தை 2 பாகங்களாகக் கல்பித்துக்கொண்டு, அவ்விரண்டு பாகங்களையும் நடுவில் (முட்டுக்கையில் ஸமமாகவைத்து) இணைக்கவேண்டும். இவ்விதமாக

வாலம்(யோஜ்யம் து)ஸாரேண து ஶேஷஸந்தாநக
விதி: ॥ ௪௪ ॥

யோஜயேத் ஸூத்ரகர்ணானி தத்ரம்(த்ரம்)வாபி
வியோஜயேத் ।

ஶிலாஸூத்ரம் ப்ரக்ருத(தோ)க்தம் மேதஸா வலம்
ஸம்யுதம் ॥ ௪௫ ॥

தாருஸூத்ரம் ப்ரக்ருத்யா வ ஸர்கராநிர்மிதேஷ்வபி
(தம் ததா) ।

யதாயோக்யம் த்ரவ்யஜாதம் ஸாரஜாதம் ஸங்கல்
பயேத் ॥ ௪௬ ॥

த்ரீணாம் (து) ஸூத்ரமேவோக்தம் விஶேஷேண
ப்ரயோஜயேத் ।

தண்டங்களை கணக்குடனமைக்கவேண்டும். இது ஸம்பந்தமான மற்ற விசேஷங்களை மற்ற நூல்களிலிருந்து தெரிந்து கொள்ளவேண்டும். சூலதாரு நிர்மாணத்தை யுக்தியாகவும் செய்வதாகும் என்று விதிக்கப்பட்டிருக்கிறது. (44½)

சிலையினாலே (கருங்கல்லாலே) செய்யப்படும் சூலமானது, பிரகிருதியைப் போலவே (பேரத்தைப் போலவே) இருக்கவேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. வர்கத்தாலே செய்யப்படும் சூலமானது (வர்கம் ஓரே இனத்தைச்சேர்ந்த பதார்த்தங்கள்) மேதஸ்ஸோடு (மாம்ஸத்திலுண்டாகும் தாதுப்பொருளோடு) சேர்ந்து இருக்கவேண்டும். தாரு சூலமானது இயற்கைவடிவத்தைப் போல இருப்பதாகும். சர்கரை (மணல்)யாலே செய்யப் படும் சூலமும் முன்கூறியதுபோலவேயாகும். இவைகளில் கிடைத்த பொருளுக்கேற்றபடி சூலத்தைக் கல்பித்துக் கொள்ளவேண்டும். இது ஸகல பேரங்களுக்கும் பொது

𑌉𑌦𑌯𑍋𑌰𑍍𑌧𑍍𑌵𑍇 𑌤𑍍𑌰𑌿𑌮𑌾𑌤𑍍𑌰𑍈𑌕𑌂 𑌉𑌦𑌯𑌾𑌙𑍍𑌗𑌸𑍍𑌯 𑌵𑌿𑌸𑍍𑌤𑌰𑌃 ॥

𑌹𑍀𑌨𑌾𑌂 𑌤𑍁 𑌵𑌕𑍍𑌷𑍋𑌦𑌣𑍍𑌡𑌸𑍍𑌯 𑌆𑌯𑌾𑌮𑌂(𑌚)
𑌬𑌾𑌹𑍍𑌵𑍋𑌰𑍍𑌮𑍂𑌲𑌯𑍋𑌃 ।

𑌬𑌾𑌹𑍁𑌮𑌣𑍍𑌡𑌲𑌾𑌯𑌾𑌹𑍀𑌨𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 (𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌂) 𑌹𑍀𑌨𑌂
𑌶𑍇𑌷𑌂 𑌤𑌦𑌂𑌶𑌕𑌂 ॥ ௪௬ ॥

𑌤𑌾𑌰𑌂 𑌤𑌦𑌂𑌶(𑌤𑌾𑌰𑌾𑌂𑌶𑌂 𑌤𑌸𑍍𑌯) 𑌬𑌾𑌹𑍁(𑌹𑍁)𑌲𑌂
𑌶𑌿𑌵𑌾𑌂 𑌪𑍂𑌰𑍍𑌵𑌵𑌦𑌾𑌚𑌰𑍇𑌤𑍍 ।

𑌪𑌞𑍍𑌚𑌾𑌂𑌶𑍋𑌨𑌂 𑌕𑌟𑍀(𑌤𑌾𑌰𑌮𑍂𑌲𑌂) 𑌦𑍈𑌰𑍍𑌘𑍍𑌯𑌤𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥

𑌶𑍇𑌷𑌂 𑌪𑍂𑌰𑍍𑌵𑍋𑌕𑍍𑌤𑌵𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌬𑌾𑌹𑍁𑌦𑍈𑌰𑍍𑌘𑍍𑌯𑌂 𑌨
𑌯𑍋𑌜𑌯𑍇𑌤𑍍 ।

வாகக்கூறப்பட்ட விதியாகும். (46)

ஸ்திரீ பேரங்களின் சூலத்தை, விசேஷித்து. அதற்குக் கூறியுள்ள லக்ஷணத்துடனேயே செய்யவேண்டும். ஸ்திரீ பிம்பங்களின் மத்திய தண்டத்தின் விஸ்தாரமானது, மத்தியோதர விசாலத்தில் 3ல் 1 பங்கு விசாலமுள்ளதாக இருக்கவேண்டும். ஸ்திரீ பிம்பங்களின் வக்ஷா தண்டமானது, இரண்டு பக்கங்களிலும் பாஹுமூல விஸ்தாரத்தில் ஸரிபாதியளவுக்குக் குறைவாக (ஸரிபாதியளவாக) இருக்க வேண்டும். பாக்கியுள்ள (மத்திய பாகமான) ஸரிபாதியளவானது பக்கங்களின் (அகல) அளவைவிட குறைந்த அளவுடனிருக்கவேண்டும். அதன் கனமானது, அகலத்தில் ஸரிபாதியளவு இருக்கவேண்டும் அதன் சிகையானது, முன்பு கூறியுள்ளபடியே இருக்கவேண்டும். ஸ்திரீ பிம்பங்களின் சூலத்தில், கடி தண்டமானது, கடி பிரதேசத்தின் அகலத்தில் 5ல் 1 பங்கு குறைவாக இருக்கவேண்டும். அதன் நீளமானது, முன்பு கூறியுள்ளதுபோலவே இருக்க வேண்டும். இங்கு கூறப்படாத மற்றவைகளையெல்லாம்

ஶேஷாணி யாநி கார்யாணி ஸம்வே(வீ)க்ஷ்ய தத்ததௌசித்யம்
ஸமா(சா)சரேத் ॥ ௫௰ ॥

ஹஸ்தபாததலம் கர்ணௌ தாம்ரபட்டேந பந்தயேத் ।
ஸ்தா(ஸ்தா)நகம் தைவிகாம்ஶஸ்தம் ஆஸநம் (ஶ்ரயஸநம்)
மாநுஷாஶ்ரயம் ।
ஸ்தண்டிலே வேதி(வாத)யோர்வாபி மண்டூகே கல்பயேத் ப்ரஹ்ம
(ப)காம்ஶக(யே) ॥ ௫௧ ॥

ஶாஸ்த்ராண்யாலோச்ய ஶில்பீந்த்ர ஸ்ம்ருதீந்
ஸ்தூலபீஜ(ஸ்தூலஸ்ரீ பீஜாந)மாத்ரம் ஸ்தாபயேத்(ஸ்த) ।

முன்பு கூறியிருப்பதைப்போலவே கொள்ளவேண்டும். ஸ்திரீ பிம்பத்தின் சூலத்தில், பார்சுவ தண்டத்தை இணைக்கக்கூடாது. (ஸ்திரீ பிம்பங்களுக்கு பார்சுவம் கிடையாது என்பது பொருள்.) (49½)

மற்றவைகளை (மற்ற அங்கங்களை) கவனித்து உசிதம் போல், அவைகளுக்குத்தக்கவாறு செய்யவேண்டியவைகளைச் செய்யவேண்டும். (50)

ஹஸ்ததலம், பாததலம், காது, இவைகளைத் தாம்ர பட்டங்களை வைத்து (செம்புத் தகடுகளை வைத்துத் தரைந்து) வலுப்படுத்தவேண்டும்,

தேவாலயத்தில் தேவதாம்சத்திலிருக்கும் பிம்பமானது, நின்ற வடிவமாக இருக்கவேண்டும். மாநுஷாம்சத்திலிருக்கும் பிம்பமானது, உட்கார்ந்த வடிவமாக இருக்கவேண்டும். பிரும்ஹாம்சத்திலிருக்கும் பிம்பத்தை, ஸ்தண்டிலத்திலாவது, (உட்காருவதற்கு யோக்கியமாக உயர்ந்திருக்கும் ஆஸம்போன்ற திட்டாணியின் மேலேயாவது) மண்டூகாஸநத்திலாவது, கல்பிக்கவேண்டும்.

சில்பாசார்யனானவன், சூலஸ்தாபநத்திற்குத் தகுதி

[illegible]
[illegible] ॥ ௫௨ ॥

[illegible] ।
[illegible] ॥௫௩॥

[illegible] ।
[illegible] ॥௫௪॥

[illegible] ।
[illegible] ॥௫௫॥

[illegible]

யான இடத்தை நிர்ணயம் செய்து, சூலஸ்தாபனத்தினாலே ஸகல காரிய ஸித்தியும் கிடைக்கவேண்டியதற்காக லிங்க ஸ்தாபனத்தில் கூறியிருப்பதைப் போல, அதனடியில் பள்ளம் செய்து அதில் பாத்திரத்தை வைத்து, அந்தப் பாத்திரத்தில், தாதுக்களையும், நவரத்நங்களையும், ஓஷதிகளையும் வைக்கவேண்டும். (52)

புத்திமானான ஆசார்யன், சூலதண்டத்தைத் தொட்டுக்கொண்டு, மந்திரத்தை ஜபிக்கவேண்டும். ஸ்தபதியானவன் சூலமூலத்தைப்பிடித்துத் தூக்கி, அந்த சூலத்தை, அதற்காகச் செய்யப்பட்டிருக்கும் குழியில் வைத்து, அந்தச் சூலமானது ஆடாமலிருக்கும்படி கெட்டித்து ஸந்தோஷத்துடன் பூஜை செய்யவேண்டும். இவ்விதமே, இரண்டு சூலங்களையும் (தேவசூலம் தேவிசூலம் 2யும்) குழியில் வைத்து அது ஆடாமலிருக்கும்படி கெட்டிக்கவேண்டும்.

அதற்குப் பிறகு, மற்ற அங்கங்களை இணைத்து பந்தலே பநமும் செய்யவேண்டும்.

𑌕𑌁𑌨𑍍𑌦𑌁𑌰𑌁𑌗𑍁𑌗𑍍𑌗𑌁𑌲𑌁𑌗𑌁𑌡𑌂 𑌤𑌥𑌾 ।
𑌸𑌰𑍍𑌜𑌰𑌸𑌂 𑌚 𑌯𑌾𑌵𑌦𑍍𑌭𑌾𑌗𑍇𑌨 𑌹𑌾𑌸𑌯𑍇𑌤 ‖ ௫௬ ‖

𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌚𑍂𑌰𑍍𑌣𑌂 𑌤𑍈𑌲𑌸𑌰𑍍𑌪𑌿𑌰𑍍𑌭𑍍𑌯𑌾𑌂 ।
𑌪𑌾𑌕𑍇𑌨 𑌧𑌾𑌤𑍁𑌵𑌸𑍍𑌤𑍁𑌵𑌾𑌕𑍇𑌷𑌾𑌦𑍍𑌯𑌂 𑌸𑌂𑌪𑍍𑌰𑌵𑌾𑌸𑌯𑍇𑌤𑍍 ‖ ௫௭ ‖

[𑌶𑍍𑌰𑍀𑌵𑍇𑌷𑍍𑌟𑌕𑌂 𑌕𑌁𑌨𑍍𑌦𑌁𑌰𑍁𑌷𑍍𑌕𑌂 𑌗𑍁𑌗𑍍𑌗𑍁𑌲𑍁𑌂 𑌚 𑌗𑍁𑌡𑌂 𑌤𑌥𑌾 ।
𑌸𑌰𑍍𑌜𑌰𑌸𑌂 𑌚 𑌯𑌾𑌵𑌦𑍍𑌭𑌾𑌗 𑌕𑌷𑌾𑌯𑌂 𑌹𑌾𑌸𑌯𑍇𑌤𑍍 ‖

𑌏𑌤𑍇𑌷𑌾𑌂 𑌸𑌂𑌕𑍍𑌷𑍁𑌣𑌚𑍂𑌰𑍍𑌣𑌂 𑌤𑍁 𑌸𑌂𑌪𑍍𑌰𑌤𑌪𑍍𑌤𑌂 𑌪𑍇𑌷𑌯𑍇𑌤𑍍 ‖]

𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌾𑌦𑍍 𑌕𑌾𑌯𑌯𑌿𑌤𑍍𑌵𑌾 𑌤𑌤𑌃 𑌪𑌿𑌣𑍍𑌡𑌂 𑌕𑌾𑌯𑍇𑌨 𑌰𑍋𑌪𑌯𑍇𑌤𑍍 ‖]

இதி ஸ்ரீபாத்மே ஸம்ஹிதாயாம் க்ரியாபாதே ஏகசத்வாரிம்சோத்யாய: ஸமாப்த: ||

திருவட்டம் பிசின் 1. குந்துருக்கம் 2, குக்குலம் 3. வெல்லம் 4 ஸர்ஜரஸம் 5 தாது (பூங்காவி) 6 எண்ணை 7. நெய் 8. இவைகள் எட்டும், அஷ்டபந்தன திரவியங்களாம்.

இவைகளில், திருவட்டம் பிசின் 4 பங்கும், குந்துருக்கம் (பூனைக்கண் குங்கிலியம்) 3 பங்கும், குக்குலம் (குங்கிலியம்) 5 பங்கும், வெல்லம் 1 பங்கும், ஸர்ஜகம் (ஸர்ஜக்ஷாரம்) 8 பங்கும், பூங்காவி 3 பங்கும் இருக்க வேண்டும். இந்த 6 திரவியங்களையும் (தனித்தனியே நன்கு தூள்செய்து, (ஒன்றுபடச் சேர்த்து) அந்தத் தூளுடன் (வேண்டிய அளவுக்கு) எண்ணையும் நெய்யும் விட்டு (நன்கு சேர்த்து) பிசையவேண்டும். அதை மண் பாத்திரத்தில் வைத்து பசநம் செய்யவேண்டும். அது மெழுகு பதமாக இருக்கும்பொழுது, அதை எடுத்துச்

|| அத த்விசத்வாரிம்ஶோऽத்யாயஃ ||
ரஜ்ஜுபந்தநவிதிஃ ||

ரஜ்ஜுபந்தவிதிம் வக்ஷ்யே பத்மபத்ரஸ்ய வ்ருந்தவத் |
நாபிதேஶே(ஶாத்) ததூர்த்வம் யாந்த்யாஃ(யாந்தி) நாட்யஸ்த்ரீ
(வர்த்தி)ஸம்யுதாஃ ||௧||

ஸுஷும்நா தக்ஷிணே வாமே பிங்களா ச இடாபி(ச ததா) |
ஸா மத்யே வஸதா ரே ஶ்ரீவத்ஸ்யதா ரஜ்ஜுபிஃ ||௨||
[ஸதாலஸ்யயதாராஸ்வ த்ரிவர்த்யாயிதாரஜ்ஜவஃ ||]
தேஷாம் நாடீத்ரயாணாம் து யோகோ ப்ரூமத்யே
பவேத் |

சூலத்தில் பூசவேண்டும். (57)

ஸாரஸ்வதீய சித்ரகர்ம சாஸ்திரத்தில் சூலநாரு லக்ஷணமென்னும் நாற்பத்தொன்றாவது அத்தியாயம் முற்றும்.

நாற்பத்திரண்டாவது அத்தியாயம்.

ரஜ்ஜுபந்தநவிதி.

இனி ரஜ்ஜுபந்தநவிதியைக் கூறுகிறேன். இந்த ரஜ்ஜுவானது, தாமரை இலையின் அடியைப்போல (அடியிலுள்ள தண்டைப்போல) இருப்பதாகும். இது நாபி தேசத்திலிருந்து மேலும் கீழுமாகச் செல்லுவதாகும். நாபியிலிருந்து, 3 நாடிகள் மேலேசென்று, புருவமத்தியில் ஒன்று கூடுகின்றன. இந்த 3 நாடிகளில் மத்தியிலுள்ள நாடிக்கு ஸுஷும்நா நாடீ என்றும், அதன் வலது பக்கத்திலிருக்கும் நாடிக்கு பிங்களா என்றும், இடது பக்கத்திலிருக்கும் நாடிக்கு இடை என்றும் பெயர். இந்த நாடிகள் ஒவ்வொன்றும் 1 யவை அகலமுள்ளவைகளாகும். இந்த 3 நாடிகளும் 3 வர்த்திகளுடன் கூடிய (3 கயிறுகளுடன் கூடிய)

ஜெகூுா(வுாகா)ரேண உ௵ஜு(யுா)ஜம் தியுக:
நாபீஷு தக்ஷிணடு ||௩||

நேத்ராந்தம் தத்ர காந்தாரீ ஹஸ்திஜிஹ்வா ததைவ ச |
வ்ருஷா ச தக்ஷிணே கர்ணே வாமகர்ணே
யசஸ்வினீ ||௪||

யவத்ரயவிசாலேந தக்ஷிணாவர்தரஜ்ஜுநா |
திர்யக்3கதா ச தாத்ரீ வா(ஸ்யாத்)மேட்ராந்தக3த்ய
(ஸம் தத்யா)லயே ||௫||

உயெ௵ து தநயெ௵(ய௵மதா)ஸம்வீ வதாயுவா(க்ஷீ)
கா |

கயிரைப்போல இருப்பவைகளாகும். இந்த 3 நாடிகளும், நாபியிலிருந்து புருவத்தின் நடுவரையில் சென்று, புரு மத்தியத்தில் ஒன்றாகக் கூடுகின்றன. இந்த நாடிகள் மூர்தாந்தமாக (உச்சி மண்டைக்கு மேலே) குறுக்கே, மேருவைப்போல வலமாகச்சுத்தி வருகின்றன. அந்த 3 நாடிகளும் புரு மத்தியத்தில் ஒன்றுகூடி அங்கிருந்து 4 நாடிகளாகப் பிரிகின்றன. அவைகளில், காந்தாரீ என்ற நாடியானது வலது கண் வரையிலும், ஹஸ்திஜிஹ்வா என்ற நாடியானது இடது கண் வரையிலும் செல்லுகிறது. விருஷா என்ற நாடியானது வலது காதுக்கும் யசஸ்விநீ என்ற நான்காவது நாடியானது இடது காதுக்கும் செல்லுகிறது. (4)

(நாபியிலிருந்து) 3 யவை விசாலத்தில் கயிற்றாலே வலமாகத்திரிக்கப்பட்டு குறுக்காக (கீழ்நோக்கி)ச் செல்லும் நாடிக்கு தாத்ரீ என்று பெயர். இது மேட்ராந்தமாக (ஆண் குறிவரையில்) செல்லுவதாகும். (5)

நாபிமத்தியில் நடுவில் சங்கினீ என்ற நாடியானது, 4

ஶிவமூர்த்னா ஶிவதிஸம்ஜ்ஞாயா (ஶிவதந்த்ரஸம்ஜ்ஞா) பவதீ
ரோஹிணீ நாமத: ||௬||

ரஸவாஹீ ச ம்ருதங்கீ (ம்ருதங்கீ ச) ப்ருஹஸ்பதீ
ததைவ ச |

ஸப்தஸ்பர்ஶவஹா ச (வஹா வஹா) பூர்ணா ஸாப்ரு:
பாஶுதாரிணீ || ௭ ||

பாதஹஸ்தே து ஸந்த்யேஷு ஸ்திதாஹேதா
(ஹேதா:) ப்ரகீர்த்திதா(:) |

ஶதே த்ரயஸ்து ஸஹஸ்ராணி ச பஹுஸ்ரதா ||

ஶிஸ்த்ரதிஸஹஸ்ரா.த்ர (த்ர) தேஹே ஸம்ஸ்தா(:)
ப்ரஸிதா(:) |

ததாபி ப்ரதிமாயாம் து அஷ்டாவிம்ஶதிரீஷ்யதே ||௯||

ப்ரதானநாடிகாஸ்ஸங்க்யா ஸங்க்யேயா விதிநாயநா
(மாய:) |

யவை யளவிலிருக்கிறது. அந்த நாபி மத்தியிலிருந்து நாடியானது இரண்டாகப் பிரிந்து, ஒவ்வொரு பிரிவிலிருந்தும் 4, 4, நாடிகளாகப் பிரிகிறது. அவைகளின் பெயர்கள், முறையே பங்கிநீ 1. ரோஹிணீ 2 ரஸவாஹீ 3. மிருதங்கீ 4. பிருஹஸ்பதீ 5. சப்தஸ்பர்சவஹா 6. பூர்ணா 7. ஸாப்ரு 8. பாசுதாரிணீ 9. என்பனவாம். இவைகள் பாதம் ஹஸ்தம் முதலிய ஸந்திகளில் இருப்பவைகளென்று கூறப்பட்டிருக்கின்றன ... ... (8)

சரீரத்தில் எழுபத்திரண்டாயிரம் (72000) நாடிகள் கூறப்பட்டிருக்கின்றன. அவைகளிலிருந்து பிரிந்த நாடிகள் எண்ணற்றவைகளாம். ஆயினும் பிரதிமைகளுக்கு 28 நாடிகளே கூறப்பட்டிருக்கின்றன. (9)

ஜீவபுதாஙாஷ்டநாடீ(ஹ்யஃ) ஷூஹிஷாஷ்டாஷ்டநாடிகா(ஃ) ||மி||

தைவெபுஷிதைஷூ ஸவபூாஜெ(ஃ) கூறயெ ஊவி ஶசிதிகா(லகம்) |

நாஜிகொஙஷஜெஷூ(ஷ வ)உபூஉாஂஸசதிவுஉவொாஹு வ ||மிக||

யவஷூஊாணவிஷூலாஙம் ஙஜூவா(ஊ)வாதிகெ(யெசுஃ) உஜூஃ |

ஙஜூபயம் தா ஸஂமூஜஹூ ஶதிவாசு(லூம்) வஜெஸா (யூா)வஜுவெநஂ(யெசுஃ) ||மிஉ||

வஷூாஷீஙரூகா(கம்) ஙஜூ வஸயெசு ஷீக்ஷிணா வஜுகஃ (தம்) |

புத்திமானுக இருப்பவன், பிரதானமான நாடிகளை விதியுடன் நன்கு கல்பித்துக்கொள்ளவேண்டும். நீண்டு விரிந்த 8 நாடிகளில் ஒவ்வொரு நாடியிலிருந்தும் 8, 8, நாடிகள் பிரிந்து செல்லுகின்றனவாம். அந்த (8×8=64) நாடிகளாலே சூலத்தின் ஸகல அங்கங்களையும் சுத்திக் கட்டவேண்டும். (10½)

பழுத்த தேங்காயின் மேல் மட்டையிலுள்ள மாம்ஸம் (நாருடன் ஒட்டிக்கொண்டிருக்கும் சோறு) தூசிகள் இவைகளை நீக்கிவிட்டு, நாரை எடுத்து, அந்த நாரினுலே, 1 யவை விஸ்தாரத்தில், அழுத்தமான கயிற்றைத் திரிக்க வேண்டும். அவ்விதமான இரண்டு கயிறுகளைச் சூலத்தின் மேலே (இடைவிடாது) நெறுக்கிக்கட்டி, அதன்மேலே உபலேபநம் (மிருல்லேபநம்) செய்யவேண்டும். (கீழே கூறியபடி) இரண்டு கயிறுகளைச்சுற்றிய பின்பு, சுற்றிய விடங்களில் இடுக்குகளில்லாமல் (மற்றொருமுறை) கயிற்றை

रज्जुभिः पद्मपार्श्वोत्थाः शिरा [illegible] (ण)
बन्धयेत् ॥ १३ ॥

नाभिचक्रात्तु समारभ्य नाडिका ।
[illegible] भवेत् पद्ममष्टपत्रं हि रज्जुना ॥१४॥

[illegible] जीवस्थानमनाहतम् ।
तत्पद्मं [illegible] वा संज्ञाप्य [illegible] ॥१५॥

[नाभिचक्रावसानानां भवेत् [illegible] ।
[illegible] रज्जुना ॥

[illegible] जीवस्थानमनाहतम् ।
[illegible] ॥]

इति श्रीसारस्वतीये चित्रकर्मशास्त्रे रज्जुबन्धनविधिर्नाम
द्विचत्वारिंशोऽध्यायः समाप्तः* ॥

வலமாகச் சுத்தவேண்டும். வலது பக்கத்திலும் இடது பக்கத்திலும் இருக்கும் நாடிகளை, அதற்கேற்ற வழியுடன் வைத்து அதன்மேலே கயிற்றால் கட்டவேண்டும். (13)

ஹிருத்பத்மமானது, 8 இதழ்களும், 2 நாளங்களுமுடையதாகும். இவ்விதமாக ஹிருத்பத்மத்தை கயிற்றினாலே கல்பிக்கவேண்டும். அதன் நாளங்கள் (காம்புகள்) நாபிவரையில் இருக்கவேண்டும். இந்த ஹிருத்பத்மத்தை ஹிருதயஸ்தானத்தில் வைத்து, ஸுஷும்னு நாடியுடன் இணைக்கவேண்டும். இந்த ஹிருத்பத்மமே ஜீவனின் இருப்பிடமாகுமென்று (யோகிகள்) கூறுகின்றனர். மூலமந்திரத்தை ஜபித்துக்கொண்டு, இந்த ஹிருத்பத்மத்தை வைக்கவேண்டும். (அதன் பிறகு ரஜ்ஜுபந்தனம் செய்து) அதற்குமேலே உபலேபனம் (மிருல்லேபனம்) செய்ய வேண்டும். (15)

ஸாரஸ்வதீய சித்திரகர்ம சாஸ்திரத்தில் ரஜ்ஜுபந்தநவிதி என்னும் நாற்பத்திரண்டாவது அத்தியாயம் முற்றும்.

---

*अत्रैतदवधेयम् — रज्जुबन्धनविधौ [illegible]

𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌾 𑌚𑌤𑌰𑍍𑌵𑌿𑌂𑌶𑌤𑌿𑌨𑌾𑌡𑍍𑌯𑌃, 𑌶𑌾𑌂𑌡𑌿𑌲𑍍𑌯𑍋𑌪𑌨𑌿𑌷𑌦𑌿 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑌿𑌤𑌾 𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 । 𑌅𑌤𑌃 𑌶𑌾𑌂𑌡𑌿𑌲𑍍𑌯𑍋𑌪𑌨𑌿𑌷𑌦𑍋𑌕𑍍𑌤𑌂 𑌵𑌿𑌷𑌯𑍋𑌽𑌤𑍍𑌰 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑍍𑌯𑌤𑍇 ॥ 𑌇𑌤𑌿—

𑌨𑌾𑌭𑍇𑌰𑍍𑌮𑌧𑍍𑌯𑍇 𑌮𑌤𑌾 𑌨𑌾𑌡𑍍𑌯𑌸𑍍𑌤𑌿𑌸𑍍𑌰𑍋 𑌹𑍃𑌦𑌯𑌸𑌂𑌮𑌤𑌾𑌃 ।
𑌸𑍁𑌷𑍁𑌮𑍍𑌨𑌾 𑌮𑌧𑍍𑌯𑌮𑌾 𑌦𑌕𑍍𑌷𑍇 𑌪𑌿𑌂𑌗𑌲𑍇𑌡𑌾 𑌤𑍁 𑌵𑌾𑌮𑌗𑌾 ॥ ௧ ॥

𑌤𑌦𑌨𑍍𑌤𑌰𑌾𑌲𑌵𑌰𑍍𑌤𑍍𑌯𑍋 𑌨𑌾𑌡𑍍𑌯𑌃 𑌪𑍃𑌷𑍍𑌠𑌮𑌧𑍍𑌯𑍇𑌷𑍁 𑌸𑌂𑌮𑌤𑌾𑌃 ।
𑌗𑌾𑌨𑍍𑌧𑌾𑌰𑍀 𑌹𑌸𑍍𑌤𑌿𑌜𑌿𑌹𑍍𑌵𑌾 𑌚 𑌪𑍂𑌷𑌾 𑌚𑍈𑌵 𑌯𑌶𑌸𑍍𑌵𑌿𑌨𑍀 ॥ ௨ ॥

𑌅𑌲𑌮𑍍𑌬𑍁𑌷𑌾 𑌕𑍁𑌹𑍂𑌶𑍍𑌚𑍈𑌵 𑌶𑌂𑌖𑌿𑌨𑍀 𑌸𑌪𑍍𑌤𑌮𑍀 𑌸𑍍𑌮𑍃𑌤𑌾 ।
𑌗𑌾𑌨𑍍𑌧𑌾𑌰𑍀 𑌸𑌵𑍍𑌯𑌨𑍇𑌤𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌾 𑌜𑌿𑌹𑍍𑌵𑌾𑌗𑍍𑌰𑌾 𑌹𑌸𑍍𑌤𑌿𑌜𑌿𑌹𑍍𑌵𑌿𑌕𑌾 ॥ ௩ ॥

𑌪𑍂𑌷𑌾 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌕𑌰𑍍𑌣𑌾𑌨𑍍𑌤𑌾 𑌵𑌾𑌮𑌾𑌨𑍍𑌤𑌾 𑌚 𑌯𑌶𑌸𑍍𑌵𑌿𑌨𑍀 ।

கவனிப்பு :— ரஜ்ஜுபந்தநவிதியில் முக்கியமாக 28 நாடிகள் கூறப்பட்டிருக்கின்றன. ஆயினும் இந்த நூலில் அவைகள் யாவும் கூறப்படவில்லை. எனவே அந்த 28 நாடிகளும், மற்றுமுள்ள பல நூல்களைப்பார்த்து எடுத்து, இங்கு கொடுக்கப்பட்டிருக்கின்றன:—

நாபியிலிருந்து மேலேசென்று புருவத்தின் மத்தியில் ஒன்றுசேரும் நாடிகள் 3. அவைகளில் நடுவிலுள்ள நாடிக்கு ஸுஷும்னை என்று பெயர். அதன் வலது பக்கத்திற்செல்லும் நாடிக்கு பிங்களை என்று பெயர். இடது பக்கத்தில் செல்லும் நாடிக்கு இடை என்று பெயர்.

அந்த நாடிகள், ப்ருமத்தியத்திலிருந்து 7 கிளைகளாகப் பிரிந்து பற்பல அங்கங்களுக்குச் செல்லுகின்றன. அந்த 7 நாடிகளுக்கும் முறையே, காந்தாரீ 1. ஹஸ்திஜிஹ்வா 2; பூஷா 3. யசஸ்விநீ 4. அலம்புஷா 5. குஹூ 6. சங்கிநீ 7. என்று பெயர்.

இந்த நாடிகளில், காந்தாரீ (1) என்ற நாடியானது சரீரம் முழுமையும் செல்லுவதாகும், ஹஸ்திஜிஹ்வா (2)

அலம்புஷா மேட்ரமார்கா து குதாக்ரா ச குஹூர்மேட்ரதா ||

ஶங்கினீ நாபியோஞ்ஞா ஶம்பவானா ததஸ்து ஸா |
ப்ரயாந்நாபிமத்யம் மேட்ரமூலஸ்ஸம்பவந்தி || ௫ ||

தஸ்மாச்சாகா விநிர்கத்ய நாட்யோऽஷ்டாதஶ ஸ்ம்ருதா: |
விமலா கோஷிணீ ப்ருத்வீ வாஹினீ தேஜனீ ததா || ௬ ||

வாயஸீ கமனீ சைவ மதனீ ரோஹிணீ ததா |
ரஸவதீ ம்ருதங்கீ ச ஸ்ரம்ஸினீ ச ததைவ ச || ௭ ||

ஸப்தஸ்பர்ஶாங்கீ பூர்ணா ச ஸம்ஹாரீ ச ஸவாரிணீ |
வாஹினீ தாமஸீ ப்ராப்தா மேட்ரமூலஸமுத்பவா: || ௮ ||

என்ற நாடியானது நாக்கு வரையில் செல்லுகிறது. பூஷா (3) என்ற நாடியானது வலது காதுக்குச் செல்லுகிறது. யசஸ்விநீ (4) என்ற நாடியானது இடது காதுக்குச் செல்லுகிறது. அலம்புஷா (5) என்ற நாடியானது 'மேட்ரத்திற்கு (ஆண் குறிக்கு)ச் செல்லுகிறது. குஹூ (6) என்ற நாடியானது குதம் (ஆஸநவாய்) வரையில் செல்லுகிறது. சங்கிநீ (7) என்ற நாடியானது நாபிமத்தியம் வரையில் செல்லுகிறது, அந்த சங்கிநீ என்ற நாடியானது நாபியிலிருந்து கீழ்நோக்கித் தொங்கிக்கொண்டிருப்பதாகும்.

(நாபியிலிருந்து புருமத்தியம் வரையில் சென்று அங்கு ஒன்றுசேருவதாகக் கூறப்பட்ட) முக்கியமான 3 நாடிகளின் நாளமானது, மேட்ரமூலம் (ஆண் குறியின் அடிப்பக்கம்) வரையில், தொங்கிக்கொண்டிருப்பதாகும். (5)

அந்த நாடியின் அடியிலிருந்து 18 நாடிகள் பிரிந்து செல்லுகின்றன. அவைகளுக்கு முறையே, விமலா 1. கோஷிணீ 2. ப்ருத்வீ 3. வாஹிநீ 4. தேஜநீ 5. வாயஸீ 6. கமநீ 7. மதநீ 8. ரோதிநீ 9. ரஸவாதீ 10. ம்ருதங்கீ 11. ஸ்ரம்ஸிநீ 12. சப்தஸ்ப்ருசாங்கீ 13. பூர்ணு 14. ஸம்ஹாரீ 15. ஸவாரிணீ 16. வாஹிநீ 17. தாமஸீ 18. என்று பெயர்களாம்.

(8)

தாஸ்வாத்யா நாட்யஷ்ஷட் ச தக்ஷிணம் பாதமாஶ்ரிதா: ।
அந்த்யாஸ்து ஷண்ணாட்யஸ்து வாமபாதமுபாஶ்ரிதா: ॥௯॥

மத்யா: ஷட் தண்டபார்ஶ்வாப்யாம் பாஹுமூலம் ஸமாஶ்ரிதா: ।
கமநீ மதநீ சைவ ரோதநீ தக்ஷபாஹுகா ॥ ௰ ॥

ரஸவதீ ம்ருதங்கீ ச ஸ்ரம்ஸிநீ வாமபாஹுகா ।
பாஹுமூலம் ஸமாவ்ருத்ய தலபர்யந்தமங்குலா: ॥௰௧॥

ஸம்மீல்ய தந்த்ராணி மணிபந்தாவ்ருதாநி ச ।
அஷ்டாவிம்ஶதிஸங்க்யாகா நாட்யஸ்ஸமீரிதா: ॥ ௰௨ ॥

ப்ரதாநநாட்யஸ்ஸ்ம்ருதா: ஸூத்ரே ப்ரதிமாதிஷு ।

அந்த 18 நாடிகளில் முதலில் கூறப்பட்ட 6 நாடிகள், வலது காலுக்குச் செல்லுகின்றன. முடிவில் கூறப்பட்ட 6 நாடிகள் இடது காலுக்குச் செல்லுகின்றன. நடுவில் கூறப்பட்ட 6 நாடிகளும், சூல தண்டத்தின் இரு பக்கங்களின் வழியே மேலேசென்று பாஹு மூலங்களை அடைகின்றன. அவைகளில். கமனீ 1. மதனீ 2. ரோதனீ 3. என்ற 3 நாடிகளும் வலதுபக்கம் புஜமூலத்தை அடைகின்றன. ரஸவாதீ 1. ம்ருதங்கீ 2. ஸ்ரம்ஸினீ 3. என்ற 3 நாடிகளும் இடதுபக்கம் புஜமூலத்தை அடைகின்றன. அவைகள் (ஒன்று சேர்ந்து) பாஹு மூலத்தைச் சுற்றிக்கொண்டு, அங்கிருந்து, தலாந்தம் வரையில் சென்று (உள்ளங்கையைச் சுற்றிக்கொண்டு) மணிக்கட்டு வரையில் வந்து அங்கு ஒன்றாகக்கூடி, மணிக்கட்டைச் சுற்றிக்கொள்ளுகின்றன. (கால்களில் செல்லும் நாடிகளும் இவ்விதமே மணிக்கட்டைச் சுற்றிக்கொள்ளுகின்றன என்று ஊஹித்துக் கொள்ளவேண்டும்.) இவ்விதம் 28 நாடிகள் முக்கியமாகக் கூறப்பட்டிருக்கின்றன. முக்கியமான இந்த 28 நாடிகளையும், பிரதிமைகளுக்குச் செய்யப்படும் சூலத்தில் கல்பித்துக்கொள்ளவேண்டும்.

|| 𑌅𑌥 𑌤𑍍𑌰𑌿𑌚𑌤𑍍𑌵𑌾𑌰𑌿𑌂𑌶𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ||

𑌮𑍃𑌤𑍍𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌵𑌿𑌧𑌿𑌃 ||

𑌅𑌥 𑌮𑍃𑌤𑍍𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌂 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑍇 𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌵𑌿𑌧𑌿𑌨𑌾𑌽𑌧𑍁𑌨𑌾 |
𑌶𑍁𑌦𑍍𑌧𑌦𑍇𑌶𑍇 𑌮𑌨𑍋𑌜𑍍𑌞𑍇 𑌚 𑌅𑌶𑍋𑌷𑍍𑌯𑌸𑍍𑌵𑌾𑌦𑍁𑌤𑍋𑌯𑌕𑍇 ||

𑌪𑍁𑌣𑍍𑌯𑌤𑍀𑌰𑍍𑌥𑍇 𑌨𑌦𑍀𑌯𑍁𑌕𑍍𑌤𑍇 𑌦𑍀𑌰𑍍𑌘𑌿𑌕𑌾𑌯𑌾𑌂 𑌵𑌿𑌶𑍇𑌷𑌤𑌃 |
𑌤𑌟𑌾𑌕𑍇 𑌵𑌾 𑌮𑍃𑌦𑌂 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌂 𑌶𑍍𑌵𑍇𑌤𑌂 𑌵𑌾 𑌤𑌾𑌮𑍍𑌰𑌾𑌭𑌮𑍍
(𑌸𑍁𑌵𑌰𑍍𑌣𑌾)𑌭𑌮𑍍 || ௨ ||

𑌕𑍃𑌷𑍍𑌣𑌂 𑌵𑌾 𑌪𑍀𑌤𑌰𑌕𑍍𑌤𑌂(𑌵𑌰𑍍𑌣𑌂)𑌵𑌾 𑌸𑌂𑌗𑍃𑌹𑍍𑌯𑌾𑌹𑍃𑌤𑍍𑌯
𑌸𑍍𑌥𑌾𑌪𑌯𑍇𑌦𑍍𑌬𑍁𑌧𑌃 |
𑌪𑌾𑌤𑍍𑌰𑌸𑍍𑌥𑌂 𑌪𑌙𑍍𑌕𑌵𑌤𑍍 𑌶𑍋𑌷𑍍𑌯 𑌯𑌥𑌾𑌕𑍍𑌷𑍀𑌰𑌵𑌹𑌾𑌦𑍍
𑌭𑌵𑍇𑌤𑍍 || ௩ ||

[𑌪𑌾𑌤𑍍𑌰𑌸𑍍𑌥𑌂 𑌪𑌙𑍍𑌕𑌵𑌤𑍍 𑌶𑍋𑌷𑍍𑌯 𑌯𑌥𑌾𑌃𑌕𑍍𑌷𑍀𑌰𑌕𑌪𑌾𑌂
𑌜𑌲𑍈𑌃 |]

நாற்பத்திமூன்றுவது அத்தியாயம்.

மிருத் ஸம்ஸ்காரவிதி.

இனி மிருத் ஸம்ஸ்கார லக்ஷணத்தை (மண்ணைச்சுத்தி செய்யும் முறையை) விதியுடன் கூறுகிறேன். சுத்தமாகவும் மனோஹரமாகவும் இருக்குமிடத்திலுள்ளதும், வற்றாத ஜலமுடையதுமான புண்ணியதீர்த்தம், நதி, ஏரி அல்லது ஓடை, குளம் ஆகிய இடங்களிலிருந்து, சிறந்ததாக இருக்கும் மண்ணை எடுத்து (நல்ல இடத்தில்) வைத்துக்கொள்ள வேண்டும். அப்படி எடுக்கப்படும் மண்ணானது, வெளுப்பு, சிவப்பு, கருப்பு, மஞ்சள், என்று நான்குவிதமான நிற முடையவைகளாம். (2½)

முன்பு எடுத்துவைக்கப்பட்ட மண்ணை (ஜலத்தில் கலக்கி புதுத் துணிகொண்டு வடிக்கட்டி)ப் பாத்திரத்தில் வைத்து, நீர் சுண்டும் வரையில் உலர்த்தவேண்டும். பிறகு நாற்பால் மரப்பட்டையின் கஷாயத்தையும்

கதி³ரார்ஜுநகஷாயை꞉ தாம் ம்ருத³ம் யோஜ்ய மர்த³யேத் |
பிண்ட³ம் க்ருத்வா (பிண்டா³காரக்ஷமம்) யாவத் தாவத்
ஸம்ஶோஷ்ய தத்வாந꞉ ॥ ௪ ॥

த்ரிப²லைர்மர்தி³தைஸ்தோயைஸ்ஸம்யக்(ஸம்யக்)ஶோஷயேத் |
ஹஸ்தரேகா²ங்கிதம்(யுதம்) பிண்ட³கம் (து) தத் ஸ(ம)ஸஞ்ஜ்ஞகம் ॥ ௫ ॥

ஸார்தா⁴ங்கு³லேந க(த)நஸம்யுக்தா(ஸம் ரூபா)ஜ்ஜ்யோ(க)ல்பிதே |
ப்ரஸ்த²(ஸ்த²)சூர்ணப்ரமாணம் தத் சூர்ணயோக³ம் ப்ரவக்ஷ்யதே ॥ ௬ ॥

ஸிதபாஷாணகம் சூர்ணம் ம்ருத்துர்யாம்ஶஸம்யுதம் |

கருங்காலி, மருது, இந்த மரப்பட்டையின் கஷாயத்தையும் விட்டுப் பிசைந்து மர்திக்கவேண்டும். பிறகு அது பிண்டாகாரமாகச் செய்யக்கூடிய அளவுக்கு அதைக் காய வைக்கவேண்டும். பின்பு அந்த மண்ணில் திரிபலா கஷாயத்தை விட்டு நன்கு மர்தித்து நீர் சுண்டும்படி உலர்த்தவேண்டும். அந்த மண்ணானது பிண்டாகாரமாகச் செய்யக்கூடியதாகவும், அந்த பிண்டத்தில் ஹஸ்த ரேகைகள் நன்கு தெரியும்படியும் இருக்கவேண்டும். இத்தகைய ம்ருத் பிண்டத்திற்கு ஸமம் என்று பெயர். அத்தகைய பிண்டத்தின் சுத்தளவானது ½ (11) அங்குல மிருக்கவேண்டும். இத்தகைய ம்ருத் பிண்டமானது, ஒரு படி யளவுடைய பொடியினாலே செய்யப்படுவதாகும். இனி சூர்ண யோகத்தைக் கூறுகிறேன். (6)

பிறகு வெண்மையான கூழாங்கல்லை நன்கு பொடித்து அந்தப் பொடியை, மண்ணில் 4ல் 1 பங்கு எடுத்து

உதக(க்வாத)யோகேந த்ரிபலாயாஸ்தோயேந மர்தநம் தசாஷ்ட ஸப்தாஹம் வா
மர்தயேத் ॥ ௭ ॥

நிஷ்பிஷ்ய (ஸஞ்சூர்ண்ய) யவகோதூமமாஷம் ச விதி
தச்சூர்ணகம் (பாதாம்ஶஸஹிதம்) ।
ஆபாகாம்ஶேந ஸம்யோஜ்ய நாரிகேளபல்லவோதகை: ॥

ததைவ (பாதாம்ஶ) யோகேந ஸஞ்சூர்ண்ய குக்குலு
(ஸர்ஜ)ஷோடஶாம்ஶம்(ஸமம்) யோஜயேத் ।
ஸ்ரீவேஷ்டகம் பிடம் குக்குலு ஸர்ஜரஸம் ॥ ௯ ॥

சூர்ணம் விநிதாய யோஜ்யம் உதகயோகேந கடுத்ரய
த்ரவை: ।
ஸர்ஜ்ஜரஸ சூர்ணம் ஆதபாம்ஶேந ஸம்யோஜயேத் ॥

மண்ணுடன் சேர்த்து, திரிபலாதோயத்தை விட்டு 10, 8, அல்லது 7 நாள், மர்திக்கவேண்டும். (திரிபலா—கடுக்காய், நெல்லிக்காய், தானிக்காய், தோயம்—இம் மூன்றையும் பொடித்து ஊரவைத்த நீர், அல்லது கஷாயம்) (7)

பிறகு, யவை (யவை என்னும் தானியம் அல்லது மூங்கிலரிசி) கோதுமை, காயாம்பூ நிறமுள்ள உளுந்து இவைகளை நன்கு பொடிசெய்து, அந்தப் பொடியை மண்ணில் 8ல் 1 பங்கு எடுத்து, அதை அந்த மண்ணுடன் கூட்டி, இளநீர் அல்லது தேங்காயின் மேலேயுள்ள மட்டையின் சாறுவிட்டு, நன்கு மர்திக்கவேண்டும். (8½)

பின்பு, ஸ்ரீவேஷ்டகம் (திருவட்டம் பிசின்) குக்குலம் (குக்கில்) பிடம், (பூனைக்கண் குங்கிலியம்) ஸர்ஜ ரஸம் (குங்கிலியம்) இவைகளை நன்கு பொடிசெய்து (ஒவ்வொன்றிலும்) மண்ணில் 16ல் 1 பங்கு சேர்த்து, அதில் கடுத்ரய த்ரவத்தை (சுக்கு-மிளகு-திப்பிலி இம் மூன்றையும் பொடிசெய்து ஊரவைத்த ஜலத்தை) விட்டு

ததஃ க்ஷீரவ்ருக்ஷத்வக்த்ரவ்யை: பக்வாத் குடம் பஞ்ச
தசாம்சகம் ।
கபித்தபலநிர்யாஸசூர்ணிதோயேன மர்தயேத் ॥ ११ ॥
[ஶ்ரீவேஷ்ட குக்குலு ஸர்ஜரஸஸம்யுதை: ॥
மதூகேந த்ரிபலாஸ்ரேஷ்டபாம்சேந மர்தயேத்
*கடுகத்ரயை: ।
ரஜநீகடுகசூர்ணைஸ்து தசமாம்சேந ஸம்யுதம் ॥
ததஃ க்ஷீரவ்ருக்ஷத்வக்த்ரவ்யை:‡ குடம் பஞ்சதசாம்சகம் ।
கபித்தபலநிர்யாஸசூர்ணிதோயேன மர்தயேத் ॥]

மர்திக்கவேண்டும்.[1] (9½)

அதன் பிறகு, மஞ்சள், கடு (கடுகத்திரயம்.சுக்கு-மிளகு திப்பிலி) இவைகளைத் தூள்செய்து, அந்தத்தூளை மண்ணில் 10ல் 1 பங்கு கலந்து, அதில், தேன், பால், நெய் இவைகளை விட்டுப் பிசைந்து மர்திக்கவேண்டும்.

அதற்குப் பிறகு[2] மண்ணில் 15ல் 1 பங்கு வெல்லத்தைப்பொடித்து, மண்ணுடன் கூட்டி, அதில் கபித்தபலம் (விளாம்பழம்) நிர்யாஸம் (விளாம்பிசின்) இவைகளைப் பொடிசெய்து போட்டு ஊரவைத்த ஜலத்தினுலே மர்திக்க வேண்டும். (11)

*தயிஸம்யுதம் இதி க்ரந்தாந்தரே த்ருஶ்யதே ।

‡பக்வாத் பஞ்சதசாம்சகை: । கபித்தபலநிர்யாஸ அம்ருணே
தைலேந மர்தயேத் ॥ இதி க்ரந்தாந்தரபாட: ।

1. தயிரை விட்டு மர்திக்கவேண்டும் என்று மற்ருெரு நூலில் கூறப்பட்டிருக்கிறது.

2. மண்ணில் 15ல் 1 பங்கு, விளாம்பழம், விளாம்பிசின் இவைகளின் பொடியை, மண்ணுடன் சேர்த்து, நல்ல எண்ணை விட்டு மர்திக்கவேண்டும் என்பது மற்ருெரு நூலிலுள்ள பாடம்.

ஹரிதாலகாஸீஸ்யாஞ்சகுஙகுஷ்டரஸவர்ணம் |
அஷ்டகஸங்கத்யா சீலமரமிஷ்ஏணைதகு ||௧௪||

[ஹரிதாலசேயஸ்ஞ்சகுங்குஷ்டலைக்ஷத்ரஸுவர்ணம் |
அஷ்டகஸங்கத்யா சீலமரமிஷ்ரிணா தகுஷ ||]

யதாலாபம் து ஸம்ஹ்ருத்ய ஸர்வத்ரமேஹலங்கவிதம் |
தயிஷ்லேக்ஷாணாஸாவீஜமிஷ்டசாஸ்ஸஷ்டெசு ||௧௫||

பின்பு, குங்குஷ்டம் (வாஸனைகோஷ்டம்) அரிதாரம் இவ்விரண்டுகளின் பொடி, சந்தனம், கர்ப்பூரம் (பச்சைக் கர்ப்பூரம்) அகில். கோரோசனை, இவைகளை, மண்ணில் 30ல் 1 பாகம் சேர்த்து, அதனிஸ்நேகத்தை (காசாஞ் செடியின் அல்லது குதம்பை எண்ணையை) விட்டு மர்திக்க வேண்டும்.

அத்துடன் கிடைத்த வரையில், தங்கப்பொடியும் வெள்ளிப் பொடியும் சேர்த்துக்கொள்ளவேண்டும். (13)

மடு (வற்றாத ஜலமுடைய ஓடை) 1, நதி 2, (கரயான்) புத்து 3, நண்டுவளை 4, வயல் அல்லது காசி முதலிய புண்ணியக்ஷேத்திரம் 5, கலப்பையின் கொழு 6, யானையின் தந்தம் 7, ஸமுத்திரம் 8, மலை 9, பசு அல்லது காளையின் கொம்பு 10, இவைகளிலிருந்து எடுக்கப்படும் மண்களுக்கு தசமிருத்திகை என்று பெயர். இந்த மண்களை கிடைத்த வரையில் ஸம்பாதித்து, அவைகளுடன் வாஸனை ஸாமான் களையும் சேர்த்து விளாம்பிசின் ஜலத்தைவிட்டு (இறுகிய) தேனைப்போல கசடில்லாமல் மிருதுவாக இருக்கும்படி நன்கு மர்திக்கவேண்டும். (15)

[शिलावच्छ्लक्ष्णां कपित्थनिर्यासजलैर्मर्दयेत् ॥]

*मृदा नालीसव्याप्तिरक्तेनाशित ... ... ।
... ... मृदं पक्वात् नारिकेलफलं तु वा ॥१६॥

क्षोदं व्याप्तसारं श्रमाप्लुतं नियोजयेत् ।
पक्वान्नारिकं भवेत् रज्जु... ... ... ॥१७॥

... ... परिष्टाद्वै त्रिद्व्यङ्गुलेन तु ।
रज्जुना वेष्टयेत् पश्चात् शोषणैश्चैव
तत्परः ॥१८॥

அவ்விதம் மர்திக்கப்பட்ட தசமிருத்திகையை 5 நாள் ஊறவைக்கவேண்டும். பிறகு பழுத்த தேங்காயின் சாற்றை எடுத்து அந்த மண்ணின் மேலே 1, 1½, அல்லது 2 அங்குலம் நிற்கும்படி தேங்காய்ச் சாற்றை விட்டு மர்திக்க வேண்டும். அவ்விதம் மர்தித்ததை, மண்ணுக்கு 4ல் 1 பங்கு கூட்டி நன்கு மர்தித்து, அந்த மண்ணை, ரஜ்ஜுபந்தநத்தின் மேலே பூசவேண்டும். அதன் பிறகு (அவசியமான இடங்களில்) மறுமுறை ரஜ்ஜுபந்தநம் செய்து அதைக் காயும்படி வைக்கவேண்டும். (18)

---

*16–18 श्लोकत्रयमेवं प्रकारान्तरेणापि पठनीयं भाति ।

मर्दितं पोषयेत् तत्र यावत् पञ्चदिनावधि ।
पक्वात्तु नारिकेलस्य वल्कलस्यैव मूलस्य तु ॥

सार्धैकाङ्गुलं सार्धाङ्गुलं वा द्व्यङ्गुलं
तु वा ।
लिप्त्वा तु मृदश्चतुर्थांशं युक्त्वा संमर्दयेत् पुनः ॥

रज्जुबन्धोपरिष्टात्तं लेपयेत् तद् यथाविधि ।
रज्जुना वेष्टयेत् पश्चात् शोषणं प्रापयेद्
बुधः ॥

[illegible] ॥௧௯॥

[illegible] ॥௨௰॥

[illegible] ॥௨௧॥

[illegible] ॥௨௨॥

ரஜ்ஜுபந்தமும் மிருத்லேபநமும் 3 விதமாகும். (3 தடவை செய்யவேண்டியதாகும்) மிருத்லேபநமானது, ஜாங்கலம், அநூபம், மிச்ரம் என்று 3 விதமாகும். இது அதன் கனத்தினலாகும்.

சூலத்திற்கு மேலேயுள்ள கனத்தை 4, (6) பாகங்களாகக்கொள்ளவேண்டும். அவைகளில் 1 பாகம், 2 பாகம் 3 பாகம், இவைகள் முறையே, அநூபம் என்றும் மிச்சிரம் என்றும் ஜங்கலம் என்றும் கூறப்படும். (20)

இவைகள் நீங்கலாக உள்ள கனத்தை கல்கத்தினலே சரியாகச் செய்யவேண்டும். மிகுதியான இடங்களில் பூச வேண்டிய கல்கமானது பருத்திப்பஞ்சுடன் கூடியதாக இருக்கவேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. (21)

வயல் (புண்யக்ஷேத்திரம்) நதியின் மத்தியபாகம், குளத்தின் மத்தியபாகம், ஏரி அல்லது ஓடையின் மத்திய பாகம், இந்த இடங்களில், நல்ல சுவையுள்ள ஜலமிருக்கு

ஸாந்த்³ராமருணாம் து த்³ரவ்யாஹாம் ஶாலவச்ச கர
மிஶ்ரிதாம் ।

[ஸாந்த்³ராம் சூர்ணாம் து த்³ரவ்யாஹாம் ஶாலீம் ச ஸகர
மிஶ்ரிதாம் ।]

ஸகர்கராம் க்³ருஹீத்வைவம் ப்ரக்ஷால்ய விமலீக்ருதாவபும் ॥

சூர்ணீக்ருத்ய ததஶ்சூர்ணம் த்ரிப²லாஷி(ஶ்ரி)த
வாரிணா ।

பிண்டீ³க்ருத்ய து ஸம்ஶோஷ்ய பஶ்சாந்நிர்யாஸ
வாரிணா ॥ ௨௪ ॥

நிர்யாஸஸாரம்(ஸ்ய து) பஞ்சாணம்(ஞ்சாம்ஶம்)
பஞ்சார்த⁴ம் ஷட்³கு³ணம் க்ரமாத் ।

ஸ்ரவஸ்வச்ச²லேகநாமாநம் த்ரிவித⁴மிஷ்யதே ॥௨௫॥

வேஷ்டயேச்ச²ஸ்வச்ச²லேகாக்²யம் நவநீதம் யதா² ததா² ।

மிடத்தில், ஊஷரமண் (உப்பு மண்) கலப்பில்லாத இடமாகப் பார்த்து, உறுதியாகவும், வெண்மையாகவும், கனமாகவும், மணலுடனும் இருக்கின்ற கூழாங்கற்களை எடுத்து அதிலுள்ள கூழாங்கற்களை நன்கு ஜலத்தில் அலம்பி சுத்தம்செய்து எடுத்து, அவைகளை நன்கு பொடி செய்து, அந்தப் பொடியில் த்ரிபலா கஷாயத்தை விட்டுப் பிசைந்து, பிண்டமாகப்பிடித்து, பின்பு அதை உலர்த்த வேண்டும் அதன் பிறகு, அந்த மண்ணை (நறும்) பிசின் ஜலம் விட்டு நன்கு மர்திக்கவேண்டும். (24)

பிசினுடன் ஜலத்தை 3 விதமாகக் கலப்பதாம். அவைகள் முறையே, பிசினுக்கு 5 பங்கு 5½ பங்கு 6 பங்கு ஜலத்துடன் கூடியவைகளாம். இவைகளுக்கு முறையே, ஸ்ருவம் என்றும் ஸ்வச்சம் என்றும் லேகம் என்றும் பெயர். (25)

[illegible]
[illegible] ||௨௬||

[illegible] |
[illegible] || ௨௭ ||

[illegible] |
[illegible] || ௨௮ ||

[[illegible] |
[illegible] ||

[illegible] |]

[illegible] |

இவைகளில் ஸ்வச்சம், ஸேகம், இந்த இரண்டுவிதத்திலும் ஆகிய பிசின் ஜலத்தைவிட்டு, (ஊரவைத்ததை) வெண்ணெபோல அரைக்கவேண்டும். பிறகு, அத்துடன் பருத்திப் பஞ்சின் துகள்களைச் சேர்த்து நன்கு மர்திக்க வேண்டும். அந்த மண்ணைத் திரட்டி ஒடித்தால், ஒடித்த வாயானது, ஒடித்த வாழைத் தண்டைப்போல இருக்க வேண்டும். இத்தகைய கல்கத்தையே பூசவேண்டும், (இது முதலில் பூசவேண்டிய கல்கமாகும்) (26½)

கீழே கூறப்பட்ட கல்கத்துடன், 3 3½ அல்லது 4 பங்கு, பிசின் ஜலத்தை விட்டு நன்கு மர்தித்து, அந்த கல்கத்தை, இரண்டாவது பந்தமாகப் பூசவேண்டும். இது 3 விதமாகும்.

பிறகு அந்த கல்கத்தில் 2 பங்கு பிசின் ஜலத்தை வார்த்து, நன்கு மர்தித்து அந்த கல்கத்தை மூன்றாவது கல்கமாகப் பூசவேண்டும். இவ்விதமாக மூன்று விதமாக மிருத்லேபனம் கூறப்பட்டிருக்கிறது. (28)

இந்த 3 விதமான மண் பூச்சுகளையும் செய்யும்பொழுது

ஶதம் ஶதாயுகாத்ரம் வா ஶோஷணம் காரயேத்
பு⁴த⁴꞉ ॥௨௯॥

கூர்சா வர்ஜ (தா)கூர்த்த(வ்ருத்தி)வைஷ்ணவம்
வேஷயேத்(தாதத்) ।

ஸப்தமாத்ரம் ஸம்பூர்ணம் ஶோஷணம் ஸ்ரீ
வ(ரு)க்ஷயேத் ॥ ௩0 ॥

பஹுஶ꞉ ஶ்ருதிஸம்வக்ஷ கூர்சாஜ்ஞா
நிர்ணயம் ।

வஸ்த்ராச்ச(ஸ்ர)ஜலேநைவ படாச்சாதநம்
ஶோஜயேத் ॥௩௧॥

புத்திமானாக இருப்பவன், ஏற்றத் தாழ்வு இல்லாமல் அங்கங்களுக்கேற்றபடி நேர்மையாகவும் இடுக்குகள் விழாமலும் நன்கு பார்த்துப் பூசவேண்டும். பின்பு அதை ஒருமாதகாலமோ, அல்லது ஒன்றரை மாதமோ, நன்கு காயும்படி வைத்திருக்கவேண்டும். அதன் பிறகும் அதில் ஏதாவது சீர்திருத்தம் செய்யவேண்டியிருந்தால், அப்பொழுது, மண்ணை அம்மியில் நன்கு அரைத்து, குற்றம் குறையில்லாமல் பார்த்து அவசியமான அளவுக்கு, அந்த மண்ணைப்பூசி, அங்கங்களின் அளவுகளை ஸரிபார்த்துக் கொள்ளவேண்டும். இவ்விதமாக பல முறைகள் அங்கம், உபாங்கம் முதலியவைகளை நிர்ணயித்துப் பார்த்துக் கொள்ளவேண்டும்.

அதன் பிறகு, முன்புகூறிய ஸ்ருவ ஜலத்திலே படாச்சாதநம் செய்யவேண்டும் (5 பங்கு ஜலம் விட்ட கல்கம் ஸ்ருவம். அதில் புதிய துணியை நன்கு நனைத்து, அல்லது, அந்த கல்கத்தைப் புதுத்துணியில் நன்கு பூசி, அந்தத் துணியைச்சுற்றி பிம்பத்தின் மீது ஒட்டவேண்டும்.)

𑌤𑌦𑍂𑌰𑍍𑌧𑍍𑌵𑌂 𑌕𑌲𑍍𑌕𑌾𑌲𑌿𑌪𑍍𑌤𑌪𑍍𑌰𑌶𑍋𑌷𑍍𑌯𑌂 𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌤𑍍
𑌶𑍋𑌷𑌯𑍇𑌤𑍍 ।
𑌯𑍋𑌗𑍍𑌯𑌾𑌨𑌿 𑌤𑌦𑍂𑌰𑍍𑌧𑍍𑌵𑌂 𑌤𑍁 𑌯𑍋𑌗𑍍𑌯𑌮𑍇(𑌯𑍇𑌤𑍍)𑌭𑍂𑌷𑌣𑌾
𑌨𑌿 𑌤𑌥𑌾 ॥ ௧௨ ॥

𑌸𑌨𑍍𑌧𑍀𑌨𑌾𑌂 𑌲𑍇𑌪𑌂 𑌪𑍍𑌰𑌲𑌿𑌪𑍍𑌯𑌾𑌥 𑌶𑍁𑌭𑍍𑌰𑍇𑌣
𑌲𑌿𑌪𑍍𑌯𑌤𑍇 ॥ ௧௩ ॥

𑌇𑌤𑌿 𑌸𑌾𑌰𑌸𑍍𑌵𑌤𑍀𑌯𑍇 𑌚𑌿𑌤𑍍𑌰𑌕𑌰𑍍𑌮𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇 𑌮𑍃𑌤𑍍𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌵𑌿𑌧𑌿
𑌰𑍍𑌨𑌾𑌮 𑌤𑍍𑌰𑌿𑌚𑌤𑍍𑌵𑌾𑌰𑌿𑌂𑌶𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 𑌸𑌮𑌾𑌪𑍍𑌤𑌃 ॥

அதற்குமேலே, கல்கத்தைப் பூசிக் காயவைக்க வேண்டும்.

அதன்மேலே அங்கங்களுக்கு ஏற்ற ஆபரணங்களை அமைத்து கல்பிக்கவேண்டும். பிறகு, அந்த ஆபரணங்கள் பெயர்ந்து விழுந்துவிடாமலிருக்கும்படி அவைகளின் ஒட்டு வாய்களை கல்கத்தால் பூசவேண்டும். பிறகு அதன்மேலே வெள்ளை பூசவேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது.

ஸாரஸ்வதீய சித்ரகர்ம சாஸ்திரத்தில் ம்ருத் ஸம்ஸ்காரவிதி என்னும் நாற்பத்திமூன்றாவது அத்தியாயம் முற்றும்.

॥ 𑌅𑌥 𑌚𑌤𑍁𑌶𑍍𑌚𑌤𑍍𑌵𑌾𑌰𑌿𑌂𑌶𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ॥

𑌵𑌰𑍍𑌣𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌵𑌿𑌧𑌿𑌃 ॥

𑌅𑌥 𑌵𑌰𑍍𑌣𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌸𑍍𑌯 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑍇 𑌵𑌿𑌧𑌿𑌨𑌾𑌽𑌧𑍁𑌨𑌾 ।
𑌸𑌿𑌤(𑌃) 𑌪𑍀𑌤𑍋𑌽𑌰𑍁𑌣𑌃 𑌕𑍃𑌷𑍍𑌣𑌃 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍇𑌕𑌂 𑌵𑍇𑌦𑌭𑍇𑌦𑌕𑌃 ॥ ௧ ॥

𑌵𑌰𑍍𑌣𑍇 𑌚𑍈𑌕𑍇 𑌚𑌤𑍁𑌰𑍍𑌭𑍇𑌦𑌃 𑌶𑍍𑌵𑍇𑌤𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌶𑍍𑌰𑍂𑌯𑌂 𑌶𑍍𑌰𑍂𑌯𑌤𑌾𑌂 ।
𑌮𑍁𑌕𑍍𑌤𑌾𑌶𑍍𑌵𑍇𑌤𑌂 𑌚 𑌪𑌾𑌷𑌾𑌣𑌂 𑌶𑌂𑌖(𑌂 𑌚) 𑌶𑌾𑌰𑍍𑌕𑌰𑌂 𑌸𑌿𑌤𑌂 ॥ ௨ ॥

𑌹𑌰𑌿𑌤𑌾𑌲𑌂 𑌚 𑌕𑍁𑌙𑍍𑌕𑍁𑌷𑍍𑌠𑌂 𑌦𑍃𑌷𑌂(𑌷𑌤𑍍) 𑌸𑌾𑌰𑌂 𑌪𑌹𑍀𑌚𑌿(𑌪𑍀𑌤)𑌕𑌂 ।

நாற்பத்திநான்காவது அத்தியாயம்.

வர்ணஸம்ஸ்காரவிதி.

இனி வர்ணஸம்ஸ்காரத்தை விதியுடன் கூறுகிறேன். வர்ணமானது, (வர்ணம்-நிறம்) வெளுப்பு 1, மஞ்சள் 2, சிவப்பு 3, கறுப்பு 4, என்று நான்குவிதமாகும். இவைகளில் ஒவ்வொன்றும் நான்குவிதமாகும்.

முக்தாசுவேதம் (முத்துபோன்ற வெளுப்பு) 1, பாஷாணம், (வெள்ளைக்கல் அல்லது வெள்ளைப்பாஷாணம் போன்ற வெளுப்பு)2 சங்கம் (சங்கைப்போன்ற வெளுப்பு)3, ஸிதசார்கரம் (வெண்மையான மணல் அல்லது கூழாங்கல்லைப்போன்ற வெளுப்பு)4, என்று வெள்ளைநிறமானது 4 விதமாகும். (2)

ஹரிதாளம் (அரிதாளத்தைப்போன்ற நிறம்) 1, குங்குஷம் (கோஷ்டத்தைப்போன்ற நிறம்) 2, திருஷத்ஸாரம் (கல் மதத்தைப்போன்ற நிறம்) 3, பீதம் 4, என்று மஞ்சள் நிறம் 4 விதமாகும்.

𑌗𑍁𑌗𑍍𑌗𑍁𑌲𑌂(𑌗𑍁𑌗𑍍𑌗𑍁𑌲𑍁𑌂)𑌲𑌾𑌕𑍍𑌷𑌾𑌸𑌾𑌰𑌂 𑌚 𑌤𑍁𑌰𑍁𑌷𑍍𑌕𑌸𑌾𑌰𑌂
𑌹(𑌹𑌿)𑌰𑌕𑍍𑌤𑌕𑌂 ॥ ௩ ॥

𑌶𑍍𑌯𑌾𑌮𑌪𑌾𑌷𑌾𑌣𑌂(𑌣𑌕𑌂) 𑌶𑍍𑌯𑌾𑌮𑌂 𑌰𑌾𑌜𑌾𑌵𑌰𑍍𑌤𑌸𑍍𑌯
𑌵𑌰𑍍𑌣𑌕𑌂 |
𑌨𑍀𑌲𑌂 𑌮𑍇𑌘𑌜𑌂 𑌚 𑌭𑍍𑌰𑌮𑌰𑌜𑌂 𑌕𑍃𑌷𑍍𑌣𑌵𑌰𑍍𑌣𑌕𑌂 ॥ ௪ ॥
[𑌨𑍀𑌲𑌂 𑌜𑌲𑌦𑌵𑌰𑍍𑌣𑌾𑌭𑌂 𑌭𑍍𑌰𑌾𑌮𑌰𑌂 𑌕𑍃𑌷𑍍𑌣𑌵𑌰𑍍𑌣𑌕𑌂 ॥]

𑌏𑌵𑌂 𑌸𑍍𑌵𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌤(𑌵𑌤𑌃) 𑌵𑌰𑍍𑌣𑌾𑌃 𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌂
(𑌰𑌾𑌤𑍍) 𑌬𑌹𑍁𑌧𑌾 𑌵𑌿𑌦𑍁𑌃 |
𑌲𑍋𑌕𑍇 𑌯𑌥𑌾𑌯𑌥𑌾𑌵𑌰𑍍𑌣𑌂 𑌯𑍋𑌜𑌯𑍇𑌦𑍍𑌵𑌰𑍍𑌣𑌯𑍇𑌤𑍍𑌤𑌤𑌃 ॥

குக்குலம் (குக்கில்) 1, லாக்ஷாஸாரம் (செம்பஞ்சுக் குழம்பு அல்லது ஜலத்துடன் காச்சின அரக்கின் நிறம்) 2, திருஷ்க்ஸாரம் (கல் மதத்தின் நிறம்) 3, ரக்தம் 4, என்று சிவப்பு நிறம் 4 விதமாகும். (3)

சியாம பாஷாண சியாமம் (பச்சை நிறமான பாஷாணத்தைப்போன்ற பச்சை நிறம்) 1, ராஜாவர்த சூர்ணம் (ராஜாவர்த்தம் என்ற பாஷாணத்தின் நிறம்) 2, மேகத்தைப்போன்ற நீல நிறம் 3, பிரமர கிருஷ்ணம் (கருங்குளவியின் சிறகைப்போன்ற கருப்பு நிறம்) 4, என்று கருப்பு நிறம் 4 விதமாகும் (4)

இந்த நிறங்கள் இயற்கையாகவே காணப்படும் நிறங்களாகும். இவைகள், ஸம்ஸ்காரத்தினாலே (ஒன்றோடு ஒன்று கலக்கப்படும் முறைகளாலே) பற்பல நிறங்களாக ஆகின்றன, என்று அறிவாளிகள் கூறுகிறார்கள்.

உலகத்தில், எந்த எந்த வஸ்துவானது எந்த எந்த நிறத்தில் காணப்படுகிறதோ, அந்த அந்த வஸ்துவை, அந்த அந்த நிறத்திலேயே கல்பிக்கவேண்டும். ஆகவே (முதலில்) வஸ்துக்களுக்கு ஏற்ற நிறங்களைக் கல்பித்துக் கொள்ளவேண்டும், (5)

... ... நஹிஜ்ஞாத்வா வா க்ஷஸம்ஶ்லிநா |
ஶ்லக்ஷ்ணிதம் ஶ்வேதம்ருத்(ஸ்ருஷ்டம்)த்தம் வா பாஷாண
ஜம் ஶங்கம் ॥ ௬ ॥

ஶார(ஶாரம்)வம் வா ஜலபாஷேஷு பத்ரம் ஸேகம்
(ஸேகம்) ஹி தத்ஸமம் |
வர்ணாநாம் பந்தயேத் ஶ்ரேஷ்ட (காந்திம்) கபித்த
நிர்யாஸகம் வரம் ॥ ௭ ॥

ஶிஷ்டம் வா கோபர்ஷிதே | (போகர்ஷிதே)?
ஏவமாஸாரபாதேஷு போகமாஹிஷமிஷ்யதே |
ஸம்ஸ்ருஷ்டம் (ஸம்ஸ்ருஷ்டிம்) வா ப்ரயோகேஷு கல்பயேத்
தத்ப்ரயோகவித் ॥ ௮ ॥

த்ரவ்யத்ரயம்(த்ரவ்யம்)வேதாயம் வஜ்ராம்ஶக
(ஏகீக்ருத்ய)ப்ரயோஜயேத் |

... ...

(முதலில்) வெண்மையான மண்ணை நன்கு பூசவேண்டும். அல்லது வெள்ளைப் பாஷாணத்தையாவது ஜலத்திலிருந்து எடுத்த சங்கையாவது பூசவேண்டும். இந்த 3 விதமான பூச்சுக்களும் ஸமானமாகவே கூறப்பட்டுள்ளது.

விளாம்பிசினானது, வர்ணங்களின் ஒளியை நன்கு பந்தகம் செய்யும் (குறைவுபடாமல் கட்டுப்படுத்தும்) கோபர் (போகர்) கூறியிருப்பதையாவது கொள்ள வேண்டும்.

இவ்விதமே ஆஸாரபாதத்தில் போகமாஹிஷம் கூறப் பட்டிருக்கிறது. (மிருத்லேபந) முறையை யறிந்தவன் இவைகளை ஒன்றுசேர்த்தும் கல்பிக்கலாம். (கீழே கூறப் பட்ட வெளுப்பு மண், வெள்ளைப் பாஷாணம், சங்கு இம் மூன்றையும் ஒன்றுபடக் கூட்டியும் மிருத்லேபனம்.

நியூாஸீவிஜ்ஞிவஂணாஂ வா தொயவணாயொஜயெத் ||

[விஜ்ஞீவஂணெ தூ நியூாஸதொயம் வணெ
தூ யொஜயெத் |]

ஸிதவஂவஂ ஷுஜிவூாய வஹாத் வாஜ்ஞீ
(விஜ்ஞீஷு)ஷெவ நஷ் |

வதஂஹ(தஂ)யெத் வதஂநாஹெஷை: ஸஂவணெஂஷ
(ஃக்ஷ)ஃகஷுஷெகெ: || ௰ ||

த்ரி நுஜஜநஂ(த்ரிநஜுயெத்) யயாவணஂஸாந கவக
ஸாநஸஂயஂதஷ் |

ஷெஷெ ஷஸிஷ்ஸ(ஸதிஷ)வணெஂந வதஂயெத்
ஸளயஜெ ஊநஜ || ௰௧ ||

கநூாநஂஜஊாமஂாணி நெநஂதூாத் மஂநஂ
யொமதா || ௰௨ ||

[கநூாநூநஂஜஊாமஂாணி நியஂஜூாத் மஂநஂ
யொமத: ||]

(செய்யலாம்) கீழே கூறிய மூன்றையும் முறையே, $3\frac{1}{2}$, $4\frac{1}{2}$, 5, பங்குகளைக் கூட்டி உபயோகிக்கவேண்டும். ($8\frac{1}{2}$)

வர்ணத்தில் (வர்ணம் பூசவேண்டிய விஷயத்தில்) பிண்ட சூர்ணத்தில் பிசின் ஜலத்தைக் கலக்கவேண்டும். முதலில் வெண்மையான வர்ணத்தைப் பூசிவிட்டு, பிறகு மற்ற வர்ணங்களைப் பூசவேண்டும். முறையுடன் வர்ணங்களைக்கூட்டி நல்ல வர்ணங்களை முறையறிந்து கல்பிக்க வேண்டும். வர்ணங்களுடன் வர்ணஸாரம் துவக்ஸாரம் (பிசின் அல்லது அவைகளுக்குக் கூறப்பட்டிருக்கும் மரப் பட்டையின் சாறு) இவைகளைச் சேர்த்து, மூன்று முறை வர்ணங்களைப் பூசவேண்டும்.

(பேரமானது) ஸுதாநிர்மிதமாகவும் வெளுப்பாகவும்

चित्राभिचित्रार्धपटभित्तियुक्तैः
साधवयोगकरणे बहुवर्णविशेषैः |
सारूप्यवर्णगणप्रभेदैः
शिल्पोक्तशोभितकृतं तु विधानयुक्त्या ||१३||

[चित्राय चित्रार्धपटभित्तिषु वर्णयुक्तिः
साधव्ययोगकरणैः बहुवर्णविशेषैः |
सारूप्यकारिवरवर्णगणप्रभेदैः
शिल्पोक्तशोभितकृतं तु विधानयुक्त्या ||]

इति सारस्वतीये चित्रकर्मशास्त्रे वर्णसंस्कारविधि-
र्नाम चतुश्चत्वारिंशोऽध्यायः समाप्तः ||

இருந்தால், அதன்மேலே வெள்ளை வர்ணத்தையே பூச வேண்டும். இங்கு கூறப்படாத மற்றவைகளை குருவினிடத்தில் தெரிந்துகொண்டு அதன்படி உபயோகிக்க வேண்டும். (12)

சித்திரம், அர்த்த சித்திரம், படம், பித்தி இவைகளில் பொருத்தமான வர்ணத்தைத் தீட்டவேண்டும். உத்தம சில்பிகளிடத்திலிருந்து வர்ணங்களைப்பற்றிய விசேஷங்களைக் கற்றுக்கொள்ளவேண்டும். வர்ணங்களை பாகக் கணக்குடன் ஒன்றோடொன்று கூட்டி, பற்பல வர்ணங்களைக் கற்பித்துக்கொள்ளவேண்டும். அந்த வர்ணங்களில், அழகைக் கொடுக்கும் சிறந்த வர்ணங்களினாலே, பிம்பாதிகளுக்கு வர்ணம் கொடுக்கவேண்டும். (13)

ஸாரஸ்வதீய சித்ரகர்மசாஸ்திரத்தில் வர்ணஸம்ஸ்காரவிதி என்னும் நாற்பத்திநான்காவது அத்தியாயம் முற்றும்.

|| 𑌅𑌥 𑌪𑌞𑍍𑌚𑌚𑌤𑍍𑌵𑌾𑌰𑌿𑌂𑌶𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ||

𑌅𑌕𑍍𑌷𑌿𑌮𑍋𑌕𑍍𑌷𑌣𑌵𑌿𑌧𑌿𑌃 ||

𑌸𑌕𑌲𑌾𑌨𑌾𑌂 𑌤𑍁 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑍇𑌽𑌥𑌾𑌕𑍍𑌷𑌿 𑌮𑍋𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 |
𑌵𑌿𑌮𑌾𑌨𑌸𑍍𑌯 𑌪𑍁𑌰𑍋𑌭𑌾𑌗𑍇 𑌮𑌣𑍍𑌡𑌪𑍇 𑌸𑌮𑌲𑌂𑌕𑍃𑌤𑍇 ||௧||

𑌵𑌿𑌤𑌾𑌨𑌧𑍍𑌵𑌜𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑍇 𑌪𑍁𑌷𑍍𑌪𑌦𑌾𑌮𑌾𑌵𑌲𑌮𑍍𑌬𑌿𑌤𑍇 |
𑌤𑌨𑍍𑌮𑌧𑍍𑌯𑍇 𑌧𑌾𑌨𑍍𑌯𑌪𑍀𑌠𑌂 𑌤𑍁 𑌹𑌸𑍍𑌤(𑌂) 𑌹𑌸𑍍𑌤𑌾𑌰𑍍𑌧𑌮𑍇𑌵 𑌵𑌾 || ௨ ||

𑌦𑍍𑌵𑌿𑌹𑌸𑍍𑌤𑌂 𑌵𑌾 𑌚𑌤𑍁𑌰𑌶𑍍𑌰𑌂 𑌹𑌸𑍍𑌤𑌾𑌰𑍍𑌧𑌂 𑌵𑌾 𑌷𑌡𑌙𑍍𑌗𑍁𑌲𑌮𑍍 |
𑌪𑌦𑍍𑌮𑌪𑍀𑌠𑌂 𑌪𑍍𑌰𑌕𑌲𑍍𑌪𑍍𑌯𑍈𑌵 𑌤𑌨𑍍𑌮𑌧𑍍𑌯(𑌂) 𑌬𑌿𑌮𑍍𑌬𑌂 𑌵𑌿𑌨𑍍𑌯𑌸𑍇𑌤𑍍 ||

𑌤𑌾𑌲𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌂(𑌣)𑌯𑍁𑌕𑍍𑌤(𑌃) 𑌨𑌵𑌕𑍋𑌷𑍍𑌠𑌂 𑌸𑌮𑌨𑍍𑌵𑌯𑍇𑌤𑍍 |

நாற்பத்தைந்தாவது அத்தியாயம்.

அக்ஷிமோக்ஷண விதி

ஸகல மூர்த்திகள் எல்லாவற்றிற்கும் அக்ஷிமோக்ஷண விதியைக் கூறுகிறேன்.

விமானத்தின் (தேவாலயத்தின்) முன்பக்கத்திலுள்ள மண்டபத்தை, விமானம், துவஜம், புஷ்பமாலைகளாலே அலங்காரம் செய்து, அந்த மண்டபத்தின் நடுவில், 1, 1½, அல்லது 2, முழம் சதுரத்திற்கு தானியத்தினாலே பீடத்தைக் கல்பிக்கவேண்டும். அந்த பீடத்தின் உயரமானது, 1 அடி அல்லது 6 அங்குலம் இருக்கவேண்டும். அதன் மத்தியில் பத்மபீடத்தைக் கல்பித்து, அதன் மத்தியில் (பிம்பத்தை) வைக்கவேண்டும். தாலப்ரமாணங்களில் ஸமர்த்தனை

𑌕𑍋𑌷𑍍𑌠𑌯𑍋𑌰𑍍𑌮𑌧𑍍𑌯𑍇𑌷𑍍𑌵𑌾𑌸𑍁 (𑌤𑌸𑍍𑌯) 𑌵𑌿𑌨𑍍𑌯𑌸𑍇𑌤𑍍
𑌦𑍇𑌶𑌿𑌕𑍋𑌤𑍍𑌤𑌮𑌃 ॥ ௪ ॥

𑌪𑌦𑍍𑌮𑌰𑌾𑌗𑌂 𑌚 𑌵𑍈𑌡𑍂𑌰𑍍𑌯𑌂 𑌨𑍀𑌲𑌂 𑌮𑌰𑌕𑌤𑌂 𑌤𑌥𑌾 ।
𑌮𑍌𑌕𑍍𑌤𑌿𑌕𑌂 𑌸𑍍𑌫𑌟𑌿𑌕𑌂 𑌚𑍈𑌵 𑌪𑍁𑌷𑍍𑌪𑌰𑌾𑌗𑌂 𑌤𑌥𑍈𑌵 𑌚 ॥

𑌪𑍍𑌰𑌵𑌾𑌲𑌂 𑌵𑌜𑍍𑌰𑌮𑍇𑌤𑍇(𑌷𑍁 𑌤𑌾𑌨𑌿)𑌮(𑌧𑍍𑌯𑍇)𑌷𑍁
𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌤𑍋 𑌨𑍍𑌯𑌸𑍇𑌤𑍍 ।
𑌧𑌾𑌤𑍁𑌂 𑌬𑍀𑌜𑌂 𑌨𑍍𑌯𑌸𑍇𑌤𑍍 𑌪𑌶𑍍𑌚𑌾𑌤𑍍 𑌅𑌞𑍍𑌜𑌨𑌂 𑌹𑌰𑌿
𑌤𑌾𑌲𑌕𑌮𑍍 ॥ ௫ ॥

𑌶𑍍𑌯𑌾𑌮𑌂 𑌮𑌨𑌶𑍍𑌶𑌿𑌲𑌾𑌵𑌿𑌚𑌿𑌤𑍍𑌰𑌰𑌸𑌂 𑌸𑍌𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰𑌗𑍈𑌰𑌿𑌕𑌂 ।
[𑌶𑍍𑌯𑌾𑌮𑌂 𑌮𑌨𑌶𑍍𑌶𑌿𑌲𑌾𑌂 𑌪𑍀𑌤𑌰𑌕𑍍𑌤𑌸𑍌𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰𑌗𑍈𑌰𑌿𑌕𑌮𑍍 ।]*

தேசிகோத்தமன், (அந்த பீடத்தில்) நவகோஷ்டங்களைக் கல்பித்து அந்த கோஷ்டத்தின் மத்திய பதத்தில் (பிம்பத்தை) வைக்கவேண்டும். (4)

பத்மராகம், வைடூரியம், நீலம், மரகதம், முத்து, ஸ்படிகம், புஷ்பராகம், பவழம், வஜ்ரம், இவைகளை நடுவில் வைக்கவேண்டும். தென்பக்கத்தில் தாதுப்பொருளையும், மேற்கில் பீஜத்தையும் (பீஜம்–விதை) வைக்கவேண்டும். அஞ்சநம், (அஞ்சநக்கல்) அரிதாரம், சியாமம் (பச்சை நிறமான தாது) மனோசிலை, மஞ்சள் சிவப்பு நிறமான தாது ஸௌராஷ்டிர கைரிகம் *

---

* 𑌅𑌤𑍍𑌰, 𑌧𑌾𑌤𑍂𑌨𑌞𑍍𑌜𑌨𑌾𑌦𑍀𑌨𑍍 𑌉𑌤𑍍𑌤𑌰𑍇 𑌵𑌿𑌨𑍍𑌯𑌸𑍇𑌤𑍍 𑌸𑍁𑌧𑍀𑌃 । 𑌇𑌤𑌿 𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑌂 𑌯𑍋𑌜𑌨𑍀𑌯𑌮𑌿𑌤𑌿 𑌭𑌾𑌤𑌿 ।

* இந்த இடத்தில், அஞ்சநம் முதலான தாதுக்களை வடதிசையில் வைக்கவேண்டும் என்று சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று தோன்றுகிறது.

மாணிக்க(ம்) விந்யஸேத் ப்ராஜ்ஞ(பூர்வகம்) தேஶிகே(ா)
விதிநா ஸுதீ(:) ॥ ௭ ॥

திலநீவாரமுத்காஶ்ச யவம் ஸர்ஷபகம் ததா ।
ஶ்யாமகஶாலிகுலுத்தாஶ்ச ப்ரியங்குஶ்ச ததைவ ஹி ॥ ௮ ॥

பீஜம் ஸ்வர்ணேந கர்த்தவ்யம் விந்யஸேத் மந்த்ர
பூர்வகம் ।

ரத்நம்(த்நம்) து ஹ்ருதயேநைவ ஶிரோமந்த்ரேண
தாதுகம் ॥ ௯ ॥

கவசேந ஸர்வபீஜாம்ஶ்ச விந்யஸேத் பீடமத்யமே ।
ருஜுத்வம் லம்பஸூத்ரேணாவலோக்ய ஸ்தாபயேத்
ஸுதீ: ॥ ௰ ॥

ஸ்தாபீம்பாஸிம் (பீம்பாஸம்) ஸ்திரம் கூர்சவா ஸ்தாநம் விக்ஷ
(வாந்ந)பூர்ணகே: ?

(இவைகளை வைக்கும்பொழுது) விதியறிந்த புத்திமானான தேசிகனானவன், முதலில் மாணிக்கத்தை வைக்கவேண்டும்.

எள்ளு, நீவாரம், பயறு, யவை, கடுகு, சாமை, சம்பா நெல், கொள்ளு, புங்கன்விதை, இந்த 9 விதைகளையும் தங்கத்தினாலே செய்துவைக்கவேண்டும். கீழே கூறப்பட்டவைகளை மந்திரங்களை ஜபித்து வைக்கவேண்டும். (8½)

ஹிருதய மந்திரத்தினாலே ரத்தினத்தையும், சிரோ மந்திரத்தினாலே தாதுவையும், கவச மந்திரத்தினாலே பீஜங்களையும், பீடத்தின் மத்தியில் வைக்கவேண்டும்.

புத்திமானாக இருப்பவன், லம்ப ஸூத்திரத்தினாலே (மூர்த்தியானது) நேராக இருக்கின்றதா என்று கவனித்துப் பார்த்து வைக்கவேண்டும்.

𑌗𑌨𑍍𑌧𑌚𑌨𑍍𑌦𑌨(𑌗𑍋𑌰𑍋𑌚𑌨𑌾𑌦𑍍𑌯𑍈𑌃) 𑌰𑌤𑍍𑌨𑍈𑌸𑍍𑌤𑍁
𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑍇𑌣𑌾𑌚𑍍𑌛𑌾𑌦𑌯𑍇𑌤𑍍 𑌸𑍁𑌧𑍀𑌃 ॥ ௰௧ ॥

𑌅𑌕𑍍𑌷𑌿𑌮𑍋𑌕𑍍𑌷𑌣𑌨𑌿𑌰𑍍𑌦𑌿𑌷𑍍𑌟𑌦𑌿𑌨𑌪𑍂𑌰𑍍𑌵𑌦𑌿𑌨𑍇 𑌸𑍁𑌧𑍀𑌃 ।
𑌤𑌤𑍍𑌰 𑌸𑍍𑌥𑌾𑌨𑌂 𑌪𑍍𑌰𑌕𑌲𑍍𑌪𑍍𑌯𑍈𑌵 𑌪𑍂𑌰𑍍𑌵𑍋𑌕𑍍𑌤𑌸𑍍𑌥𑌾𑌨𑌦𑍇𑌶𑍇
𑌶𑌾𑌯𑌯𑍇𑌤𑍍(𑌶𑌯𑍇𑌤𑍍) ॥ ௰௨ ॥

𑌪𑍂𑌰𑍍𑌵𑌵𑌾𑌕𑍍𑌯𑌾(𑌵𑌚𑌸𑌾)𑌨𑍍 𑌪𑍀𑌠𑍇 𑌤𑍁 𑌦𑍇𑌵𑌦𑍇𑌵𑌂
(𑌦𑍇𑌵𑍀𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌂) 𑌨𑍍𑌯𑌾𑌸𑌯𑍇𑌤𑍍 ।
𑌦𑍇𑌵𑌸𑍍𑌯 𑌵𑌾𑌮𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑍇 𑌤𑍁 𑌵𑌾𑌮(𑌦𑍇𑌵𑍀)𑌪𑍀𑌠𑌂
𑌪𑍁(𑌪𑍂)𑌰𑍋𑌕𑍍𑌤𑌵𑌤𑍍 ॥ ௰௩ ॥

𑌉𑌪𑌪𑍀𑌠𑌵𑌦𑍍(𑌦𑍇)𑌵𑌾𑌪𑌿 𑌪𑍀𑌠𑌂 𑌸𑍍𑌥𑌣𑍍𑌡𑌿𑌲(𑌸𑍍𑌥𑌣𑍍𑌡𑌿𑌲𑍇)
𑌏𑌵𑌵𑌾 ।
𑌤𑌤𑍍𑌸𑍍𑌥𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 𑌪𑍃𑌥𑌕𑍍 𑌬𑌲𑌿𑌂 𑌦𑌦𑍍𑌯𑌾(𑌦𑍍𑌯𑌾𑌤𑍍)
𑌯𑌥𑌾𑌵𑌿𑌧𑌿 ॥ ௰௪ ॥

மூர்த்தியை பீடத்தில் உறுதியாகக்கட்டி வாஸனைச் சந்தனத்தினாலே திருமஞ்சனம் செய்யவேண்டும். (கோரோசனை முதலியவைகள்) ரத்தினங்களுடன் வஸ்திரத்தினாலே (மூர்த்தியை) போற்றவேண்டும். (11)

புத்திமானான (சில்பியானவன்) அக்ஷிமோக்ஷணத்திற்காகக் குறிப்பிட்ட தினத்திற்கு முதல்நாள், முன் குறிப்பிட்ட இடத்திலேயே வைக்கவேண்டும். முன்பு கூறியதுபோலவே தேவதேவனை (தேவீமூர்த்தியை) தானிய பீடத்தில் வைக்கவேண்டும். தேவீ பீடமானது தேவேசனுடைய இடது பக்கத்தில் முன்பு கூறியது போலவே இருக்கவேண்டும். அந்த பீடமானது, உபபீடத்தைப் போலவாவது, ஸ்தண்டிலமாகவாவது (ஸ்தண்டிலம்—பூமி) இருப்பதாகும்.

சந்தோஷமான மனதுடன், நெய் கலந்த அன்னத்தை, பக்கங்களிலுள்ள பூதங்களுக்குத் தனித்தனியே, அவை

[illegible] ॥ ௰௫ ॥

[illegible] ॥ ௰௬ ॥

[illegible] ॥ ௰௭ ॥

[illegible] ॥ ௰௮ ॥

[illegible] ।

களின் பெயரைச் சொல்லி பலி கொடுக்கவேண்டும். (15)

(பிறகு) புதிய வஸ்திரம் ஒன்றை எடுத்து, அதை உத்தரீயமாகப்போர்த்தி, அமைதியான மனதுடன், இரவு தூங்கவேண்டும். (15½)

சில்பியானவன், காலையில் ஸ்நானம் செய்து, பஞ்சாங்க பூஷணங்களை தரித்துக்கொண்டு, (பிம்பத்திற்கு) ஸுவர்ண யஜ்ஞோபவீதமும் வெண்பட்டாடையும் அணிந்து, கலசத்தில் வைக்கப்பட்டிருக்கும் ஜலத்தினாலே அபிஷேகம்செய்து, சந்தநம் சாத்தி, (பிறகு) மங்களகரமான கீதநிருத்த வாத்தியங்கள் முழங்க, ஸுவர்ண ஊசியினாலே மூன்று கண்களையும் எழுதவேண்டும். அதன் பிறகு, கூர்மையான ஆயுதத்தினாலே நேத்திரமண்டலம் மூன்றையும் கல்பிக்கவேண்டும்.

வர்ணா யத்ர ஸ்திதா(ஸ்திதாநி) தத்ர ஸௌவர்ண கநகா(ஶலாகயா)
ஹேமஜம் கல்பயேத் ॥ ௧௯ ॥

மஷீபாத்ரம் து ஸௌவர்ண(ர்ணம்) ருஷிகும்போதகேந வா(ச) ।
ஆலோட்ய(ஆலோட்ய) ஸர்வநாயேஶம் ஜப்த்வா தேவேஶம்
ப்ரபூஜயேத் ॥ ௨௰ ॥

பூஜ்யாநுஜ்ஞயா சந்த்ரஸூர்யாக்நிமத்யமோ ।
[ஸம்பூஜ்யாநுஜ்ஞயா சந்த்ர: வாமதக்ஷிணமத்யமா: ।]
ஸம்ஸ்ம்ருத்யாக்நிபீஜேந நேத்ரேண உந்மீலா பூர்வது ॥௨௧॥

சந்த்ரஸம்பூர்ணநேத்ரம் ஸாக்ஷிதக(க்ஷதைஸ்ஸ)
ஸமந்விதம் ।
ஸர்வம்(ஸ)த்ரவ்யம் புரஸ்தஸ்ய ஸர்வம் தர்ஶய
தய:(த:) பரம் ॥ ௨௨ ॥

வர்ணங்கள் தீட்டப்பட்டபேரமாக இருந்தால், அதன் நேத்திரமண்டலத்தை, ஸ்வர்ணத்தினாலேயே கல்பிக்கவேண்டும் (ஸ்வர்ண ஊசியினாலேயே கல்பிக்கவேண்டும். அல்லது ஸ்வர்ண வர்ணத்தினாலே கல்பிக்கவேண்டும்)

ஸ்வர்ண வர்ணத்தையும் மஷீ பாத்திரத்தையும் (மஷீ வர்ணத்தையும்) ருஷி கும்பத்திலிருக்கும் ஜலத்தை விட்டுக் கலக்கி, (மூல மந்திரத்தை அல்லது உசிதமான மந்திரத்தை) ஜபித்து, ஸகல புவநங்களுக்கும் நாயகனான தேவேசனை பூஜிக்கவேண்டும். (20)

அவ்விதம் பூஜித்து அநுமதி பெற்றுக்கொண்டு, சந்திரபீஜம், சூரியபீஜம், அக்கினிபீஜம், இவைகளை மனதில் ஸ்மரித்துக்கொண்டு, வலதுகண், இடதுகண், நெற்றிக் கண்களைத் திறக்கவேண்டும். இவ்விதமாகக் கண்களைத் திறந்து, அதன் முன்னிலையில் அக்ஷதையுடன் பிரியகரமான ஸகல வஸ்துக்களையும், முதலில் பார்க்கும்படி வைக்க

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

வேண்டும். (பாயஸம் தேங்காய், பழங்கள், தாம்பூலம், புஷ்பங்கள், சந்தநம், தீபம், ஸுவர்ணம், பூர்ணகும்பம், அக்ஷதை யமுதலிவைகளை முன்னிலையில் முதலில் பார்வையில் விழும்படி வைத்திருக்கவேண்டும் என்பது பொருள்.)

அதன்பிறகு தேன், பால், இவைகளை வைக்கவேண்டும் (அதன்பிறகு) நெற்குவியல், பசு, பிராம்ஹணர்களைப் பார்க்கும்படி செய்யவேண்டும்.

அதன்பிறகு யஜமானன், சிறந்த பக்தர்களோடு கூடி, பகவானை ஸ்தோத்திரரத்தினத்தினாலே துதிக்கவேண்டும்.

பிறகு ஹே நிரஞ்ஜந, (மாசற்ற பரமேசுவர) இக்குலத்தைக் காப்பதற்காகவும், ஸகலவிதமான துன்பங்களையும் போக்குவதற்காகவும் (தாங்கள் கருணையுடன்) வந்து, இந்த பிம்பத்தில் ஸாந்நித்யம் செய்யவேண்டும் (நிலைத்திருக்கவேண்டும்) என்று வேண்டிக்கொள்ள வேண்டும். (24)

பிறகு யஜமானன், பிராம்ஹணர்களிடமிருந்து ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

[illegible]
[illegible] ॥ உரு ॥

[illegible]
[illegible] ।

[illegible]
[illegible] ॥ உசு ॥

[illegible]
[illegible] ।

[illegible]
[illegible] ॥ உஎ ॥

[illegible]
[illegible] ।

பிராமணர்கள், ஹே ப்ரபோ! பரம பக்தனுன இந்த யஜமானனுடைய மனதானது, தங்களுடைய பாதாரவிந்தங்களில் ஈடுபட்டிருக்கிறது. ஆகையால், எப்பொழுதும் இந்த பிம்பத்தில் ஸாந்நித்யம் செய்துகொண்டு இன்றுமுதல் இவன் சக்திபனுஸாரமாகச் செய்துவரும் பூஜையை ஏற்றுக்கொண்டு, எப்பொழுதும் இவனுக்கு அநுகூலங்களைச் செய்துவரவேண்டும் என்று ஆசீர்வாதம் செய்யவேண்டும்.

அதற்குப்பிறகு, யஜமானன், ஸர்வ மங்களங்களை கொடுக்கும் ஹே பரமேசுவர, இரங்கத்தக்கவனைக்காக்கும் குணமுடைய ஹே பிரபோ, தங்களை வணங்குகிறேன். தங்களைப் பூஜைசெய்ய யார் ஸமர்த்தன். (ஆயினும் நான் தங்களை) பக்தியினுலே பூஜை செய்கிறேன். என்னை தயவு செய்து காக்கவேண்டும் என்று பரமேசுவரனை பிரார்த்தித்து நமஸ்காரம் செய்யவேண்டும்.

[illegible] ‖ ௨அ ‖

[illegible]

[illegible] ‖

[illegible] ‖]

[illegible] ‖

[illegible] ‖]

[illegible]

ஸ்தபதியானவன், பூஜை செய்வதற்கு யோக்கியமாக, ஸம்பூர்ணமாகக் கல்பிக்கப்பட்ட மூர்த்தியை யஜமானனிடம் கொடுக்கவேண்டும். (28)

பிறகு சிஷ்யனுடைய யஜமானன், ஆசார்யனோடு சேர்ந்து, அந்த மூர்த்தியை விதியோடு பூஜித்துவரவேண்டும்.

அக்ஷிமோக்ஷணம் செய்தவுடன், கன்றுடன் கூடிய பசுவையும், வஸ்திரங்களையும், ஸுவர்ணங்களையும், ரத்நங்களையும், ஆபரணங்களையும், பூமியையும் (ஆசார்யன் ஸ்தபதி இவர்களுக்கு) கொடுக்கவேண்டும்.

தாஸீ தாஸர்கள், சில்பிகள், முதலியவர்களுக்கும், மனமுவந்து, (வஸ்திரம், பூஷணம் முதலியவைகளைக்) கொடுக்கவேண்டும்.

யஜமானன் ஆசார்யனுக்கு இருமடங்கு திரவியங்களைக்கொடுக்கவேண்டும்.

ஆசார்யஸ்தபதி:(தி) பூஜாநாம் தாநபலம் ஸமம் ||

*யஜமாநஸ்த்யாம்சம்சம் ஸமவாப்நும் ப்ரியா உதம் |
ஸ்தபதியஜமாநஸ்ய ஸ்தாபகஸ்ய த்ரிமூர்த்திகம் (தயம்:) ||

ஏதே(ஷாம்) கார்ய: க்ரியா பிந்நா: தஸ்மாத் தத்ர
ஸம்பூர்ணதாம் |
ஸ்தபதிராசார்யயோஸ் ஸ்வகர்மபலம் ஆதிசேத் ||௩௩||
[ஸ்தபதிஸ்த்வாசார்ய: கர்மப்ரதமஸ்வாமியேச் பலம்|]

யஜமாநம்(நா) ஸம்பூர்ணம் ஸ்வஹஸ்த:(ஸம்பூர்வ:)
ஸ்தாபக(கௌ) ப்ரஹா: |
ஸ்வகர்மகர்மபலம் சைவ பாத்ரவேத்ரவிசேத் ||௩௪||

ஆசார்யன், ஸ்தபதி, இவர்களுக்குச் செய்யும் தானரூபமான தர்மமானது ஸமானமான பலத்தையே கொடுப்பதாகும். (31)

(தேவாலய பிரதிஷ்டையில்) யஜமானன் ஒரு பாகமென்றும், ஸ்தபதி, ஆசார்யன் இவ்விருவர்களும் இரண்டு பாகமென்றும் கூறப்பட்டிருக்கிறது. ஸ்தபதி, யஜமானன், ஆசார்யன் இவர்கள் மூன்று மூர்த்திகளாவார்கள். இவர்களின் காரியங்கள், வெவ்வேறாகும். ஆகவே, அதன் ஸம்பூர்ணமான பலனை அடையும்பொருட்டு யஜமானன், சில்பி—ஆசார்யன் இவ்விருவர்களிடத்தினின்றும், அவர்களின் கர்மபலனைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

ஸ்தபதி, ஆசார்யன், இருவரும், தாங்கள்செய்த கர்மபலனை யஜமானனுடைய கையில் (தாராபூர்வமாக) கொடுத்துவிடவேண்டும்,

இவ்விதமாக தேவாலய ஸ்தாபநபலத்தை ஸம்பூர்ண

---

*யஜமாநஸ்யைகாம்சம் ஸ்யாத் த்வ்யம்சம் சில்பியாசார்யயோ: | இதி பாட: ஸம்மத: ஸ்யாதிதி பாதி |

𑌸𑌰𑍍𑌵𑌂 𑌸𑌂𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾 𑌚 𑌸𑍂𑌰𑍍𑌯𑌾𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌮𑌸𑍌 𑌯𑌥𑌾 ||௩௫||

[𑌹𑍍𑌰𑍀𑌂 𑌶𑍍𑌰𑍀𑌂 𑌚 𑌲𑌭𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍 𑌸𑌰𑍍𑌵𑌸𑌮𑍍𑌪𑌦𑌾𑌨𑍍 |
𑌸𑌰𑍍𑌵𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌂 𑌯𑌾𑌵𑌤𑍍 𑌸𑍂𑌰𑍍𑌯𑌾𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌮𑌸𑍌 𑌯𑌥𑌾 ||]

𑌇𑌤𑌿 𑌸𑌾𑌰𑌸𑍍𑌵𑌤𑍀𑌯𑍇 𑌚𑌿𑌤𑍍𑌰𑌕𑌰𑍍𑌮𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇 𑌅𑌕𑍍𑌷𑌿𑌮𑍋𑌕𑍍𑌷𑌣𑌵𑌿𑌧𑌿𑌰𑍍𑌨𑌾𑌮
𑌪𑌞𑍍𑌚𑌚𑌤𑍍𑌵𑌾𑌰𑌿𑌂𑌶𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 𑌸𑌮𑌾𑌪𑍍𑌤𑌃 ||

மாக அடைந்த யஜமானன், ஐஹிக ஆமுஷ்மிக ஸகல போக பாக்கியங்களையும், புத்திர பௌத்திர ஸமிருத்தியையும், அடைந்து பரமாநந்த பரிதனுக ஆகிருன். ஆயுஸ்ஸையும் ஆரோக்கியத்தையும் அடைகிருன்.

ஆகையால், செல்வம் படைத்தவர்கள் இவ்விதமாக தேவாலய நிர்மாணம்செய்து தேவதாபிரதிஷ்டையையும் செய்யவேண்டும். (35)

ஸாரஸ்வதீய சித்திரகர்ம சாஸ்திரத்தில் அக்ஷிமோக்ஷணவிதி என்னும் நாற்பத்தைந்தாவது அத்தியாயம் முற்றும்.

‖ 𑌅𑌥 𑌷𑌟𑍍𑌚𑌤𑍍𑌵𑌾𑌰𑌿𑌂𑌶𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ‖

𑌜𑍀𑌰𑍍𑌣𑍋𑌦𑍍𑌧𑌾𑌰𑌵𑌿𑌧𑌿𑌃 ‖

[𑌜𑍀𑌰𑍍𑌣𑍋𑌦𑍍𑌧𑌾𑌰𑌵𑌿𑌧𑌿𑌂 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑍇 𑌬𑍇𑌰𑌾𑌦𑍀𑌨𑌾𑌂
𑌯𑌥𑍋𑌦𑌿𑌤𑌮𑍍 ।]

𑌅𑌥𑌾𑌤𑍋 𑌜𑍀𑌰𑍍𑌣𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌂 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 (𑌹𑌸𑍍𑌤𑌾) 𑌸𑍍𑌤(𑌂)
𑌬𑍇𑌰𑌾𑌣𑌾𑌂 (𑌰𑌂𑌤𑍁) 𑌵𑌿𑌧𑌿𑌂 𑌬𑍍𑌰𑍁𑌵𑍇 ।
𑌕𑌾𑌯𑌾𑌨𑍁𑌕𑌾𑌯𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌙𑍍𑌗𑌜𑍀𑌰𑍍𑌣𑌸𑌨𑍍𑌧𑌾𑌨𑌭𑌗𑍍𑌨𑌾𑌨𑌾𑌂 𑌤𑍁
𑌪𑍁𑌨𑌃𑌕𑍍𑌰𑌿𑌯𑌾 ‖௧‖

[𑌕𑌾𑌯𑌾𑌨𑍁𑌕𑌾𑌯𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌙𑍍𑌗𑌭𑍇𑌦𑌾𑌙𑍍𑌗𑌂 𑌤𑍍𑌰𑌿𑌧𑌾 𑌸𑍍𑌮𑍃𑌤𑌮𑍍 ।
𑌜𑍀𑌰𑍍𑌣𑌂 𑌭𑍁𑌗𑍍𑌨𑌂 𑌚 𑌭𑌗𑍍𑌨𑌂 𑌚 𑌸𑌨𑍍𑌧𑌾𑌨𑌂 𑌚 𑌪𑍁𑌨𑌃
𑌕𑍍𑌰𑌿𑌯𑌾 ‖]

𑌅𑌸𑍍𑌥𑌿𑌰𑌰𑌤𑍍𑌨𑌪𑍍𑌰𑌤𑌿𑌮𑌾𑌣𑌿(𑌣𑌾𑌂) 𑌸𑍍𑌥𑌿𑌰𑌰𑌤𑍍𑌨𑌪𑍍𑌰𑌪𑍂𑌰
𑌯𑍁𑌤𑌂(𑌯𑍁𑌤𑌂 𑌪𑍁𑌰𑌂) ।

நாற்பத்தாருவது அத்தியாயம்.

ஜீர்ணோத்தாரவிதி

[இனி பிம்பங்களின் ஜீர்ணோத்தாரவிதியைக் கூறுகிறேன்]

பிம்பமானது, ஜீர்ணம், பக்நம் என்று இரண்டு விதமாகும். (ஜீர்ணம்-தேய்ந்து சிறுத்துப்போனது, பக்நம்—முறிந்து அல்லது வளைந்து சீர்கெட்டது)

அங்கமானது, காயம், அநுகாயம் (முக்யாங்கம் உபாங்கம்) பிரத்தியங்கம் என்று 3 விதமாகும்.

ஸந்தாநமானது, ஜீர்ணஸந்தாநம், புக்நஸந்தாநம், பக்நஸந்தாநம் என்று 3 விதமாகும். (1)

[ஜீர்ணம்-சிறுத்துப்போனது. புக்நம்-நெளிந்து அல்லது வளைந்துபோனது. பக்நம்-முறிந்துபோனது. ஸந்தாநம்-ஒட்டவைத்துச் செப்பனிடுவது.]

வஂிவ௴வ ஜாவஸிகஜூயெஷ ஊ ஙஞூ ஸ ஸௌாஸ ஙு ॥

ஹீ ஙாயிகஹாவெங கதுஜுஹதுஜுவி ஙஸூதி ।

[வஂிவ௴வஷ கஜூயெஙாஙஂ துஙாஙஂ ஸூாஷ

ஸஸௌாஸஙு ॥

ஹீ ஙாயிகெங ஊநெங கதுா ஹதுா வி ஙஸூதி ।]

ஶிஹூாவொ(ஂ)யயா(ஷா) ஜீணஂ துஜூா வஂிவெஜூா

க்ஷகஂ வாஙஃ ॥௧॥

தஷஊவெணு கஜதஂ யாக்ஷஂ ஷ்ரீவாஂஙவாஂஸகஂ

ஹவெஷ ।

வஂிவஊஙாயிகஂ ஹீஙஂ ங கதுவஂ கயஂவங ॥௨॥

பழுதடைந்த பிம்பங்களைச் செப்பனிடும்பொழுது, அஸ்திரமான (நீடித்து நிற்கும் தன்மையற்ற) திரவியங்களாலே நிர்மாணம் செய்வதைக் காட்டிலும் ஸ்திர திரவியங்களாலே (நீடித்துநிற்கும் தன்மைவாய்ந்த திரவியங்களாலே) அவைகளைக் கல்பிப்பது சிறந்ததாகும்.

ஜீர்ணோத்தாரம் செய்யும்பொழுது, பிம்பங்களின் அளவானது, முன்பு இருந்ததுபோலவே கல்பிக்கப்பட வேண்டும். அந்த அளவுதான் மங்களங்களை (நன்மைகளை) கொடுக்கும். (2)

பிம்ப மாநமானது, கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ இருந்தால், அதனால், செய்பவன் செய்விப்பவன் இருவரும் நாசமடைவார்கள்.

சிலையினாலே செய்யப்பட்டிருந்த பேரமானது ஜீர்ணமாகப்போனால் (பழுதடைந்தால் அல்லது பின்னப்பட்டால்) அதை அப்புறப்படுத்திவிட்டு, அது எதனாலே கல்பிக்கப்பட்டிருந்ததோ அதனாலேயே அதைக் கல்பிக்க வேண்டும். அது, ஸ்திரீசிலை, புருஷசிலை, நபும்ஸகசிலை என்று 3 விதமாகும்.

கேசித்த்வதிகம் ஶ்ரேஷ்டம் பூர்வமானாதிநம் கில |
லோஹஜம் ஹி ஜீர்ணம் (ச) பக்னம் (ச) த்விவிதம் பவேத் ||5||

ஜானுனோர்(ச)மேட்ரம் ச ஹ்ருதயம் ச க்ருகாடீ கலம் |
பாஹுமூலம் ச தத்பங்கே ஸந்தானம் புனஃ க்ரியா ||

பூர்வம் த்ரிவர்ஷாணி ஸம்ப்ரோக்ஷ்ய ஸ்தாபிதே ஜலே |
த்ரிவர்ஷாணி த்ரிவர்ஷயோர்மத்யே ப்ரதிஷ்டாவிதிம் விதுஃ ||

பூர்ணே ஸம்யோஜ்ய ஸங்க்ஷாலய பூர்வவத் |

எந்த முகாந்தரத்தைக் கொண்டும், பிம்பங்களின் மானத்தை முன்பு இருந்த மானத்திற்கு, அதிகமாகவோ, குறைவாகவோ, கல்பிக்கக்கூடாது. (4)

சிலர், புதிதாகக் கலபிக்கப்படும் பிம்பமானது முன்பு இருந்த பிம்பத்தைக காட்டிலும் அதிக அளவுடைய தாகவோ, குறைந்த அளவுடையதாகவோ, இருக்கலாம் என்று கூறுகிறுர்கள்.

லோஹத்தினாலே கல்பிக்கப்பட்ட பேரமானது, ஜீர்ணம் என்றும், பக்நம் என்றும் இரண்டுவிதமாகும். (5)

முழங்காலுக்குமேலே, மேட்ரம் (ஆண்குறி) ஹிருதயம், கருத் (பின்பக்கம் அடிக்கழுத்து) கழுத்து, புஜமூலம் இந்த இடங்களின் முறிந்து (அங்கமானது வேறுபட்டால்) விட்டால், அந்த பிம்பத்தை புதிதாகக் கல்பிக்கவேண்டும்,

... ...
... ...
... ...

பஶ்சாத் ஶாந்திஹோமம் ச பூர்வரூபம் ப்ரகல்பயேத் ॥

[மந்த்ரந்யாஸேந ஸம்யோகாத் பூர்வரூபம்
ப்ரகல்பிதே ।
தம் ப்ரஸம்ஸ்காரபூர்வம் து ஶாந்திஹோமம் ஸமா
சரேத் ॥]

ஶிகாஶாகாபாஹுவிச்சேதம் வக்ரஸ்புடயுதம் ।
ஸந்திஸ்திதகரேஷு பூர்வவத்ஸஹிதம் க்ரியா ॥௯॥

[ஶிகாயாம் ஶாகாபாஹௌ வா விச்சேதம் வக்ர
ஸ்புடயுதம் ।
ஸந்திஸ்திதகரேஷு ஸ்தாநே பூர்வவத்ஸந்த க்ரியா ॥]

ஸர்வம் ஜீர்ணம் (ஶ்ச)ஜீர்ணம் ச ஸந்தாநம்(நாத்)
பூர்வவத் க்ரியா ।
த்ருடே(ஹ்ருஷ்டே)வாஹநஸந்தாநம் விபரீதம் விவர்ஜயேத் ॥

(பிம்பமானது தேய்ந்து சீர்குலைந்திருந்தால்) அந்த இடங்களை (தக்க முறையில்) திரவியங்களினாலே செப்பனிட்டு, அந்த பிம்பத்தை பழைய உருவமுடையதாகச் செய்தால், அந்த பிம்பத்திற்கு மந்திர ஸம்ஸாரம் செய்து சாந்திஹோமமும் செய்யவேண்டும். (8)

சிகை, சாகாபாஹு (முக்கியமான 2 கைகள் நீங்கிய மற்ற கிளைக்கைகள்) இதுகளில் முறிந்துபோனது, வளைந்து போனது, அல்லது விரிசல் கண்டது, இவைகள் செப்பனிடக் கூடியவைகளல்ல. அதை செப்பனிட்டு முன்பிருந்ததைப் போலச் செய்யக்கூடாது (9)

(பிம்பமானது) ஜீரணமானாலும், அது உறுதியாக இருந்தால், ஜீரணமான இடத்தைச் செப்பனிட்டு முன்பு இருந்ததைப்போலச் செய்யலாம்.

வாஹநமானது (கால், முதுகுபோன்ற இடங்களில்)

உத்பந்நம் ஸந்நிதிஃ பூர்ணம் ஸுலக்ஷணா ஜ்யோதி
விச்ரியா |

[உத்பந்நபூர்வம் ஸ்திதம் லிங்கம் ஸஜ்யோதிஃ ஸுலக்ஷணா
நிதத் |]

யோக்யம்(வேத்யஸம்ஸ்க்ருத்யம்) புனஃ பூர்வவத் பரி
க்ஷேபயேத் ||௰௧||

விபணீக்ருத்ய வினாசாய வஹ்(ஸ)வ்ர்துஃகவசா
வஹதி(ஃ) |

தஸ்மாத் பரிஹரேத்தீமாந் சாந்திஹோமம் ஸமாசரேத் ||

[காரயித்வா யதாசாஸ்த்ரம் உத்ஸ்ருஜ்ய ஸம்ஸ்தாபயேத் ததஃ |]

ப்ராஹ்மணைஃ ஸஹஸ்ரைஸ்து தேவதானாம்(ததைவ)
புனர்ஜபேத் புனஃ ||௰௨||

முறிந்துவிட்டால், அதை செப்பனிடக்கூடாது. அப்படிச் செய்வது விபரீதச் செயலாகும். அது ஆபத்தை யுண்டுபண்ணும். (10)

மூலஸ்தானத்திலிருக்கும் மூர்த்தியானது பின்னமடைந்து, அது மூர்த்தி ஸாந்நித்யமுடையதாகவும், நல்ல தேஜஸ்ஸோடு கூடியதாகவும், லக்ஷணமாகவும் இருந்தால், பின்னமடைந்த அங்கமானது, நன்கு செப்பனிடக்கூடியதாகவும் இருந்தால், அந்த பிம்பத்தை முன்போலவே செப்பனிட்டு வைத்துக்கொள்வதாகும். (11)

அது செப்பனிடமுடியாததாக இருந்துவிட்டால், அது, அழிவையுண்டுபண்ணும். ஸகலவிதமான துக்கத்தையும் விளைவிக்கும். ஆகையால், அதை பரிஹரித்துவிட்டு (எடுத்து முறைப்படி விஸர்ஜனம் செய்துவிட்டு) தோஷ நிவர்த்திக்காக சாந்திஹோமம் செய்யவேண்டும். (12)

பின்பு, மற்றொரு பிம்பத்தைக் கல்பித்து, அந்த

கர்தவ்யானி யதா ப்ரோக்தா விப்ரகர்த்ருபிரேவ ஹி |
[கர்தவ்யானியோஜித: பண்டிதைஸ்ஸர்வலக்ஷணான்விதம் |]
லக்ஷிதம்(ணம்)லக்ஷணா(ஸம்)யுக்தம் ஸம்க்ஷேபாச்ச
சில்பிபி: கல்ப்யதே(ரீதிம்) ॥ ௰௪ ॥

ஏதச்ச பாத்மம் ப்ரோக்தவ்யம்(ப்ரோக்தம்)
ப்ரஹ்மணா ப்ரோக்திதம்(ப்ரசோதிதா) |
ச்ருத்யர்த்தவத்ஸம்வேத்யம் தத்விருத்தம் ந க்ராஹ்யதே ॥௰௫॥

இதி ஸாரஸ்வதீயே சித்ரகர்மசாஸ்த்ரே ஜீர்ணோத்தார
விதிர்நாம ஷட்சத்வாரிம்சோத்யாய: ஸமாப்த: ॥

ஸாரஸ்வதீய சித்ரகர்மசாஸ்த்ரம் ஸம்பூர்ணம் ॥

விடத்தில் அதை பிரதிஷ்டை செய்யவேண்டும். பக்தி மிகுந்த பிராம்ஹணர்களைக் கொண்டு மறுபடியும், அந்த தேவதைகளைப் பூஜித்துவரும்படி செய்யவேண்டும்.

சில்பியானவன், யஜமானனுடைய வேண்டுகோளுக்கிணங்கி, நல்ல லக்ஷணம் வாய்ந்ததாக மூர்த்தியைக் கல்பித்துக்கொடுக்கவேண்டும். (14)

இவ்விதமாக ஜீர்ணோத்தாரவிதியானது லக்ஷணத்துடன் கூறப்பட்டிருக்கிறது.

பிரம்மதேவர், முன்னொருகாலத்தில் இந்த சாஸ்திரத்தைக்கூறினார்.

இதை வேதத்தின் கருத்தைப்போலக் கருதவேண்டும். இதில் கூறப்படாததைக் கொள்ளக்கூடாது.

ஸாரஸ்வதீய சித்திரகர்ம சாஸ்திரத்தில் ஜீர்ணோத்தாரவிதி என்னும் நாற்பத்தாருவது அத்தியாயம் முற்றும்.

ஸாரஸ்வதீய சித்திரகர்ம சாஸ்திரம் முற்றும்.

॥ സാരസ്വതീയചിത്രകഥാഭാഷ്യസ്യ ശുദ്ധിപത്രം ॥

പുട സംഖ്യാ	ശ്ലോക സംഖ്യാ	അശുദ്ധഃ	ശുദ്ധഃ
14	37	ഉത്തരായണൈഃ	ശ്രീം സുരത്രാ യന്ത്രൈണം അ യോഗ്രിക്കം ഹാത്മാ വാരയോദ്ധാരം പക്ഷം കൃതാൽ ॥ ഇതി പാഠ്യഃ
64	118	5 പാദഃ:	യവം സായം യവം പ്രാപി, ഇതി പാഠ്യഃ
240	6	3 പാദഃ:	ന ത്യാജ്യാ സാമ്പ്രദായികാഃ, ഇതി പാഠ്യഃ;
307	52	ത്രിലോകിമ്പതി	ത്രിലോകപതേ '
307	56	(ലക്ഷ്യത്ര)യ	യ(ത്ര ലക്ഷ്യാ)

61 104–106 ജാനന്നപി ത്രിയാമായാം ഉക്ഷ്യം ഭാവ
ഭിഷ്യാമ്യഹം ।
പൂർവ്വജനാശ്രിതം ഉക്ഷ്യം വാഞ്ഛാമ്യഹം
കഥാന്തരം ॥

ഉക്ഷ്യസ്യ പാദ്യോഹാരം ച പ്രാണിധാനം
പഠിതവ്യം ।
മാർഗ്ഗം ത്വന്തം യഥാ ഉക്ഷ്യസ്യാകാരം
സ്യാത്തദേവ ഹി ॥

കൃഷ്ണേ ഭിന്നം ആരൂഢരൂപിണം ഉക്ഷ
ഹിതം ।
നന്ദകാന്തം ഇതി പഠനീയഃ പാഠഃ

பிழை திருத்தம்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
9	3	யஜமான	இவை, யஜமான
9	15	பெருமனுக	பருபனுக
14	12–15	ருணம் (கடன்) யோனி, நக்ஷத்திரம், வாரம், அம்சம், அதிகம் (ஆதாயம்) க்ஷயம் (விரயம்)	ஆதாயம், விரயம், யோனி, நக்ஷத்திரம், வாரம், அம்சம்,
61	14	உள்ளங்காலின் கனம் 2	அங்கு அதன் கனம் 4½
64	16	அங்குலம்	அங்குலம் (யவை)
67	4	12	120
171	4	தெளி	நெளி
175	9	ஸூத்திரம்	ஸூத்திரம் 1 பிருஷ்ட மத்திய ஸூத்திரம் 1.
240	7	... ...	புஷ்பபாணங்களை கையி லேந்திய ரதிதேவியுடனிருப் பவனுவான்.
240	1	பாகம் என்பது7	அல்லது 7×4=28
280	4	இருபத்தி ஐ	இருபத்தை
285	11	இருபத்தியா	இருபத்தா
307	3	(23)	(13)
308	1	அதிகமாகும்.	குறைவாகும்.
435	11	சண்டிகேச	நந்திகேச
439	5 12	சண்டிகேச	நந்திகேச
440	1	சண்டிகேச	நந்திகேச

பக்கம் 61-ல் வரி 6முதல் 11 வரையில் சேர்க்கவேண்டியது.

பின்பக்கம் முழங்காலுக்குக் கீழ 5 அங்குலமானது,

உயரத்தலையைத் தூக்கியிருக்கும் மத்ஸ்யத்தைப் போன்றதாம். பின்பக்கம் முழங்காலுக்குக்கீழ குதிகால் வரையில் மத்ஸ்யத்தின் வடிவம் போன்றதாகும். அதன் வாலானது குதிகாலில் 2 அங்குல அகலமுடையதாய், குதிகாலின் இரு பக்கங்களிலும் சார்ந்திருப்பதுபோன்ற தோற்றமுடையதாகும். கண்டைக்காலின் பின்பக்கமானது மேல்நோக்கான மத்ஸ்யத்தைப்போல, முறையே பருத்திருப்பதாகும். கணுக்காலானது 8 இதழ்களைப்போன்றிருப்பதாகும் (106)

நளகையின் அகலம் 4½ அங்குலமாகும்.